உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2041 மார்கழி 14 புதன்கிழமை (29.12.2010)UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 033

# விடுவிக்கப்பட்ட போராளிகள் விவரங்கள்

# திரட்டுகிறது இராணுவப் புலனாய்வுப் பிரிவு

## பதற்றம் பீதியால் முன்னாள் புலிகள் தவிப்பு உள்நோக்கம் இல்லை என்கிறார் பேச்சாளர்

கொழும்பு, டிசெம்பர் 29

இராணுவத் தடுப்பு முகாம்களில் வைத்து புனர்வாழ்வு அளிக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்ட முன்னாள் போராளிகளின் விவரங்கள் யாழ்ப் பாணம் மற்றும் வன்னியில் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் திரட்டப் பட்டு வருகின்றன. அதேசமயம் தடுப்பு முகாம்களில் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களிடம் மீண்டும் ஒரு தடவை விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதனால் விடுவிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் மத்தியில் பதற்றமும் பீதியும் ஏற்பட்டுள்ளன. எனினும் இது புனர்வாழ்வு வழங்கியதன் தொடர்ச்சியான நடவடிக்கைதானே தவிர, இதில் உள்நோக்கம் ஏதுமில்லை என்று இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

(02 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்குக் கொலைகள்; கருணா கருத்து

கொழும்பு, டிசெ. 29

வடக்கில் கடந்த சில தினங்களில் இடம்பெற்றுள்ள துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் இருவர் கொல்லப்பட்டுள்ளனர். இது மீண்டும் பயங்கரவாதம் தலைதூக்குவதற்கான ஆரம்பமாகவிருக்கலாம்.

- இப்படி மீள்குடியேற்ற பிரதிய அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

(02 ஆம் பக்கம் பார்க்க)

### பிரதிக் கல்விப்பணிப்பாளர் கொலை:

## பல்வேறு கோணங்களில் விசாரணைகள் நடக்கின்றன என்கின்றார் படைத்தளபதி

யாழ்ப்பாணம், டிசெ.29

உரும்பிராயில் பிரதிக் கல்விப்பணிப்பாளர் மா.சிவலிங்கம் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக பல்வேறு கோணங்களில் விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

இந்தக் கொலையுடன் சம்பந்தப்பட்டவர்கள் கைதுசெய்யப்பட்டு நீதியின் முன் நிறுத்தப்படுவர்.

யாழ். படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க நேற்று மாலை உதயனுக்குத் தெரிவித்தார்.

இச் சம்பவம் குறித்து அவரிடம் (02 ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்புத்துறையில் மட்டுமன்றி சகல துறைகளிலும் உறவு பலப்படுத்தப்படும்

### இந்தியாவின் அபிலாஷை குறித்து பிரதீப்குமார்

கொழும்பு, டிசெ.29

பாதுகாப்புத்துறையில் மட்டுமின்றி சகல துறைகளிலும் இலங்கையுடன் தொடர்புகளை வலுப்படுத்திக் கொள்வதே இந்திய அரசின் அபிலாஷையாகுமென இந்திய பாதுகாப்புச் செயலர் பிரதீப்குமார் நேற்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் தெரிவித்தார்.

மூன்று நாள் விஜயம் மேற்கொண்டு இலங்கை வந்துள்ள இந்திய பாதுகாப்புச் செயலர் பிரதீப்குமார் நேற்றுக் காலை அலரி மாளிகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இலங்கை பாதுகாப்புத்துறையினருக்கு மேலும் பயிற்சிகளை வழங்க நடவடிக்கை எடுப்பதாகவும், இலங்கை விமானப் படையினரின் 60 வருட பூர்த்தியை முன்னிட்டு இந்திய விமானப்

(02 ஆம் பக்கம் பார்க்க)

### ஆலயத்தில் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் அடாவடி

## மட்டக்களப்பில் இந்துக்களைத் திரட்டி அஹிம்சைப் போர்

கொழும்பு, டிசெ. 29

மட்டக்களப்பு பட்டிப்பளை தாந்தாமலை முருகன் ஆலயத்தில் தொல்பொருள் ஆய்வாராய்ச்சி அதிகாரிகள் மேற்கொண்டு வரும் தொடர் அடாவடித்தனத்தைக் கண்டித்து கிழக்கு மாகாண இந்துக்கள் அனைவரையும் ஒன்றுதிரட்டி அஹிம்சை வழிப் போராட்டம் ஒன்றை நடத்தப்போவதாக மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி. பா.அரியநேத்திரன் நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

இதுதொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்குமாறு அவர் ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் கடிதங்களை அனுப்பி வைத்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

மிகவும் பழைமை வாய்ந்த மட்டக்களப்பு பட்டிப்பளை தாந்தாமலை முருகன் ஆலயத்தின் சமயச் செயற்பாடுகளுக்கு தொல்பொருள் ஆய்வாராய்ச்சி அதிகாரிகள் பெரும் இடையூறுகளை ஏற்படுத்தி வருகின்றனர்.

(02 ஆம் பக்கம் பார்க்க)

## வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் முல்லைத்தீவில் விரைவில் செயற்படும்

முல்லைத்தீவு, டிசெ.29

முல்லைத்தீவு மாவட்டத்தில் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகமும் பயிற்சி நிலையமும் அமைக்கப்படவுள்ளன.

முல்லைத்தீவு அரச அதிபர் நா.வேதநாயகன் தலைமையில் நேற்று செயலகத்தில் நடைபெற்ற உயர்மட்ட மாநாட்டில் இந்த முடிபு எடுக்கப்பட்டது.

இந்த மாநாட்டில் விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் நலன்புரிசேவைகள் அமைச்சர் டிலான் பெரேரா, நாடாளுமன்ற

(02 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் அணு ஆலைகளை அமைக்க ரஷ்யா - இந்தியா உதவி

கொழும்பு, டிசெ. 29

இலங்கையில் அணு ஆலைகளை அமைக்க ரஷ்யாவும் இந்தியாவும் ஒத்துழைப்பு வழங்கத் தீர்மானித்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை மற்றும் பங்களாதேஷ் போன்ற தெற்காசிய நாடுகளில் சிறியளவிலான அணு ஆலைகளை நிறுவுவதற்கு இந்தியாவும், ரஷ்யாவும் கூட்டாக இணைந்து உதவிகளை வழங்க உள்ளன என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சீன ஆதிக்கத்தை கட்டுப்படுத்தும் நோக்கில் இலங்கையில் அணு ஆலைகளை அமைப்பதற்கு இந்தியாவும் சீனாவும் முனைப்பு காட்டி வருகின்றன

(02 ஆம் பக்கம் பார்க்க)

## முறிகண்டிக்கு அப்பால் போக்குவரத்து ஸ்தம்பிதம்

கிளிநொச்சி, டிசெ.29

ஏ-9 பாதையில் முறிகண்டிக்கும் கொக்காவிலுக்கும் இடையில் நேற்று மாலை 5.30 மணியளவில் லொறி ஒன்று புதைந்ததால் போக்குவரத்துக்கள் ஸ்தம்பிதம் அடைந்தன.

அந்தப் பகுதியில் வீதியை மேவி வெள்ளம் பாய்ந்தால் வீதி சேதமடைந்துள்ளது. இதன் காரணமாக வாகனங்கள் அந்த

(02 ஆம் பக்கம் பார்க்க)

## வடமாகாணத்தில் புதிதாக 12 பிரதேச செயலர்கள்

### ஜனவரி 2இல் நியமனக் கடிதம்

கொழும்பு, டிசெ.29

வட மாகாணத்திலுள்ள பிரதேச செயலகங்களுக்குப் புதிதாக 12 பிரதேச செயலாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர். இவர்களுக்கான நியமனக் கடிதம் அடுத்த வருடம் ஜனவரி மாதம் 2ஆம் திகதி வழங்கப்படும் என்று வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி தெரிவித்தார்.

வடமாகாணத்தில்தற்போதுள்ள பிரதேச செயலாளர்களில் 60 வயதைத் தாண்டிய பலர் இருக்கின்றனர் எனவும், இவர்களது சேவைக்காலம் முடிவுற இருக்கும் நிலையிலேயே பிரதேச செயலாளர்களை புதிதாக நியமிக்கத் தீர்மானம் எடுக்கப்பட்டது என்

(02 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழரின் 500 ஏக்கர் நிலங்களில் வெலிஓயாச் சிங்களவர்

### சிவசக்தி ஆனந்தன் எம்.பி. ஜனாதிபதிக்குக் கடிதம்

கொழும்பு, டிசெ.29

நெடுங்கேணி பிரதேசத்தில் தமிழ் மக்களின் 500 ஏக்கர் வயல் நிலங்களில் வெலிஓயா வைச் சேர்ந்த சிங்கள மக்கள் நெற்செய்கையில் ஈடுபட அனுமதி அளிக்கப்பட்டுள்ளதால், தமிழ் மக்கள் தமது வாழ்வாதாரத்தை இழந்து நிற்கின்றனர்.

- இப்படி வன்னி மாவட்ட எம்.பி. சிவசக்தி ஆனந்தன் ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

நெடுங்கேணி பிரதேச செய லகத்திற்கு உட்பட்ட தமிழ் மக்களின் 500 ஏக்கர் வயற்காணியை மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இணைப்பது தொடர்பாக கடந்த 26ஆம் திகதி நான் நெடுங் கேணிப் பிரதேசத்துக்கு (02 ஆம் பக்கம் பார்க்க)

யாழ் மக்களின் நன்மதிப்பை பெற்ற
ஓரே ஒரு ரையில் காட்சியறை
நவீன் செரமிக்

Naveen Ceramic PVT LTD
212, Palaly Road, Jaffna.
Tel : 212220033 / 212220044

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பாதுகாப்புத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படைக் கண்காட்சி ஒன்றை நடத்தும் என்றும் அவர் கூறினார்.

இரண்டு நாடுகளுக்கிடையிலான பாதுகாப்புப் பயிற்சிகளில் இராணுவம் மற்றும் விமானப் படையினரையும் இணைத்துக் கொள்வது குறித்து இரு தரப் பினரும் கவனம் செலுத்தினர். இதன்படி 2011ஆம் ஆண்டு இலங்கை மற்றும் இந்திய கடற்படையினருக்கிடையே கூட்டுப் பயிற்சி ஒன்று இலங்கை கடல் எல்லையில் நடத்தவும் தீர்மானிக்கப்பட்டது.

ஜனாதிபதியுடன் இடம்பெற்ற இச்சந்திப்பின்போது இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அசோக் கே. காந்தா உட்பட இந்திய முப்படை பிரதிநிதிகளும், பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, வெளிவிவகாரச் செயலர் ரொமேஷ் ஜயசிங்க, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோரும் கலந்துகொண்டனர். (ஒ-சி)

## தமிழரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேரில் சென்று ஒலுமடு, பட்டிக்குடியிருப்பு மற்றும் கந்தளாய்க் கிரா மங்களில் மீள்குடியேற்றம் செய் யப்பட்டுள்ள பொது மக்களுடன் கலந்துரையாடினேன்.

மேற்குறிப்பிடப்பட்ட கிராம மக்களுக்குச் சொந்தமான தனிக்கல்லு, இலுப்பைக்குளம், ஒதியமலை ஆகிய மூன்று குளங்களின் கீழ்வரும் 500 ஏக்கர் நெற்காணிகளின் சொந்தக்காரர்களுக்கு பெரும்போக நெற்செய்கைக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. கண்ணிவெடி அகற்றப்படவில்லை என்றே இதற்குக் காரணம் கூறப்பட்டது.

ஆனால், தமிழ் மக்களின் அதே வயற்காணிகளில் வெலிஓயாவைச் சேர்ந்த சிங்கள மக்கள் நெற்செய்கையில் ஈடுபட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மீள்குடியேற்றம் செய்யப்பட்டு விவசாயத்தையே தமது ஜீவனோபாயத்துக்காக நம்பி வாழும் மேற்படி கிராம மக்கள் என்னிடம் இது குறித்து மிகுந்த கவலை தெரிவித்துள்ளனர்.

இக் காணிகளுள் உறுதி உள்ள காணிகளும், காணி அபிவிருத்தி அனுமதிப் பத்திரம் உள்ள காணிகளும் அடங்குகின்றன. இந்த வயற் காணிகள் நெடுங்கேணி பிரதேச செயலாளர் நிர்வாகத்துக்குட்பட்டவை. எனினும், டிசெம்பர் முதலாம் திகதி மேற்குறிப்பிடப்பட்ட நெற்காணிகளின் சொந்தக்காரர்களுள் 17 விவசாயிகள் வெலிஓயா உதவி அரச அதிபர், இராணுவ அதிகாரி மற்றும் ஒரு சிவில் அதிகாரி ஆகியோரினால் வரவழைக்கப்பட்டனர்.

இந்தக் காணிகள் யாவும் மகாவலி அபிவிருத்தித் திட்டத்துக்காக உள்வாங்கப்பட இருப்பதாக அப்போது தெரிவிக்கப்பட்டது. அத்துடன்,இந்தக் காணிகளின் சொந்தக்காரர்கள் அனைவரும் வெலிஓயா பிரதேச செயலாளர் பிரிவுக்குள் வரவேண்டும். இதற்கு சம்மதிக்காவிட்டால் இந்தக் காணிகளின் அனுமதிப்பத்திரங்கள் யாவும் இரத்துச் செய்யப்பட்டு மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கொண்டுவருவோம் எனவும் அவர்களினால் தெரிவிக்கப்பட்டது.

இந்த அறிவித்தலினால் காணிச் சொந்தக்காரர்கள் அச்சமடைந்துள்ளனர். ஆகவே, அந்த விவசாயிகளுக்குச் சொந்தமான காணிகளை வெலிஓயா பிரதேச செயலாளர் பிரிவில் இணைக்க மேற்கொள்ளப்படும் நடவடிக்கை தடுக்கப்படவேண்டும். அவர்களைக் கட்டாயப்படுத்தாது, அவர்கள் தமது சொந்தக் காணிகளில் விவசாயத்தை மேற்கொள்ள அனுமதி அளிக்கப்படவேண்டும். இதுதொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பணிப்புரை வழங்கும்படி தங்களைக் கேட்டுக் கொள்கின்றேன்.

-இவ்வாறு அக்கடிதத்தில் கூறப்பட்டுள்ளது. (ஒ-சி)

## வடக்குக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளவை வருமாறு:-

பல உயிர்களைப் பலி கொடுத்து நாட்டை மீட்டெடுத்த படையினருக்காகவும், நாட்டு மக்களுக்காகவும் மீண்டும் அமைதியையும், சட்டத்தை யும் பாதுகாக்குமாறு பொலிஸ் மா அதிபரையும், பிரதிப் பொலிஸ் மா அதிபரையும் கேட்டுள்ளேன்.

- இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ஒ-சி)

## வடமாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றும் அவர் தெரிவித்துள்ளார்.

புதிதாக நியமிக்கப்படவுள்ள பிரதேச செயலாளர்களை தேர்ந்தெடுப்பதற்கான நேர்முகப் பரீட்சை நேற்றுமுன்தினம் யாழ். நகரிலுள்ள வட மாகாண ஆளுநரின் உப அலுவலகத்தில் இடம் பெற்றது.

வடக்கில் தற்போது பெருமளவிலான நிதி ஒதுக்கீட்டில் பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் துரிதமாக முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில் அவற்றை மேலும் துரிதமாக அமுல்படுத்துவதற்கு இளம் பிரதேச செயலாளர்கள் அவசியம்.

அடுத்த வருடம் தொடக்கம் வடக்கிலுள்ள ஐந்து மாவட்டச் செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள் ஊடாகத் திட்டமிடப்பட்ட சீரான சேவையை உரிய முறையில் முன்னெடுக்க திட்டமிட்டுள்ளோம். இதற்குத் தேவையான அறிவுறுத்தல்களை மாவட்டச் செயலாளர்களுக்கும் வழங்கியுள்ளோம். - இப்படி அவர் தெரிவித்தார். (ர-11)

## வெளிநாட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ ஆகியோரும் கலந்து கொண்டனர்.

மாவட்டத்தில் காணப்படும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதாகக் கூறிய முல்லைத் தீவு அரசாங்க அதிபர், விளையாட்டுத் துறையை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளும் இதன்போது மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

அந்த வகையில், பிரதேச, மாவட்ட மட்டங்களில் கரப்பந்தாட்டம் மற்றும் வலைப்பந்தாட்டத்திற்கான திடல்கள் உட்பட விளையாட்டு மைதானங்களை அமைப்பதற்கு இதன்போது தீர்மானிக்கப் பட்டதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை, வேல்ட்கொன்சேர்ன் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட ஐஸ் தொழிற்சாலையையும் நாமல் ராஜபக்ஷ நேற்று திறந்துவைத்தார் என்றும் முல்லைத் தீவு அரசாங்க அதிபர் என். வேதநாயகன் தெரிவித்தார்.

(ஒ-ஐ)

## விடுவிக்கப்பட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான இறுதிச் சண்டையில் 12,000 விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் சரணடைந்தார்கள் என்று அரசு அறிவித்தது. அவர்கள் இராணுவ திடீர்ச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டார்கள். அவர்களுக்குப் புனர்வாழ்வு வழங்கப்படுவதாக அரசு அறிவித்தது. புனர்வாழ்வு வழங்கப்பட்டவர்கள் படிப்படியாக விடுவிக்கப்பட்டார்கள். இதுவரை அவ்வாறு 7,000 பேர் வரையிலானோர் விடுவிக்கப்பட்டுள்ளார்கள் என்று அரச தகவல்கள் கூறுகின்றன.

விடுதலையான முன்னாள் போராளிகளில் சிலர் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பியது முதல் அருகில் இருந்த இராணுவ முகாம்களில் பதிவு செய்யப்பட்டார்கள். அவர்களில் சிலர் வாராந்தம் அல்லது மாதாந்தம் முகாம்களில் கையெழுத்திட உத்தரவுவிடப்பட்டிருந்தார்கள். ஏனையோர் சுதந்திரமாக நடமாட அனுமதிக்கப்பட்டிருந்தார்கள்.

கடந்த சில நாள்களாக இவர்களைப் பற்றிய விவரங்களை இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் மீண்டும் சேகரிக்கத் தொடங்கி உள்ளனர். அதேநேரத்தில் தொடர்ந்தும் தடுப்பில் உள்ளவர்களிடம் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரும் குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரும் மீண்டும் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

யாழ்ப்பாணம் மற்றும் வன்னியில் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டவர்களின் விவரங்களை இராணுவப் புலனாய்வாளர்கள் கிராம அலுவலர்கள் மூலமும் பிரதேச செயலர்கள் மூலமும் திரட்டி வருகின்றனர். ஏற்கனவே இராணுவ முகாம்களில் பதிவு செய்தவர்களைத் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு விசாரணைக்கு வருமாறும் அழைப்பு விடுக்கின்றனர்.

இராணுவப் புலனாய்வாளர்களின் இந்த நடவடிக்கையினால் முன்னாள் போராளிகள் மத்தியில் பதற்றமும் அச்சமும் தோன்றி உள்ளது. இவ்வாறான நடவடிக்கைகள் தமது பிள்ளைகளின் எதிர்காலம் குறித்த கேள்வியையும் அச்சத்தையும் ஏற்படுத்துகின்றன என்று பெற்றோர்கள் கவலை தெரிவித்தனர். மீண்டும் மீண்டும் தாங்கள் சந்தேகக் கண் கொண்டு நோக்கப்படுவது தமது இயல்பு வாழ்வைப் பாதிப்பதாகவும் தாங்கள் மீண்டும் உயிராபத்துக்குள் சிக்கிக்கொள்ள நேரிடும் என்ற அச்சத்தை ஏற்படுத்துவதாகவும் முன்னாள் போராளிகள் பலர் உதயனிடம் தெரிவித்தனர்.

இராணுவப் புலனாய்வாளர்களின் நடவடிக்கையை இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் உபய மெத்தவெல உறுதிப்படுத்தினார். ஆனால், இந்த நடவடிக்கைகள் முன்னாள் போராளிகளின் எதிர்காலத்தைச் சுபீட்சமாக்குவதற்கானது என்று அவர் தெரிவித்தார். புலனாய்வாளர்களின் நடவடிக்கைக்கு எந்தவிதமான உள்நோக்கமும் கிடையாது என்றும் அவர் தெரிவித்தார். ''விடுதலைப் புலிகள் இயக்க முன்னாள் உறுப்பினர்களுக்குப் புனர்வாழ்வு நிலையங்களில் வழங்கப்பட்ட பயிற்சிகளை அவர்கள் சரிவரப் பயன்படுத்துகிறார்களா என்பது தொடர்பில் ஆராய்ந்து வருகின்றோம்'' என்றார் அவர்.

அதேவேளை, யாழ். குடாநாட்டில் இடம்பெற்ற கொலைகள் மற்றும் கொள்ளைகளுடன் முன்னாள் போராளிகளுக்குத் தொடர்புகள் இருப்பதாக இராணுவ உயர் அதிகாரிகளும் பாரம்பரிய கைத்தொழில் சிறு கைத்தொழில் அமைச்சரும் தெரிவித்து வரும் பின்னணியில் புலனாய்வாளர்களின் நடவடிக்கையை சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடியவில்லை என்று விடுவிக்கப்பட்ட போராளிகளும் அவர்களது பெற்றோர் மற்றும் உறவினர்களும் தெரிவிக்கின்றனர்.

இதற்குப் பதிலளித்த இராணுவப் பேச்சாளர், ''விடுதலைப் புலிகள் இயக்கத்தினருக்கு புனர்வாழ்வு அளித்து விடுவிப்பது மட்டும் எமது கடமை அல்ல. அவர்கள் சமூகத்தில் ஒரு நல்ல நிலைமைக்கு வரும் வரை அவர்களைக் கண்காணிப்பதும் எமது கடப் பாடாகும்'' என்றார். அதேசமயம் முன்னாள் போராளிகள் குற்றச் செயல்களில் ஈடுபடாதவாறு நடவடிக்கை எடுப்பதற்கும் இத்தகைய தகவல்கள் உதவும் என்றும் அவர் குறிப்பிட்டார். (உ-சி-86)

## இலங்கையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனத் தெரிவிக்கப்படுகிறது.

ரஷ்யப் பிரதமர் டிமெட்ரி மெட்டிடேவ் அண்மையில் இந்தியாவிற்கு மேற்கொண்ட விஜயத்தின்போது இந்தத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. தெற்காசிய நாடுகளில் உட்கட்டுமான வசதிகளை ஏற்படுத்துவதில் சீனா கூடுதல் ஆதிக்கம் செலுத்தி வருகிறது எனவும், இதனை முறியடிக்கும் நோக்கில் இந்தியாவும், ரஷ்யாவும் அணு உலைகளை நிறுவுவதற்கு ஒத்துழைப்பு வழங்கத் தீர்மானித்துள்ளன எனும் தெரிவிக்கப்படுகிறது.(சி)

## முறிகண்டிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகுதியில் விபத்துக்குள்ளாகின.

நேற்று முன்தினம் வாகனம் ஒன்று புதைந்ததால் மாலை 4.30 மணி முதல் 6.30 மணிவரை போக்குவரத்து ஸ்தம்பிதம் அடைந்திருந்தது.

நேற்று மாலை 5.30 மணியளவில் லொறி ஒன்று புதைந்ததால் போக்குவரத்து ஸ்தம்பிதம் அடைந்தது. அந்த லொறியை மீட்டு போக்குவரத்தை வழமைக்குக் கொண்டு வருவதற்கான பணி நள்ளிரவு வரை தொடர்ந்ததாக அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

வாகனங்கள் நீண்ட கியூவில் காத்திருந்தன. (ஒ-ஐ-6)

## பல்வேறு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று மாலை தொடர்பு கொண்டு கேட்ட போது-

இந்தச் சம்பவம் தொடர்பான முன்னேற்றம் குறித்து சற்று முன்னரும் வடபிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபருடன் தொடர்பு கொண்டேன். இச் சம்பவம் தொடர்பான விசாரணை தொடர்ந்து நடைபெறுவதாக என்னிடம் அவர் தெரிவித்தார்.

பொலிஸார் ஒரு பக்கமாகவும் புலனாய்வுப் பிரிவினர் மறுபுறமாகவும் விசாரணைகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர்.

இதற்குப் புறம்பாக படையினரான நாமும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றோம்.

இந்தச் சம்பவத்தில் முன்னாள் ஆயுதக்குழுவே சம்பந்தப்பட்டிருப்பதாக நாங்கள் சந்தேகிக்கின்றோம். எவராக இருந்தாலும் அவர்களைக் கைது செய்து நீதியின் முன் நிறுத்துவோம்.

இத்தகைய சம்பவங்கள் எதிர்காலத்தில் இடம்பெறாமல் இருக்க உரிய நடவடிக்கைகளை நாம் எடுப்போம்-என்றார். (ஒ-ஐ)

## மட்டக்களப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்துக் கோயிலில் பூஜை வழிபாடுகளை மேற்கொள்ளவேண்டாம் என்று அவர்கள் ஊர்காவற் படையினருடன் வந்து கோயில் நிர்வாகத்தினரை அடிக்கடி மிரட்டி வருகின்றனர்.

இந்த இடம் தொல்பொருள் ஆராய்ச்சித் திணைக்களத்தால் ஆராய்ச்சி செய்யப்பட வேண்டியது. யாரைக் கேட்டு இந்த இடத்தில் கோவில் கட்டினீர்கள் என்று தொல்பொருள் ஆராய்ச்சி அதிகாரிகள் கோவில் நிர்வாகத்தைக் கேட்கின்றனர்.

1959ஆம் ஆண்டு மட்டக்களப்பு மாவட்டத்தின் அப்போதைய அரச அதிபராக இருந்த டபிள்யூ. பத்திரன, நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.யூ.எதிரிமானசிங்கம் மற்றும் களுவாஞ்சிக்குடி பிரதேச சபைத் தவிசாளர் ஆகியோர் மட்டக்களப்பு கச்சேரியில் நடத்திய கூட்டத்தின்போது தாந்தாமலை முருகன் ஆலயமும் அதைச் சுற்றியுள்ள 25 ஏக்கர் நிலமும் புனித இடமாகப் பிரகடனப் படுத்தப்பட்டது.

ஆனால், யுத்தம் முடிவடைந்த பின்னர் இந்த கோயிலுக்கு தொல்பொருள் ஆய்வாராய்ச்சி திணைக்கள அதிகாரிகளின் ஊடாக அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

இவர்களின் தொல்லையில் இருந்து இந்தக் கோயிலைப் பாதுகாத்துத் தருமாறு நான் இம்மாதம் 20ஆம் திகதி பிரதமர் டி.எம்.ஜயரட்னவுக்கும் கடிதம் ஒன்றை எழுதினேன். அதற்குப் பதில் எதுவும் வராததால் இன்று (அதாவது நேற்று) ஜனாதிபதிக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளேன்.

ஜனாதிபதி இதுதொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால், இந்த ஆலயத்தைப் பாதுகாப்பதற்காக நாம் கிழக்கு மாகாண இந்து மக்களை ஒன்றுதிரட்டி அஹிம்சை வழியில் போராட்டம் நடத்துவோம்.

இவ்வளவு காலமும் தங்களது உரிமைக்காகப் போராடிய எமது மக்கள் இப்போது நிலத்தைப் பாதுகாப்பதற்காகப் போராடவேண்டியுள்ளது.

- இப்படி அவர் தெரிவித்தார். (இ-07)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களைப் பயப்பீதியுடன் வைத்திருக்கும் நோக்கிலேயே பிரதிக் கல்விப் பணிப்பாளர் திட்டமிட்டு படுகொலை

## இறுதிக்கிரியை நிகழ்வில் சிறிதரன் எம்.பி. அஞ்சலியுரை



யாழ்ப்பாணம், டிசெ.29

தமிழ் மக்களைத் தொடர்ந்தும் பயப்பீதியுடன் வைத்திருக்கும் நோக்கிலேயே வலிகாமம் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் மா.சிவலிங்கத்தின் கொலைச் சம்பவம் திட்டமிடப்பட்டு செய்யப்பட்டுள்ளது.

- இவ்வாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்துள்ளார்.

உரும்பிராய் மூன்று கோயிலடிப் பகுதியில் சுட்டுக்கொலை செய்யப்பட்ட வலிகாமம் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் மா.சிவலிங்கத்தின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நேற்று நடைபெற்றபோது அதில் கலந்துகொண்டு அஞ்சலியுரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு உரையாற்றுகையில் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பிரதிக் கல்விப் பணிப்பாளரின் கொலைச்சம்பவத்தை கொள்ளையோடு தொடர்புபடுத்த முடியாது. இது திட்டமிடப்பட்டு செய்யப்பட்ட கொலையாகும். குடாநாட்டில் முழத்துக்குமுழம் இராணுவ முகாம்கள், புலனாய்வுத்துறையினரின் கண்காணிப்புகள் என்ற சூழல் இருக்கும் போது இவ்வாறான கொலை எவ்வாறு நடந்திருக்க முடியும்.

சங்கானையில் அண்மையில் அந்தணச்சிவாச்சாரியார் ஒருவர் கொடூரமான முறையில் கொல்லப்பட்டுள்ளார். அத்துடன் துப்பாக்கி முனையில் பல்வேறு கொள்ளைச் சம்பவங்கள் நடந்து கொண்டிருக்கின்றன.

1985 ஆம் ஆண்டு கிளிநொச்சி ரயில் நிலையத்தில் இராணுவ சிப்பாய் ஒருவரால் தமிழ் மக்கள் 16 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். அப்போது இருந்த அரசாங்கம் அந்த இராணுவச் சிப்பாய்க்கு மனநோய் என்று சாட்டுப்போக்குச் சொல்லி நழுவிக்கொண்டது.

அதேபோல் அண்மையில் அந்தணர் ஒருவர் கொலை செய்யப்பட்டதற்கு கஞ்சாவிற்கு அடிமையான இராணுவச் சிப்பாய் துப்பாக்கியைக் கொடுத்துள்ளார் என்று சாட்டுச் சொல்லியிருக்கிறார் இராணுவத் தளபதி ஹத்துருசிங்க.

1995 ஆம் ஆண்டுக்குப் பின்னர் கடந்த 15 வருடங்களாக குடாநாடு இராணுவ மயப்படுத்தப்பட்டதாகவே உள்ளது. இந்தக் காலங்களில் ஆயிரத்துக்கு மேற்பட்ட தமிழ் மக்கள் சுட்டுக் கொல்லப்பட்டும், கடத்தப்பட்டுக் காணாமற் போயுமுள்ளனர்.

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வும் முன்வைக்கப்படாமலும், தமிழ்மக்களின் அவலங்கள் தீர்ந்துபோகாமலும் தொடர்கதையாகயிருந்து வருகிறது.

இந்நிலையில் கல்வியாளர் மா.சிவலிங்கத்தின் படுகொலைக்கு அரசாங்கம் முழுப் பொறுப்பும் கூற வேண்டும். இது போன்ற சம்பவங்கள் இனிமேலும் நடைபெறாமல் தடுக்க உருப்படியான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் - என்றார்.

இதேவேளை நேற்று நண்பகல் 12 மணியளவில் நடைபெற்ற இவரது இறுதிக்கிரியைகளில் சமூகப்பிரமுகர்கள், உறவினர்கள் என நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டு தமது அஞ்சலிகளைச் செலுத்தினர். மனைவி, பிள்ளைகள், உறவினர்கள் கதறியழ ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்ட இவரது பூதவுடல் வலிகாமம் கல்வி வலயத்தில் பிற்பகல் ஒரு மணியளவில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. அதன் பின்னர் அங்கிருந்து எடுத்துச்செல்லப்பட்ட இவரது பூதவுடல் இணுவில் காரைக்கால் இந்து மயானத்தில் தீயுடன் சங்கமமானது. (ஒ-9-14)



கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு உரும்பிராய் மேற்கில் இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் மார்க்கண்டு சிவலிங்கத்தின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு வலிகாமம் கல்வி வலயத்தில் நேற்று இடம்பெற்றது.
உதவிக் கல்விப் பணிப்பாளர்களான எஸ்.நடராஜா, தமிழ்மாறன், மாதவக்குமார், வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.இராசேந்திரம், தெல்லிப்பழைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் கைலைநாதன், இளவாலைப் புனித ஹென்றியரசர் கல்லூரி அதிபர் அருட்திரு.ஏ.ஜே.யேசுதாஸ் ஆகியோர் அஞ்சலி உரை நிகழ்த்துகின்றனர். (படங்கள்:14-9)

# பிரதிக் கல்விப்பணிப்பாளரின் படு கொலையின் பின்னணியைக் கண்டறிய வேண்டும்

யாழ்ப்பாணம், டிசெ.29

வலிகாமம் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளரின் மறைவு ஈடுசெய்ய முடியாததொன்று. இந்தக் கொலைச்சம்பவத்தின் பின்னணி கண்டறியப்படவேண்டும்.

வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.இராசேந்திரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

உரும்பிராயில் சுட்டுக் கொலை செய்யப்பட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் மா.சிவலிங்கத்தின் பூதவுடல் வலிகாமம் வலயத்தில் நேற்று பிற்பகல் ஒரு மணியளவில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

இதில் அஞ்சலியுரை நிகழ்த்தும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு உரையாற்றும் போது மேலும் தெரிவித்தவை வருமாறு-

படுகொலை செய்யப்பட்டுள்ள மா.சிவலிங்கம் சிறந்ததொரு நிர்வாகி. அத்துடன் பல ஆசிரியர்களை உருவாக்கிய சிறந்த கல்விமான். கடந்த இரண்டு வருடங்களாக பிரதிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி தன்னாலான பங்களிப்பைச் செய்துவந்தவர்.

கல்விச் சமூகத்தைச் சார்ந்த ஒருவருக்கு நடந்திருக்கின்ற இந்தக் கொடூரச் சம்பவத்தை நினைக்கும்போது வெட்கித் தலைகுனிகிறோம்.

இந்தச் சம்பவத்தின் பின்னணி கண்டறியப்பட வேண்டும். இனி வருகின்ற காலத்தில் இது போன்ற சம்பவங்கள் நடைபெறுவதற்கு இடமளிக்கக்கூடாது - என்றார்.

### கோட்டக் கல்விப் பணிப்பாளர் கைலைநாதன் அஞ்சலியுரை

தெல்லிப்பழைக் கல்விக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.கைலைநாதன் தமது அஞ்சலியுரையில் தெரிவித்ததாவது-

பிரதிக் கல்விப் பணிப்பாளர் மா.சிவலிங்கத்தின் மறைவு ஈடு செய்ய முடியாததொன்றாகும். மாணவர்களுடைய நலன்கருதி அர்ப்பணிப்புடன் சேவைபுரிந்து வந்தவர் அவர்.

வலிகாமம் வலயத்தில் ஆங்கிலமொழி, தமிழ்மொழிப் பிரிவுகளுக்குப் பொறுப்பாக விருந்து அந்தத்துறைசார்ந்த மாணவர்களை வளர்த்தெடுத்தவர். அத்துடன் அவர்களை சிறந்த முறையில் நெறிப்படுத்தி வந்தவர். அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன் - என்றார்.

### புனித ஹென்றியரசர் அதிபர் அஞ்சலியுரை

வலிகாமம் கல்வி வலய அதிபர்கள் சார்பாக உரையாற்றிய இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் அதிபர் அருட்திரு. ஏ.ஜே.யேசுதாஸ் தனது அஞ்சலியுரையில் தெரிவித்ததாவது-

பிரதிக் கல்விப் பணிப்பாளரின் கொலைச் சம்பவம் கண்டிக்கத்தக்கதொன்றாகும். இதுபோன்ற அவலச் சம்பவங்கள் தொடர்ந்தும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றபோது அதனைக் கண்டிக்காது தொடர்ந்தும் மௌனம் காத்துக்கொண்டிருக்கின்றோம்.

இவரது கொலைச் சம்பவத்தைக் கல்விச்சமூகம் கடுமையாகக் கண்டிக்க வேண்டும். தமது பலத்த எதிர்ப்பை வெளிப்படுத்த வேண்டும்.

துப்பாக்கியால் ஒரு அருமையான பண்பாளனை, கல்வியியலாளனை நாம் இழந்து நிற்கிறோம். இவரது இழப்பு ஈடுசெய்யவே முடியாது - என்றார்.

இந்த அஞ்சலி நிகழ்வில் வலிகாமம் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான அ.தமிழ்மாறன், எஸ்.மாதவகுமார், எஸ்.நடராசா உட்படப்பலர் அஞ்சலியுரைகளை நிகழ்த்தினார்கள்.

சுமார் ஒரு மணிநேரம் இடம்பெற்ற இந்த அஞ்சலி நிகழ்வில் வலிகாமம் வலயத்தின் உத்தியோகத்தர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் என நூற்றுக் கணக்காளோர் கலந்து கொண்டனர். (ஒ-9-14)

# குடாநாட்டில் தொடரும் கொலைகளை நிறுத்த ஜனாதிபதி உடன் தலையிட வேண்டும்

## ஐ.தே.கட்சி எம்.பி. கோரிக்கை

கொழும்பு, டிசெ.29

குடாநாட்டில் கொலைகள், கொள்ளைச்சம்பவங்கள்தொடர்ந்து வருகின்றமை பொதுமக்கள் மத்தியில் பெரும் அச்சத்தையும் பீதியையும் ஏற்படுத்தியுள்ளது. அண்மைக்காலமாக குடாநாட்டில் பலர் கொல்லப்பட்டுள்ளதுடன் கொள்ளைச் சம்பவங்களும் அதிகரித்து வருகின்றன. இத்தகைய செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்துவதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலையிட்டு உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

[illegible] வலிகாமம் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் மார்க்கண்டு சிவலிங்கம் ஆயுததாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். மகளுடன் அவர் வீட்டிலிருந்த வேளை அங்கு வந்த ஆயுததாரிகள் அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டு தப்பிச் சென்றுள்ளனர். இத்தகைய செயற்பாடு யாழ். குடாநாட்டு மக்கள் மத்தி யிலும் கல்விச் சமூகத்தினர் இடையேயும் பெரும் அச்ச உணர்வை ஏற்படுத்தியிருக்கின்றது.

யுத்தம் முடிவடைந்து ஒன்றரை வருடங்கள் நிறைவடைந்த பின்னரும் இத்தகைய சம்பவங்கள் இடம்பெறுவதானது அரசாங்கத்துக்கே அபகீர்த்தியை ஏற்படுத்தும். குடாநாட்டில் தொடரும் கொலை, கொள்ளைச் சம்பவங்களினால் அங்கு செல்வதற்குக்கூட மக்கள் அஞ்சும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே இத்தகைய குற்றச் செயல்களைத் தடுப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

கடந்த காலத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் உரிய விசாரணை நடத்தப்பட்டு குற்றவாளிகள் உடனடியாகத் தண்டிக்கப்படவேண்டும்.

குடாநாட்டில் படையினரும் பொலிஸாரும் பெரும் எண்ணிக்கையில் கடமையில் ஈடுபட்டிருக்கின்ற நிலையில் இத்தகைய சம்பவங்கள் தொடர்வதானது அரசாங்கத்துக்கே அபகீர்த்தியை ஏற்படுத்துவதாக உள்ளது. எனவே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இவ்விடயத்தில் தலையிட்டு இனிமேலும் இத்தகைய சம்பவங்கள் இடம்பெறுவதைத் தடுத்து நிறுத்த வேண்டும் - என்றுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முறைசாராப் பிரிவு**

வடமராட்சி கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவில் கரணவாய் வடக்கில் திறந்த பாடசாலை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்தத் திறந்த பாடசாலை கரணவாய் கிராம அபிவிருத்திச் சங்கப் பொது நோக்கு மண்டபத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.


# புதிய ஆண்டில் மகிழ்ச்சியாக வாழ.. OLYMPIA SPORTS



உடல் பருமன் தடையா? கவலையை விடுங்கள்

உடற்பயிற்சிவல்லுனர்களின் அலோசனைகளுடன் வைத்திய நிபுணர்களின் சிபார்சிற்கு அமைய உடற்பயிற்சி சாதனங்களான.....

**AB Circle, AB Pro, Orbitrek, Total Gym, Tread mill, Home Gym, Weight Bench** போன்றவற்றைப் பெற்றுக்கொள்ள



## ஒலிம்பியா ஸ்போட்ஸ்

06, ஜும்மா பள்ளிவாசல் லேன், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P: 2223490, 0778060267, 0778010219.


## மரண அறிவித்தல்



### திருமதி கனகம்மா நல்லையா

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கனகம்மா நல்லையா நேற்று (28.12.2010) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கந்தவனம் (மகன்)
(கனி போட்டோ,இணுவில்)

அரசடி லேன்,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
021 3209419
021 4902919


## Your Future Starts Here

### STUDY IN UK & CANADA

வடமாகணத்தில் பல மாணவர்களை உயர் கல்விப் பட்டப் படிப்பிற்காக London (UK) அனுப்பி சாதனை படைத்த எமது நிறுவனம் 2011 புதிய ஆண்டில் வெற்றிப் பாதையில் உங்களை அழைக்கிறது.

1. Courses: Certificate/ Diploma/ Degree/ Post Graduate Etc..
2. தகைமை:- G.C.E. O/L இல் இருந்து
3. Bank Financial Sponser வசதிகள் குறைந்த செலவில்
4. விண்ணப்பங்கள் UK சட்ட ஆலோசகரின் நேரடி வழிகாட்டலில்.
5. 100% VISA உத்தரவாதம்
6. IELTS- No Need (Some Other Courses)
7. Admission நீங்கள் விரும்பும் பல்கலைக்கழகங்களில் அல்லது கல்லூரிகளில்
8. London இல் கல்வி பயிலும் எமது மாணவருடன் தொழில் நியான தொடர்புகள் பெற்றுத்தரப்படும்
9. Course Fees நேரடியாக கல்லூரிகளில் செலுத்தும் வசதி
10. London ஹீத்ரோ விமான நிலையத்தில் குடிவரவு அதிகாரிகளுடன் உரையாட இலவசப் பயிற்சி நெறி.

இடம்: SEC (Pvt) Ltd.
620, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
(ராணி கோவிற்கு முன்பு)
தொ.பே.: 021 222 0555

Hotline : 0777887181
E-mail: info@immitechlk.com
www.immitechlk.com

Head office:- No.06, 1st Floor, 37th Lane, Wellawatte, Colombo- 06 Srilanka.
Tel/Fax: 0112363739


## மரண அறிவித்தல்

### திருமதி ஜெயலட்சுமி அழகரத்தினம்

மலேசியாவைப் பிறப்பிடமாகவும், மாதகலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெயலட்சுமி அழகரத்தினம் நேற்று (28.12.2010) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காசிநாதர் அழகரத்தினம் (ஓய்வு பெற்ற அதிபர், சமாதான நீதிவான்) அவர்களின் அன்பு மனைவியும், திருமதி ஜெயமிதுலா தர்மசீலன் (உதவித் தபால் அதிபர், கணக்காளர் அலுவலம், யாழ்ப்பாணம்) அவர்களின் பாசமிகு தாயும், சிவபாதசுந்தரம் தர்மசீலனின் (ஆசிரியர், தி/ஸாஹிரா கல்லூரி, திருமலை) மாமியும் வேணுதனினதும் அவரது தம்பியினதும் பேர்த்தியும், மலேசியாவில் உள்ள காலஞ் சென்ற சின்னத்துரை மற்றும் மீனாட்சி தம்பதியரின் மருமகளும் மலேசியாவில் வசிக்கும் இந்திராணி , சிவனேஸ்வரி, பொன்னம்பலம், கணபதிப்பிள்ளை, பாலசுப்பிரமணியம், ராதாகிருஸ்ணன், தெய்வேந்திரம் காலஞ்சென்ற செல்லம் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் மாதகலில் உள்ள அவரது இல்லத்தில் இன்று (29.12.2010) புதன் கிழமை மு.ப 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் மாதகல் மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. அழகரத்தினம் J.P. (கணவர்).

பிள்ளையார் கோவிலடி,
மாதகல்.
(108142)

## ஈர விழிகளுடன் ஈராண்டு நினைவலைகள்



அமரர்

### சபாபதிப்பிள்ளை கனகரட்ணம்

(ஓய்வு பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்)

தோற்றம் 13.12.1932 — மறைவு 20.12.2008

ஈராண்டு சென்றாலும் எம் விழிகள் ஓயவில்லை
தீராத கவலையப்பா தினம் தீயாக எரிக்கிறதே.

கோகுல வீதி,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.
(108129)

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### கந்தையா இராசரத்தினம்

நேற்று (28.12.2010 4ஆம் பக்கத்தில் பிரசுரமான கந்தையா இராசரத்தினம் அவர்களின் மரண அறிவித்தலில் 28.10.2010 செவ்வாய்க்கிழமை அன்று இறுதிக்கிரியைகள் நடைபெறும் என்று அறிவித்திருந்தோம். தவிர்க்க முடியாத காரணத்தினால் அன்றைய தினம் நடைபெறவில்லை. நாளை (30.12.2010) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இறுதிக்கிரியைகள் நடைபெறும் என்பதை அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்: தெய்வசேனா (மனைவி), லோகேஸ்வரன் (மருமகன்)
தொ.பே.: 0213210317

## மரண அறிவித்தல்கள்



### சரஸ்வதி பியதாச

(ஓய்வு பெற்ற மேற்பார்வையாளர், தொலைத்தொடர்புத் திணைக்களம்)

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் பிறவுண் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சரஸ்வதிபியதாச (ஓய்வுபெற்ற மேற்பார்வையாளர், தொலைத்தொடர்புத் திணைக்களம்) நேற்று (28.12.2010) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - கண்மணி தம்பதியரின் அருமை மகளும் காலஞ்சென்றவர்களான அயோனிஸ் - றோசினி தம்பதியினரின் மருமகளும், E.S பியதாச (சிங்கள பாட விரிவுரையாளர், கோப்பாய், ஆசிரியர் கலாசாலை) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற மயில்வாகனம் மற்றும் செல்வி கமலநாயகி ராஜேஸ்வரி, ஜெகநாதன் (கிருபா) ஆகியோரின் சகோதரியும், கமலாதேவி, காலஞ்சென்ற துரைசிங்கம் அமிர்தசெல்வி சிறிசேன, ஜெனதாஸ, லீலாதர்மதாஸ ஆகியோரின் மைத்துனியும் ரூபினி அவர்களின் தாயாரும், வரதராஜா (குஞ்சன்- மாருதி ரேட் சென்ரர்) அவர்களின் மாமியாரும் அபிநயா, திவ்வியா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (29.12.2010) புதன் கிழமை அவரது பிறவுண் வீதியிலுள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பி.ப 2 மணிக்கு தகனக்கிரியைக்காக கோம்பை யன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
E.S. பியதாச (கணவர்).

பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
(108137)



### கணபதிப்பிள்ளை அப்புத்துரை

(ஆசாரியார்)

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், சுதுமலையை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை அப்புத்துரை நேற்று (28.12.2010) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - வள்ளியம்மை தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ் சென்றவர்களான சடாசிவம் - செல்லம்மா தம்பதியினரின் மருமகனும், காலஞ்சென்ற இராசபூபதியின் அன்புக் கணவரும், யோகராணி, வசந்தமலர், மல்லிகாதேவி, அன்புமலர், பரமசிவம் (முகாமையாளர், Unico யாழ். பல்கலைக்கழகம்) அற்புதம் ஆகியோரின் தகப்பனாரும், தேவராசா, தர்மராசா, சிவசுப்பிரமணியம், சந்தானலக்ஷ்மி (ஆசிரியை, யா/சுதுமலை சிந்மயபாரதி வித்தியாலயம்), கௌரீஸ்வரன் (கனடா) ஆகியோரின் மாமனும், பாலமோகன், விஜயபாலன் (லண்டன்), யசோதரன், அகிலா, யோகராஜ், தர்மினி, வசந்தினி, சிவதர்சினி, கஜானன் ஆகியோரின் பேரனும், கோகுல்ராஜ், கேசிகன் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (29.12.2010) புதன் கிழமை பி.ப 1.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிப்பிலி இந்து மாயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மகன் (பரமசிவம்).

சுதுமலை வடக்கு,
மதவடி லேன், மானிப்பாய்.
(108136)

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### தாதபிள்ளை தங்கம்மா



மண்ணில் 04.01.1926 — விண்ணில் 01.01.2008

திதி: நவமி- (29.12.2010)



ஆயிரம் நாள்கள் ஓடியும் ஆறவில்லை
எம் கண்களின் நீர் ஓட்டம்
மூன்று ஆண்டுகள் கடந்தும்
முடியவில்லை உங்கள் நினைவுகள்
ஆத்மா சாந்திபெற சிவன் பாதம் பணிகின்றோம்.

உங்கள் நினைவுகளுடன்..
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

F.தா.செல்வரட்ணம்
20, செம்பெடிக்ற் வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 9595.

## மரண அறிவித்தல்



### திருமதி குமாரசாமி பாலாம்பிகையம்மா

(ஓய்வுபெற்ற ஆசிரியை, யா/கனகரத்தினம் மத்திய ம.வி., யா/ஹாட்லிக் கல்லூரி)

மாதனை பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி பாலாம்பிகையம்மா நேற்று (28.12.2010) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரசாமியின் அன்பு மனைவியும், சுரேந்திரராசா (முகாமைத்துவ உதவியாளர் - பிரதேச செயலகம், தென்மராட்சி) அவர்களின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற க. சிங்காரவேலு, க. கௌசாம்பிகையம்மா, காலஞ்சென்ற க. இரத்தினவேலு, ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற க.வயிரமுத்து மற்றும் மா.சகுந்தலா, காலஞ்சென்றவர்களான இராசம், சி.கனகசபை, இ.கனகாம்பிகை ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.12.2010) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப 2 மணியளவில் தகனக் கிரியைகளுக்காக கோரியடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கு.சுரேந்திரராசா (மகன்),
இ.[illegible] (மருமகன்)

பா சாலை வீதி,
மாதனை,
[illegible]
தொ.பே.: 0213734658


# Boy'S World



(Non Stop Fation)

புத்தாண்டை முன்னிட்டு,
மாபெரும் விலைக்கழிவுகள்

| Danim Jeans | Shirt | T Shirt | Jumber |
|---|---|---|---|
| ~~[illegible]~~ 1650/- ~~[illegible]~~ 1490/- (Cap Free) | ~~[illegible]~~ 850/= (Cap Free) | ~~750/=~~ 450/= | ~~950/=~~ 550/= |



Special Offer- 1 T-Shirt- வாங்கும் போது 1 t- Shirt Free (850/=)



215, கஸ்தூரியார் வீதி,
ராஜா தியேட்டர் அருகில்,
யாழ்ப்பாணம்.
T.P: 0773604830


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## மக்களின் உயிர்களைக் காப்பாற்ற...

கிராமத்தில், ஊரில் ஒரு சம்பவம் நடந்து விட்டால் அது எவ்வாறு நடந்தது, அதற்கான காரண காரியங்கள் எவை என்பது குறித்துப் பல வகையறாக்கள் வெளிவருவதும் வேறு சில கிசு கிசுக்கப்படுவதும் உண்டு. சம்பவத்தை நேரில் கண்டவர்களும்கூட ஆளுக்கு ஆள் வெவ்வேறு விதமாக வர்ணிப்பதும் கருத்துச் சொல்வதும் அந்த வகையினதே.

குடாநாட்டில், சமாதான காலம் வந்த பின்னரான அண்மைக்காலத்தில் இரண்டு மாத இடைவெளியில் நடைபெற்ற, ஒரே பாணியில் நடத்தப்பட்ட கொலைகள் குறித்த நிலையும் அத்தகையனவே.

அளவெட்டி, சங்கானை, உரும்பிராய் ஆகிய இடங்களில் நடத்தப்பட்ட கொலைகள், கொள்ளைக்காக என்ற போர்வையில் நடைபெற்றிருப்பது குடாநாட்டில் மக்கள் மத்தியில் பீதியை அதிகரித்து வருகிறது. வீடுகளில் இரவில் தங்கியிருக்க முடியாத நிலையை உருவாக்கி உள்ளது.

எறிகணை வீச்சுக்கள், குண்டு வீச்சுக்கள் நடைபெற்ற காலங்களில் மக்கள் இரவு வேளைகளில் ஆலயங்களிலும் பாடசாலைகளிலும் தங்கியது போன்ற தேவை நிலை உருவாகி வருகிறது. காற் பவுண் நகையைக் கொள்ளையடிக்க வந்த போர்வையில் ஓர் உயிரைப் பறிக்கும் நிலைக்கு குடாநாட்டில் மக்களின் பாதுகாப்பு நிலை சீர்கெட்டுள்ளது. இது மிகவும் பயங்கரமான சூழல் ஆகும்.

ஒரு கொலைச் சம்பவம் நடைபெற்றதும், விசாரணை, கைது என்று காட்டப்படும் வேகமும் வீச்சும் சில நாள்களில் அடங்கிப் போகின்றன; தணிந்து நூர்ந்து விடுகின்றன.

கொலைகளுக்கான உண்மையான காரணங்கள், நோக்கங்கள் கண்டறியப்பட்டு அவற்றின் சூத்திரதாரிகள் இனங்காணப்பட்டு, சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டுத் தண்டிக்கப்படாவிட்டால், அதுவும் சம்பவம் ஒன்று நடைபெற்ற ஒரு சில வாரங்களில் நடைபெறாவிட்டால், அவை பெருகிச் செல்லவே வழி கோலும்.

கொலைச் சம்பவங்களுக்கான உள்நோக்கங்கள் கண்டறியப்படுவதிலும், புலனாய்வு செய்வதிலும், குற்றவாளிகளை இனம் காண்பதிலும் தாமதம் ஏற்படுவதால் அவற்றுக்குத் தூபம் இடப்படுகிறதா என்ற சந்தேகம் மக்களிடம் ஆழ ஊன்ற வழி பிறக்கும்.

மக்களின் உயிர்களைக் காப்பதற்கு பாதுகாப்பு மற்றும் சட்டம், ஒழுங்கு அமைப்புகளால் இயலவில்லை எனில் எந்தப் பிரதேசமும் மரண பூமியாக மாறும் அபாயம் உருவாகும் வாய்ப்புண்டு.

இதனைத் தடுப்பதற்கு போதிய அக்கறையும் விரைவான நடவடிக்கையும் தேவை. மந்தகதியில் நகர்ந்தால் மக்கள் தங்களுக்குரிய பாதுகாப்பை தேடிக்கொள்ள வேண்டிய தேவையும் கட்டாயம் உருவாகும்.

மேலும்-

சிவில் அமைப்புகளுடன் தோழமையான நிலையில் சேர்ந்து உழைக்கும் உத்திகளையும் விதிமுறைகளையும் வகுக்க உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இதில் பாதுகாப்பு, சட்டம், ஒழுங்கு சம்பந்தப்பட்டவர்கள் கூட்டாக அர்ப்பணிப்புடன் உழைக்க வேண்டும்.

காலம் தாழ்த்தப்படுவது மக்களின் உயிர்களைக் கேள்விக்குரியதாக்கும் நிலைக்குச் செல்லும். மக்களின் பாதுகாப்பு அத்துறை சார்ந்தோரின் பொறுப்பு என்று சிவில் அதிகாரிகளும் மக்கள் நலன் அமைப்புகள் என்று பட்டி கட்டியிருப்போரும் கைகட்டிப் பார்த்திருக்கக் கூடாது.

எல்லாத் தரப்புகளும் இணைந்து கூட்டாகச் செயற்பட வேண்டும். மக்கள் சேவையாளர் தரப்புகளைச் சேர்ந்த அதிகாரிகளும், சமூக நலன் அமைப்புகளின் பிரதிநிதிகளும் இணைந்து கொலைகளைத் தடுக்கக்கூடிய நடைமுறைச் சாத்தியமான, காத்திரமான வழிமுறைகளைக் கண்டறிய வேண்டும். அவற்றை செயல்படுத்துவதற்கு மக்களையும் ஒன்றிணைத்துச் செயற்படாவிட்டால் கொலைகளின் பின்னணிகளையும் அவற்றின் சூட்சுமங்களையும் கண்டறிவது கஷ்டமான காரியமாகி, அது தாமதமாகி உண்மையும், நீதியும் புதையுண்டு போகும் பேராபத்து உண்டு.

மக்களின் வாழ்க்கை நலன் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை விட அவர்களின் உயிர் பறிக்கப்படும் பயங்கரம் சமூகத்தை அழித்துவிடும். இதனைத் தடுக்க எல்லோரினதும் எல்லாத் தரப்புகளினதும் கூட்டு முயற்சியும் கூட்டு உழைப்பும் தேவை. வெறும் விளக்கம், வியாக்கியானம் குடாநாட்டு மக்களின் உயிர்களைக் காப்பாற்றா.

# வன்னி ஆசிரியர்களின் தற்காலிக இணைப்பு நாளை மறுதினத்துடன் முழுமையாக ரத்து

### ஜனவரி 3 முதல் சொந்தப் பாடசாலைகளில் கடமை

அச்சுவேலி, டிசெ.29

வன்னிப் பெருநிலப்பரப்புப் பாடசாலையில் இருந்து யாழ். மாவட்டம் உட்பட வெளி மாவட்ட பாடசாலைகளுக்கு இணைப்புச் செய்யப்பட்ட சகல ஆசிரியர்களது தற்காலிக இணைப்புக்களும் டிசெம்பர் 31ஆம் திகதியுடன் ரத்துச் செய்யப்பட்டுள்ளன. சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் தமது நிரந்தரக் கல்வி வலயங்களில் பதிவு செய்து ஜனவரி 03 ஆம் திகதி தமது நிரந்தர கல்வி வலயங்களில் உள்ள பாடசாலைகளில் கடமைப் பொறுப்புகளை ஏற்றுக்கொள்ள வேண்டும் என வடக்கு மாகாண கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

வன்னிப்பெருநிலப்பரப்பில் பாதிப்புக்கு உள்ளாகிய மற்றும் மீள ஆரம்பிக்கப்படாத பாடசாலைகளைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு யாழ். மாவட்டம் உட்பட வெளி மாவட்டப் பாடசாலைகளுக்கு தற்காலிக இணைப்பு வழங்கப்பட்டிருந்தது.

இவர்களுக்கான இணைப்புக்கள் மூன்று மாத இடை வெளியில் புதுப்பிக்கப்பட்டு வந்தன. அத்துடன் அவர்களுக்கு மாதாந்த வேதனம் யாழ்ப்பாணத்தில் உள்ள மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் பணிமனையில் வைத்து சம்பந்தப்பட்ட வலயக் கல்வி அலுவலகத்தினால் வழங்கப்பட்டு வந்தது. தற்காலிக இணைப்புக்கள் மூன்று மாதத்துக்கு ஒருதடவை என்ற வகையில் புதுப்பிக்கப்பட்டு வந்தன இந்த வகையில் வழங்கப்பட்டு வந்த சகல இணைப்புக்களும் ரத்துச் செய்யப்பட்டு சம்பந்தப்பட்ட ஆசிரியர் கள் நிரந்தர கல்வி வலயங்களுக்குச் சென்று தமது வருகையைப் பதிவு செய்து கொள்வதுடன் ஜனவரி 03 ஆம் திகதி தமது நிரந்த பாடசாலையில் கடமைப் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி நிரந்தர பாடசாலைகளில் கடமையைப் பொறுப்பேற்றுக் கொள்ளாதவிடத்து சம்பளம் இடைநிறுத்தப்படுவதுடன் மேல் நடவடிக்கைக்கும் உள்ளாக வேண்டி ஏற்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை மீள ஆரம்பிக்கப்படாத பாடசாலைகளில் கற்பித்த ஆசிரியர்களுக்கு வன்னியில் வசதியான வேறு பாடசாலைகளுக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது. வசதியான பாடசாலைகள் வலயக் கல்வி அலுவலகத்தில் பதிவு செய்யப்படும் முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படவுள்ளது என முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார். (த-11)

# பிரதிக் கல்விப் பணிப்பாளர் கொலை; ஒருமைப்பாட்டு அமைச்சு கண்டனம்

யாழ்ப்பாணம் டிசெ.29

வலிகாமம் வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் மார்க்கண்டு சிவலிங்கத்தின் படுகொலையை தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு வன்மையாகக் கண்டித்துள்ளது.

இது தொடர்பாக வாசுதேவ நாணயக்காரவின் பொறுப்பிலுள்ள அந்த அமைச்சு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:

குடாநாட்டில் தொடர்கின்ற கொடூரமான கொலைகள் தொடர்பில் ஆழ்ந்த அதிர்ச்சி அடைகிறோம். இவ்வாறான நாசகார வேலைகளை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இவ்வாறான கொடூரமாக நிகழ்வுகள் தொடராமல இருப்பதற்கு பாதுகாப்புத்துறையினரும் பொதுமக்களும், பொறுப்பு வாய்ந்தவர்களும் இணைந்து செயற்பட வேண்டுவதோடு மரணமடைந்த உதவிக் கல்விப் பணிப்பாளரின் குடும்பத்துக்கும் குடாநாட்டின் ஆசிரியர் சமூகத்துக்கும் எமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அத்தோடு மரணமடைந்த பிரதிக் கல்விப் பணிப்பாளர் குடும்பத்தினருக்குத் தேவையான உதவிகளை செய்யுமாறு யாழ்.மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபரின் உதவியாளர் உதவி பொலிஸ் அத்தியட்சகர் அபேசிங்க பண்டார, பொலிஸ் பரிசோதகர் கருணாரத்ன, கோப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மஹிந்த வைத்தியதிலக்க ஆகியோருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது - என்றுள்ளது. (த)

# பல லட்சம் பெறுமதியான நகைகள் பருத்தித்துறைக் கடையில் திருட்டு

வடமராட்சி, டிசெ.29

பருத்தித்துறை நகரில் நேற்று முன்தினம் இரவு நகைக்கடை ஒன்றின் கூரை பிரிக்கப்பட்டுப் பல லட்சம் ரூபா பெறுமதியான நகைகள், வெள்ளிப் பொருள்கள் என்பன திருடப்பட்டுள்ளன.

நகரின் மத்தியில் யாழ்ப்பாண பிரதான வீதியில் உள்ள நகைக் கடை ஒன்றிலேயே இத்திருட்டு இடம்பெற்றுள்ளது.

கடையில் வைக்கப்பட்டிருந்த சுமார் 25 சோடி பெண்கள் அணியும் காற்சங்கிலிகள், திருத்த வேலைகளுக்காக ஒப்படைக்கப்பட்ட சில சிறு நகைகள் என்பனவே திருடப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் குறித்து பருத்தித்துறை பொலிஸில புகார்செய்யப்பட்டதைத் தொடர்ந்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர் திருட்டு இடம்பெற்ற நகைக் கடைக்கு நேற்று நண்பகல் சென்ற பொலிஸார் கைவிரல் அடையாளங்களைப் பதிவுசெய்தனர். (த-206)

### உள்ளூராட்சி தேர்தல்கள் திருத்தச்சட்ட மூலம்

# திருத்தங்கள் வெளிவந்த பின்னரே முடிவு என்கிறது கூட்டமைப்பு

கொழும்பு, டிசெ.29

''உள்ளூராட்சித் தேர்தல்கள் திருத்தச் சட்ட மூலம் நாடாளுமன்றில் சமர்ப்பிப்பதற்கு முன்னர் அதில் மேற்கொள்ளப்படவுள்ள திருத்தங்களை அறிந்து கொண்ட தன் பின்னரே ஆதரவு வழங்குவதா அல்லது எதிர்ப்புத் தெரிவிப்பதா என்பது குறித்து தீர்மானிக்கப்படும்''- என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் உதயனுக்குத் தெரிவித்தார்.

உள்ளூராட்சித் தேர்தல்கள் திருத்தச் சட்ட மூலம் எதிர்வரும் 4ஆம் திகதி அரசினால் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. இந்த நிலையில், உத்தேச திருத்தச் சட்ட மூலத்தில் கொண்டு வரப்படவுள்ள திருத்தங்கள் உள்ளிட்ட விடயங்களை வரும் 3ஆம் திகதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு பெற்றுத் தருவதாக அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார் என்றும் அவர் கூறினார்.

அதன் பின்னரே உத்தேச திருத்தச் சட்ட மூலத்துக்கு ஆதரவு வழங்குவதா, எதிர்ப்புத் தெரிவிப்பதா அல்லது மேலும் கொண்டுவரப்பட வேண்டிய திருத்தங்கள் தொடர்பாக வரும் 3ஆம் திகதி முடிவு செய்யப்படவுள்ளது என்று சுமந்திரன் எம்.பி கூறினார். (சி)

## நாளை

மார்கழி 15 30.12.2010

வியாழக்கிழமை

திதி: : தசமி

மு.இ .07.17 வரை

நட்சத்திரம் : சுவாதி

பி.இ.04.31 வரை

சுபநேரம் : 7.59 - 09.29 வரை

ராகுகாலம் : 01.59 - 03.29 வரை

# காலி– மாத்தறை அதிவேக ரயில் பாதை ஜனவரி 15 ஆம் திகதி அங்குரார்ப்பணம்

கொழும்பு, டிசெ.29

காலிக்கும் மாத்தறைக்கும் இடையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வரும் ரயில் பாதை அடுத்த வருடம் ஜனவரி மாதம் 15 ஆம் திகதி போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கமவினால் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்படுமென ரயில்வே திணைக்களத்தின் திட்டமிடல் பணிப்பாளர் விஜய சமரசிங்க தெரிவித்தார்.

அன்றையதினம் காலியிலிருந்து ஹிக்கடுவ வரையிலான ரயில் பாதையின் இரண்டாம் கட்ட வேலைகளும் ஆரம்பித்து வைக்கப்படும். இதன் காரணமாக ஜனவரி 15 ஆம் திகதி முதல் காலி- ஹிக்கடுவ பாதை முற்றாக மூடப்படும்.

அதற்கமைய கொழும்பிலிருந்து மாத்தறை வரைக்கும் ரயில் சேவை நடைபெறுவதுடன் ஹிக்கடுவவிலிருந்து காலிக்கு ஒருங்கிணைந்த பஸ்சேவை நடத்தப்படும். ரயில் பயணிகளுக்கு அசௌகரியங்கள் ஏற்படாத விதத்தில் ரயில்வே திணைக்களம் உரிய ஏற்பாடுகளை மேற்கொள்ளும்.

ஹிக்கடுவ காலி ரயில் பாதை நிர்மாணிக்கப்படும்வரை அவ்விரு நிலையங்களுக்கும் இடையிலுள்ள ரயில் நிலையத்தில் பணிபுரிபவர்கள் தற்காலிகமாக வேறு ரயில் நிலையங்களுக்கு இடமாற்றம் பெறுவர் என்று விஜய சமரசிங்க மேலும் தெரிவித்தார். (த-5)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## துயர் பகிர்கின்றோம்

கேசாவில் பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட எமது சகோதரன் **யோகின்பநாதன்** காலமான செய்திகேட்டு துயர் அடைந்திருக்கின்றோம். அன்னாரின் குடும்பத்தினர் மற்றும் அவர்களது சகோதரர்களின் துயரத்தில் நாமும் பங்குகொள்வதோடு, அன்னாரின் ஆன்மா சாந்தியடைய கேசாவில் முத்துவிநாயகரை வேண்டுகின்றோம்.

துவாரகா புவனேஸ்வரி,
நாவலடி லேன், வண்ணார்பண்ணை
021 222 5076. (103121)

திரு.திருமதி
நித்தியானந்தன் கலா
(ஜேர்மனி).

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கந்தையா பாக்கியம்மா (சோதி)

*(ஓய்வுபெற்ற ஆசிரியை, யா/டிறிபேக் கல்லூரி)*



சாவகச்சேரி, சிவன்கோயிலடியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா பாக்கியம்மா 21.12.2010 செவ்வாய்க்கிழமை அமரத்துவம் அடைந்துள்ளார்.

அன்னார் கந்தையாவின் அன்பு மனைவியும் சிறிதர், கிருபா, கீதாஞ்சலி ஆகியோரின் அன்புத் தாயும் சுபத்திரா, அருணகிரிநாதன், குருபரநாதன் ஆகியோரின் மாமியுமாவர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.12.2010) வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு வவுனியாவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பூந்தோட்டம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.26, வைரவர் புளியங்குளம்,
வவுனியா.
தொ.பே.: 0774937577. (சி/573755)

தகவல்:
குடும்பத்தினர்.

### வல்லிபுரம் அம்பலவாணர்



குமரகோட்டம், கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் அம்பலவாணர் கடந்த (25.12.2010) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - சின்னத்தங்கச்சி தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான சரவணச்செல்லையா - ராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், ராசம்மா, பரமசாமி காலஞ்சென்ற தங்கமணி ஆகியோரின் அன்பு சகோதரனும், இராசகுலேந்திரன், இராசகுலசிங்கம், இராசலட்சுமி, இராஜேஸ்வரி ஆகியோரின் பாசமிகு தந்தையும் சாந்தினி, கலைவாணி, பரமேஸ்வரன், சசிக்குமார் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சுதேஸ், சுரேன், ஆரணி, கிசோர், ஆர்த்தி, ரஜிதா, ரஜீவன், ரதீஷா, சதுர்ஷா, சர்ஜின் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.12.2010) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில், காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குமரகோட்டம்,
கோண்டாவில் மத்தி. (108117)

தகவல்:
குடும்பத்தினர்.

## கரவெட்டி பிரதேச செயலக ஒளி விழா இன்று

யாழ்ப்பாணம், டிசெ.29

வடமராட்சி தெற்கு, மேற்குப் பிரதேச செயலக உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கத்தின் ஒளிவிழா நிகழ்வு இன்று புதன்கிழமை முற்பகல் 10மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கரவெட்டி பிரதேச செயலர் எஸ். சத்தியசீலன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக கரவெட்டி அந்தோனியார் ஆலய பங்குத் தந்தை அருட் தந்தை எமில் போல், கட்டைவேலி மெதடிஸ்த தேவாலய போதகர் அருட்திரு. எஸ். டபிள்யு. தேவகுமார் மற்றும் உடுப்பிட்டி தென்னிந்திய திருச்சபை போதகர் அருட்திரு எம்.பி.ஜெயநேசன் ஆகியோர் கலந்துகொள்வர்.

இதன்போது தலைமை உரையை கரவெட்டி பிரதேச செயலர் சத்தியசீலன் நிகழ்த்தவுள்ளார். தொடர்ந்து விருந்தினர்களின் உரைகள் இடம்பெறும். அதன்பின்னர் கலை நிகழ்சிகள் இடம்பெறும். (த-319)

## சீரற்ற காலநிலையால் கச்சான் செய்கை பாதிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.29

சங்குவேலி, கந்தரோடை ஆகிய பிரதேசங்களில் கச்சான் செய்கைக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக அப்பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

தற்போது நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக சில நாள்களுக்கு முன் விதைக்கப்பட்ட கச்சான் பாதிக்கப்படக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. நிலங்களில் மழை வெள்ளம் தேங்கி நிற்பதால் முளைவிட்டுள்ள கச்சான் பயிர்கள் அழுகி அழிவடையும் நிலை ஏற்பட்டுள்ளதாக அப்பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

சீரற்றகாலநிலை மேலும் தொடர்ந்தால் கச்சான் செய்கை முற்றாக அழிவடையும்நிலை ஏற்படவுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.(த-313)

## பெயர் மாற்றம்

சுப்பாஷோ டிஜிற்றல் கலர் லாப் அன்ட் ஸ்ருடியோ என இயங்கி வந்த எமது ஸ்தாபனம் 01.01.2011 தொடக்கம் பெஸ்ட் லைன் டிஜிற்றல் கலர் லாப் அன்ட் ஸ்ருடியோ எனப் பெயர் மாற்றம் செய்யப்படுகின்றது என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

198/6, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

(சி/573752)


**Computer Express**
Institute of Information Technology
No.15 ,Sirampiyady lane, off Stanly Road, (Cosy Hotel 2nd floor) Jaffna.
021 222 8250, 0777222422

Diploma in Microsoft Office 1000/= 3 Months
Diploma in Desktop Publishing 1000/= 4 Months
Diploma in Web Page Designing 1000/= 3 Months
Diploma in Graphic Designing 1000/= 4 Months
Diploma in Hardware Engineering 1000/= 3 Months
Diploma in Auto CAD 1000/= 3 Months
Diploma in Computer Science 1000/= 4 Months
Honors Diploma in Computer Science 1000/= 3 Months

Advances Courses
Diploma in Video Editing 4Months 1000/=
Diploma in Multimedia 4Months 1000/=

சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்.
வரையறுக்கப்படாத கணனிப் பயிற்சி கொழும்பில் இருந்து வருகை தரும் பிரபல விரிவுரையாளர்களினால் வகுப்புகள் நடாத்தப்படும்.

Batch i - 29/12/2010 9am or 3pm
Batch ii - 31/12/2010 9am or 3pm
Batch iii - 01/01/2011 9am or 3pm
Batch iv - 02/01/2011 9am or 3pm


10/01/2011 க்கு முன் பதிவுகளை மேற்கொள்ளுங்கள்.

மேலும் எமது நிறுவனத்தில்...
Fast track Courses ஆக
1Week course / 1 Month Course
Monday to Friday 9Am to 3.30Pm
Diploma in Graphic Designing
Diploma in Video Editing
Diploma in Hardware Engineering.
Diploma in Acc.Package.
Course Fee 1000/=
மேலதிக விபரங்களுக்கு எமது நிறுவனத்துடன் தொடர்புகொள்ளுங்கள்...

G.C.E O/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களே! உங்கள் கணனிக்கற்கை நெறியின் எதிர்கால கனவுகளை நிறை வேற்ற விஷேட கட்டணக் கழிவுடன் கணனிக் கற்கை நெறிகள் ஆரம்பமாகின்றன பதிவுகளுக்கு முந்துங்கள்.

Accpac+Quick Book+MYOB
Tally Classes ஆரம்பமாக உள்ளன
New Batch:- Saturday & Sunday Batch:-10am-11am
(01/01/2011) (02/01/2011)Batch:-2pm - 3pm


## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி சறோசா குமாரசிங்கம்

(உரிமையாளர், அனஸ் வீடியோ தொலைத்தொடர்புச் சேவை,சங்கானை)

மலர்வு 19 . 07 . 1944

உதிர்வு 29 . 12 . 2007

இல்லத்தில் இனிது வாழ்ந்து
இன்பச்செல்வங்களாய்ப்
பிள்ளைகளை வளர்த்து
இனிதேயவர்கள் வாழ வழிகாட்டி
இன்முகத்தோடு சீராட்டிப் பாராட்டி
வளர்த்த அம்மா!
நீங்கள் மறைந்து மூன்றாண்டுகள்
ஆனதுவோ?
நீங்கள் மறுபடியும் இங்குவந்து
பிறந்திடுங்கள் அம்மா!

எம்குலதெய்வத்தின் நினைவு நீங்கா இதயங்கள்:
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

"சறோ இல்லம்", சந்தி ஒழுங்கை, சங்கானை.
தொ.பே.: 0212250019.

(108120)





சாதாரணதர மாணவர்களுக்கான புதிய குறுங்காலப் பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

Uthayan
IT ISLAND GATEWAY CENTRE
347, Kasthuriyar Road, Jaffna 021 567 5555 / 021 222 7967
Luxmee Theatre Lane,Nelliyady 021 226 2395
New Market Building,Chavakachcheri 021 227 0323


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாங்கள் தமிழ் பேசும் மக்கள் தமிழர்களாகத் தான் வாழ வேண்டும்

## யாழ்ப்பாணத்தில் சுற்றாடல் பிரதி அமைச்சர் காதர்



யாழ்ப்பாணம், டிசெ. 29

நாங்கள் தமிழ் பேசும் மக்கள். தமிழர்களாகத்தான் வாழ வேண்டும். எங்களுக்கு வேறு நாடு இல்லை போவதற்கு. நாங்கள் எங்கேயும் போய் வாழ் முடியாது. இவ்வாறு சுற்றாடல் பிரதி அமைச்சர் அப்துல் காதர் தெரிவித்தார்.

யாழ்.பிராந்திய மரக்கூட்டுத்தாபனக்கிளை 9 மில்லியன் ரூபா செலவில் குருநகரில் கட்டப்பட்டு சுற்றாடல் அமைச்சர் அனுரபிரியதர்சன யாப்பாவினால் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தமை வருமாறு:

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான இந்த அரசாங்கம் ஜாதிமத பேதம் இல்லாமல் எந்தப் பிரச்சினையும் இல்லாமல் நாட்டைக் கொண்டு சென்று கொண்டிருக்கின்றது. நாங்கள் இலங்கையர் என்ற ரீதியில் செயற்பட வேண்டும் - என்றார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய சுற்றாடல் அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா,

இலங்கையில் நடைபெற்ற பயங்கரவாதத்தை முறியடித்து நாட்டில் சகோதரத்துவத்தையும் அமைதியையும் ஏற்படுத்தித் தந்தவர் ஜனாதிபதி மஹிந்த அவர்களே. அதனால்தான் நாங்கள் தரைமார்க்கமாக வந்து போகக் கூடியதாக இருக்கின்றது.

எல்லா மக்களும் ஒன்றாக வாழக் கூடியதாக, நாட்டின் அபிவிருத்தியின் அவசியமும், இந்த நாட்டை உலக அளவில் ஆச்சரியமாக மாற்றுதல் என்பதுவே எங்களது அபிலாஷை ஆகும்.

எதிர்வரும் இரு மாதங்களுக்குள் சில தினங்களை ஒதுக்கி இந்தப் பகுதியில் சுற்றாடல்வள இலாகா, அகழ்வுகள் தொடர்பான விழிப்புணர்வு மாநாட்டை நடத்த எண்ணியுள்ளோம் - என்றார்.

இந்த நிகழ்வில் அரச மரக் கூட்டுத் தாபத்தினத்தின் தலைவர் எஸ்.அமரசிங்க, பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மரக் கூட்டுத்தாபனத்தின் யாழ். பிராந்திய அதிகாரி எஸ்.சிறீஸ் கந்தராஜா, மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா ஆகியோர் கலந்து கொண்டனர். (த-15)

# தேசிய கீதம் இசையில் மட்டும்

யாழ்ப்பாணம், டிசெ. 29

யாழ்.பிராந்திய மரக் கூட்டுத்தாபனத்தின் அலுவலகத் திறப்பு விழாவின் போது தேசிய கீதம் இசையில் மட்டுமே ஒலிக்கப்பட்டது.

தேசிய கீதம் தொடர்பான சர்ச்சை வலுத்து வரும் நிலையில் அண்மையில் யாழ்ப்பாணத்தில் பிரதமர் கலந்து கொண்ட தேசியப் பாதுகாப்புத் தின நிகழ்வில் தமிழ் மாணவர்களினால் சிங்கள மொழியில் தேசிய கீதம் பாடப்பட்டது.

பிரதமர், ஜனாதிபதி கலந்து கொள்ளும் நிகழ்வில் சிங்களத்திலேயே தேசிய கீதம் பாடப்பட வேண்டுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் குறிப்பிட்டிருந்தார்.

இந்த நிலையில் அரச மரக் கூட்டுத்தாபனத்தின் நேற்றைய நிகழ்வில் சுற்றாடல் அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா, பிரதி அமைச்சர் அப்துல் காதர், பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் கலந்து கொண்டனர். இந்த நிகழ்விலேயே இவ்வாறு இசையில் தேசிய கீதம் ஒலிக்கப்பட்டது. (த-15)

# வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் 107 குடும்பங்களுக்கு நிவாரணம்

சண்டிலிப்பாய், டிசெ. 29

வலி.தென்மேற்கு, வலிகாமம் மேற்கு ஆகிய பிரதேசங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 107 குடும்பங்களுக்கு மீள்குடியேற்ற அமைச்சினால் உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

வன்னியில் இருந்து வந்து வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் மீள்குடியேறிய குடும்பங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 96 குடும்பங்களுக்கும் வலி.மேற்கு மீள்குடியேறிய குடும்பங்களில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட 11 குடும்பங்களுக்கும் வெள்ள நிவாரணத்துக்கான உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

வலி.தென்மேற்குப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் எழிலரசி அன்ரன் யோகநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வைத்து இவர்களுக்கான உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (த-115)




# கஞ்சா வைத்திருந்த இளைஞர் சண்டிலிப்பாயில் பொலிஸாரால் கைது

சண்டிலிப்பாய், டிசெ.29

இரண்டு கட்டுக் கஞ்சாவுடன் வீதியில் நடமாடிய இளைஞர் ஒருவர் சண்டிலிப்பாயில் பொலிஸாரிடம் அகப்பட்டுக் கொண்டார். கஞ்சாவைக் கைப்பற்றிய பொலிஸார் இளைஞரைக் கைது செய்து பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணை செய்து வருகிறார்கள்.

சண்டிலிப்பாய் பிரதேசத்தில் இளைஞர் ஒருவர் கஞ்சா வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளதாகப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து விரைந்து சென்ற மானிப்பாய் பொலிஸார் சந்தேகத்தின் பேரில் இளைஞர் ஒருவரை விசாரணை செய்த போது அவரிடம் இரண்டு கட்டுக் கஞ்சா இருந்து கண்டுபிடிக்கப்பட்டது. (த-115)

# சமுர்த்தி அலுவலக ஒளிவிழா

யாழ்ப்பாணம், டிசெ.29

பருத்தித்துறை பிரதேச செயலக சமுர்த்தி அலுவலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஒளிவிழா நிகழ்வு இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பருத்தித்துறை செபஸ்தியார் ஆலயத்தில் பருத்தித்துறைப் பிரதேச செயலர் எஸ். வரதீஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பருத்தித்துறை செபஸ்தியார் தேவாலய பங்குத் தந்தை அருட்திரு ஜே. மௌலிஸ் கலந்து சிறப்பிப்பார்.

இந்த நிகழ்வில் பருத்தித்துறை பிரதேசசெயலக சமுர்த்தி உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொள்வர். (த-319)

# மழை இன்றும் தொடரும்

யாழ்ப்பாணம், டிசெ. 29

தற்போது வடகீழ் பருவப் பெயர்ச்சிக் காலநிலை நிலவுகின்ற அதேவேளை வங்காள விரிகுடாவில் வழிமண்டலத்தில் சுழற்சிநிலை காணப்பட்டுள்ளதனால் இன்றும் மழை தொடரக் கூடிய சாத்தியக் கூறுகள் உள்ளதாக திருநெல்வேலியிலுள்ள வானிலை அவதான நிலையப் பொறுப்பதிகாரி எஸ். புஸ்பநாதன் தெரிவித்தார்.

கடந்த 27 ஆம் திகதி காலை 8.30 மணி முதல் நேற்று 28 ஆம் திகதி காலை 8.30 மணிவரை 24 மணி நேரத்தில் 24.8 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சியும். நேற்றுக் காலை 8.30 மணிமுதல் மாலை 5.30 மணிவரையும் 22.4 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும் பதிவாகியுள்ளன. அத்துடன் இன்று மழை பெய்யக் கூடிய நிலைமை காணப்படுகின்றது. சில சந்தர்ப்பங்களில் பலத்த மழையும் காற்றும் பலமாக வீசவும் கூடும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-14)

# வடமராட்சியில் கடும் மழை

வடமராட்சி, டிசெ.29

வடமராட்சிப் பிரதேசத்தில் நேற்று செவ்வாய் அதிகாலை முதல் மாலை வரை தொடர்ச்சியாக கடும் மழை பெய்தது.

இப்பெருமழையினால் பொது மக்களின் அன்றாட வாழ்க்கை பாதிக்கப்பட்டது. நெல்வயல்களுக்கு இம்மழை வரப்பிரசாதமாக அமைந்திருந்தது. அதே நேரத்தில் வெங்காயம் உள்ளிட்ட ஏனைய பயிர்வகைகளுக்கு சற்றுப் பாதிப்பாக இருந்தது.

நேற்று மாலை வரை இம்மழை தொடர்ந்ததால் தாழ்வான பகுதிகளில் வெள்ளம் ஏற்பட்டிருப்பதை காணக்கூடியதாக இருந்தது. (த-236)

# தினமும் நண்பகலுடன் மூடப்படும் வரணி பிரதேச வைத்தியசாலை

## நோயாளர் தரப்பில் விசனம்

யாழ்ப்பாணம், டிசெ.29

வரணி பிரதேச வைத்தியசாலை தற்சமயம் நண்பகல் 12 மணியுடன் மூடப்படுவதால் பிற்பகலில் நோயாளிகள் சிகிச்சை பெறமுடியாத நிலை உள்ளதாக நோயாளிகள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது வைத்தியாசாலை நண்பகலுடன் மூடப்படுகின்றது. முன்பு யுத்த சூழ்நிலையிலேயே அதனை நேரகாலத்துடன் மூட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

இவ் வைத்திய சாலையைத் தற் சமயம் பிற்பகல் 2.30 மணி வரையாவது இயங்க வைக்க நிர்வாகம் உதவ வேண்டும் என நோயாளிகள் நலன் விரும்பிகள் கோரியுள்ளனர்.

வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியர் ஒருவரை வட பிராந்திய சுகாதாரத்திணைக்களம் நியமித்தது. அவர் விடுதியில் தங்கி இருக்கும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இங்கு பிரசவவிடுதி 24மணி நேரமும் இயங்கியும் மருத்துவர் இல்லாத காரணத்தால் கர்ப்பிணிகள் இங்கு தங்கிச் சிகிச்சைபெற முன்வருவதில்லை எனவும் கூறப்படுகின்றது.

இதேவேளை -

இவ் வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் ஒன்றும் வழங்கப்படல் வேண்டும் எனவும், அவசர நோயாளர்களின் தேவை கருதி இது அவசியம் எனவும் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. தீடீர் சுகயீனம் ஏற்படும் நோயாளிகளை சாவகச்சேரி, யாழ்ப்பாணம் அல்லது மந்திகை வைத்தியசாலைக்கு கொண்டு சொல்வதற்கு இது உதவும் எனவும் நலன் விரும்பிகள் சுட்டிக்காட்டுகின்றனர். (த-122)

# மாநகர சபையில் நடந்த ஒளிவிழா ஒன்றுகூடல்



யாழ்ப்பாணம், டிசெ.29

யாழ். மாநகர சபையின் ஒளிவிழா ஒன்றுகூடல் நிகழ்வு நேற்று முன்தினம் மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் விருத்தினர்களாக பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய மாநகர சபையின் எதிர்க்கட்சித் தலைவர் மு. றெமிடியஸ். தமிழ் மக்களுக்கிடையிலான கசப்பான உணர்வுகள் நீக்கி, எங்களுக்குள் வேறுபாடுகளின்றி யாழ். மாநகரத்தை முன்னேற்ற அனைவரும் படிக்கற்களாக இருக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தனது உரையில்,

மாநகரசபையின் எதிர்க்கட்சித் தலைவர் கூறியதுபோல் அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால் ஒன்றிணைந்து எங்களுக்குரிய அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வு காணும் போக்கை வெளிப்படுத்துவோம். அதற்காக அனைவரும் ஒன்றிணைவோம்- என்றார்.

வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் சந்திரசிறி தனதுரையில் சமாதானம், ஒற்றுமை மூலம் அபிவிருத்தியை முன்னெடுப்பது போன்று கருணையும் மகிழ்ச்சியும் நீடிக்கக் கூடியதாக இந்த நத்தார் அமையும் எனத்தெரிவித்தார்.

முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, ஆணையாளர் மு.செ.சரவணபவ மற்றும் மதத் தலைவர்கள் ஆகியோரும் இங்கு உரையாற்றினார்கள்.

ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் பொன்னாடை போர்த்து நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இந்த வைபவத்தைப் புறக்கணிப்பதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாநகரசபை உறுப்பினர்கள் அறிவித்திருந்தபோதும் அவர்களில் சட்டத்தரணி மு.றெமிடியஸ், ப.மரியகொறற்றி ஆகியோர் இதில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (த-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளிநொச்சி அதிபர்கள் கூட்டம் இன்று

கிளிநொச்சி,டிசெ.29

கிளிநொச்சி மாவட்டப் பாடசாலை சாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் இன்று காலை 9 மணிக்கு கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் இடம்பெற விருக்கின்றது. முக்கிய விடயங்கள் ஆராயப்பட விருப்பதால் சகல அதிபர்களையும் சமுகமளிக்குமாறு பிரதிக் கல்விப் பணிப்பாளர்(திட்டமிடல்) திருமதி ஆர்.புவனராஜன் கேட்டுள்ளார்.

(ஐ)


### விற்பனைக்கு

ஐஸ்கிறீம் கோண் தயாரிக்கும் மெசின் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0777271334, 0714482301



### ECG Exercise

இருதய நோயாளர்களுக்கான (ஈ.சி.ஜி.) எக்ஸசைஸ் அமெரிக்கன் இயந்திரம் மூலம் யாழ்.பிரதான வீதி பிலிப் நேசிங் கோமில் செய்யப்பட்டு வருகிறது.

தொடர்புகளுக்கு :
தொ.பே. 0212224172
228, பிரதான வீதி,
(சிறைச்சாலை முன்பாக)
யாழ்ப்பாணம்.


## வாசகர் திருமுகம்

### ஒல்லாந்தர் காலத்து நிலைமை ஏற்பட்டாலும் ஏற்படலாம்

எமது நாட்டில் ஒல்லாந்தர் ஆட்சி நடைபெற்ற காலத்தில் மத அடக்குமுறை தலைவிரித்தாடியது. விரத நாளன்று சாப்பிட்ட வாழை இலையை வெளியே வீசக் கூட மக்கள் பயந்த காலம் அது. ஒவ்வொரு குடும்பமும் முறைவைத்துப் படையினரின் இறைச்சித் தேவைக்காக ஒவ்வொரு பசுமாடு வழங்க வேண்டும் என்று மக்கள் நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். இக்காரணத்தினால்தான் நல்லூர் ஞானப்பிரகாச அடிகளார் இந்தியாவுக்குச் சென்று வாழ்ந்தார்.

கோயில் வீதிகளுக்கு வரக்கூடாது. தாங்கள் சொல்லும் நாள்களில் பூசை நடத்தக்கூடாது. கார்த்திகைத் தீபம் ஏற்றக்கூடாது என்ற கட்டுப்பாடுகளின் தொடர்ச்சியாக எமது தேவைக்கு இன்ன இன்னவற்றை வழங்கவேண்டும் என்று படையினர் கட்டளையிட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. மேலிடம் அப்படி ஒன்றுமில்லை என்று மறுத்துக்கொண்டிருக்கும். கீழ் மட்டங்கள் இவற்றை நடத்தி முடிக்க அவகாசம் கிடைக்கும். ஆலவட்டம் பிடிப்பவர்களுக்கு இது சமர்ப்பணம்.

கொக்குவில். வை.சந்திரபாலன்.

### மருத்துவ மாணவர் வைத்தியர் ஒன்றுகூடலில்...

21.12.2010 அன்று 'தென்னிந்திய சினிமாதான் எங்கள் கலாசாரமா?' என்ற தலைப்பில் வாசகர் திருமுகம் பகுதியில் யாழ். மருத்துவபீட ஏழாவது அணி பழைய மாணவர்களினால் நடத்தப்பட்ட கலை நிகழ்ச்சிக்கு அவதூறு ஏற்படுத்தும் விதத்தில் வெளியிடப்பட்ட கருத்துத் தொடர்பாக நிகழ்ச்சி ஏற்பாட்டாளர் என்ற வகையில் உண்மை நிலையைத் தெளிவாக்க விரும்புகிறேன்.

வளர்ச்சியடைந்த பல்கலைக்கழக மருத்துவபீடங்களில் ஆண்டுதோறும் கல்வி சார் ஒன்றுகூடல் நிகழ்ச்சிகள் பழைய மாணவர்களின் உதவியுடன் இடம்பெறுவது வழக்கம். யாழ்.மருத்துவபீடம் ஆரம்பிக்கப்பட்டு 25 வருடங்கள் கழிந்துவிட்ட நிலையிலும் உள்நாட்டுப்போரினால் பாதிக்கப்பட்ட நிலையில் கல்வி சார் ஒன்றுகூடல் நிகழ்வுகள் ஆரம்பிக்கப்படாத நிலையில் முதன்முறையாக மருத்துவபீட 7ஆவது அணியைச் சேர்ந்த மருத்துவர்கள் மருத்துவபீட மற்றும் யாழ்.போதனா வைத்தியசாலையில் கற்பித்த ஆசிரியர்களைக் கௌரவிக்கும் வகையிலும் தற்போதைய மருத்துவ மாணவர்களை ஊக்கப்படுத்தும் வகையிலும் ஒரு கல்விசார் ஒன்றுகூடல் நிகழ்ச்சியை 18.12.2010 அன்று நடத்தினார்கள்.

காலை 8.30 மணியளவில் மருத்துவபீடத்தில் ஆரம்பிக்கப்பட்ட நிகழ்வு 200 இற்கு மேற்பட்ட சிரேஷ்ட மருத்துவ மாணவர்களின் பங்குபற்றலுடன் 7ஆம் அணியைச் சேர்ந்த மருத்துவ நிபுணர்கள், சிரேஷ்ட மருத்துவர்களின் விரிவுரைகள், கல்விசார் கலந்துரையாடலுடன் கற்பித்த ஆசிரியர்களை கௌரவிக்கும் நிகழ்வுடன் 5 மணியளவில் முடிவுற்றது. இநத நிகழ்வில் கலந்துகொள்வதற்காக யாழ். மருத்துவபீட 7 ஆவது அணியைச் சேர்ந்த மருத்துவ நிபுணர்களும் சிரேஷ்ட மருத்துவர்களும் உலகின் பல பாகங்களிலும் இருந்து வந்து கலந்துகொண்டார்கள்.

மருத்துவ மாணவர்களை ஊக்குவிக்கும் இந்த நிகழ்வின் தொடர்ச்சியாக தமிழினத்தைக் காரிருள் சூழ்ந்துள்ள இன்றைய கால கட்டத்தில் எமது தமிழ்க் கலாசாரத்தைப் பாதுகாக்கும் நோக்கிலும் மருத்துவ சமுதாயம் களிப்புறவேண்டும் என்ற நோக்கிலும் கைலாசபதி மண்டபத்தில் பிரத்தியேக கலாசார நிகழ்வு ஒன்று எம்மால் ஒழுங்கு செய்யப்பட்டது. இந்த நிகழ்வுக்கு மருத்துவ ஆசிரியர்களும் மருத்துவபீட 7ஆவது மருத்துவ அணியைச் சேர்ந்த மருத்துவர்களும் தற்போதைய மருத்துவ மாணவர்களும் அவர்களது குடும்பத்தினரும் மாத்திரமே அழைக்கப்பட்டிருந்தனர். நிகழ்வை ஒழுங்குபடுத்த எமக்கு உதவிய ஆங்கில விரிவுரையாளர் ஒருவரைத் தவிர ஏனைய பீடங்களைச் சேர்ந்த எந்தவொரு விரிவுரையாளருக்கும் அழைப்பு விடுக்கப்படவில்லை.

மேலும் அழைப்பிதழில் கலாசார நிகழ்வுகள் மாலை 6.15 மணிக்கு ஆரம்பமாகும் என்று குறிப்பிடப்பட்டிருந்தும் கல்வி சார் நிகழ்வுகள் 5 மணிவரை நீடித்ததனால் கலாசார நிகழ்வுகள் 45 நிமிடங்கள் தாமதமாக மாலை 7 மணியளவில் தொடங்கின. இதையறியாது நிகழ்வுகள் 2 மணி நேரம் தாமதமாகத் தொடங்கியதாக குற்றச்சாட்டை சுமத்தியிருப்பதன் மூலம் எழுதியவர் அழைப்பிதழைப் பார்க்கவில்லை என்பது நிரூபணமாகிறது.

அறிவிப்பாளரின் தமிழ் உச்சரிப்பும் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலும் அழைக்கப்பட்ட விருந்தாளிகளுக்கு திருப்தியாகவே இருந்தது. தமிழில் உயர்தரம் வரை கற்கும் மாணவர்கள் ஆங்கிலத்தில் மருத்துவபீட கற்கை நெறியை மேற்கொள்வதோடு மருத்துவப் பட்டத்தைப் பெற்றுக்கொள்ளும் நிலையில் உலகின் எந்தப் பகுதியிலும் மருத்துவராகக் கடமையாற்றக் கூடிய தகைமையைக் கெண்டிருக்க வேண்டும். இந்த நிலையை அடைவதற்கு மாணவர்களை வழிப்படுத்தும் முறையில் மருத்துவபீட ஒன்றுகூடல் நிகழ்வுகள் வழமையாக தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் நடத்தப்படும்.

இதற்கமைய பிரதான அறிவிப்பாளர் தமிழில் அறிவிப்புக்களை மேற்கொண்ட வேளையில் நான் ஆங்கிலத்தில் வரவேற்புரையை மேற்கொண்டேன். மருத்துவ பீடத்தின் இந்தக் கலாசாரத்தை அறியாது விரிவுரையாளர் ஒருவர் ஆங்கில வரவேற்புரையைக் குறை கூறியிருப்பது வேதனைக்கு உரியதாகும்.

விரசம் இல்லாத தமிழ் சினிமாப் பாடல்களும் தென்னிந்திய பக்திப் பாடல்களும் கோயில்களிலும் திருமணம் போன்ற எமது கலாசார நிகழ்வுகளிலும் கடந்த காலங்களில் கைலாசபதி மண்டபத்தில் இடம்பெற்ற ஏனைய ஒன்றுகூடல் நிகழ்வுகளிலும் இடம்பெற்றிருந்தும் எமது ஒன்றுகூடல் நிகழ்வில் இவற்றைப் பயன்படுத்துவதாகக் குற்றம் கண்டிருப்பது புதுமையாக இருக்கிறது.

முரளி வல்லிபுரநாதன்
சமுதாய மருத்துவ நிபுணர்
(யாழ்.மருத்து[illegible])


## கொவிசெத

உத்தியோகப்பூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 787
சீட்டிழுப்பு திகதி 27.12.2010

எழுத்து: S
வெற்றி இலக்கங்கள்: 03 18 29 61

| | பொருத்தங்கள் | பரிசுத்தொகை | வெல்லப்பட்டோர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில வழுத்துடன் 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 11,187,497.60 | 01 |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000,000/= | 01 |
| 2ம் பரிசு | ஆங்கில வழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 20,000/= | 11 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 2,000/= | 312 |
| 4ம் பரிசு | ஆங்கில வழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000/= | 616 |
| 5ம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100/= | 15528 |
| 6ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் ஒரு இலக்கம் சரியாயின் | ரூ. 40/= | 8774 |
| 7ம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூ. 20/= | 220074 |
| 8ம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூ. 20/= | 34667 |

இம்முறை வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 20,646,077.60

அடுத்த வார சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூபா. 10,000,000.00

வெற்றிப் பெறும் சீட்டுகள் மோதங்களுக்குள் மட்டுமே செல்லுப்படியாகும். ஐந்து இலட்சமோ இதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவுதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தேசிய லொத்தர் சபை
234/ 2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர தேவைக்கு: 2473360
இணையதளம்: www.nlb.lk


ஓம் விராட் விஸ்வப் பிரமனே நம

## 24ஆம் பிறந்த நாள் நினைவும் 1ஆம் ஆண்டு நினைவஞ்சலியும்



செல்வி யசோபாரதி தில்லையம்பலம்

உள்ளகப் பயிற்சி ஆசிரியர் (3ஆம் வருடம்),
தேசிய கல்வியியற் கல்லூரி,
மட்டக்களப்பு

திதி: துவாதசி

மனம் மகிழ 29 . 12 . 1986
மனம்நெகிழ 28 . 12 . 2009

கல்வியிலே கரை கண்டிடவென
கல்வியியற் கல்லூரியிலே
கண்டாய் பல சாதனைகள்
காத்திருந்த எங்களுக்கு
காலனவன் தந்து விட்டான்
காலமெல்லாம் உன் நினைவுகளை
காரணமே புரிந்திடா உன் மறைவு தனை
காலந்தான் உணர்த்த வேண்டும்
உன் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்.

நிரந்தர முகவரி:-
நாவற்குழி கிழக்கு,
கைதடி.

தற்காலிக முகவரி:-
பருத்தித்துறை வீதி,
[illegible], சாவகச்சேரி.

தொலைபேசி:-0772719958, 0776590369.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவு வரும் புலம்பெயர் பறவைகளை வேட்டையாட வேண்டாமென அரசு எச்சரிக்கை

முல்லைத்தீவு,டிசெ.29

ஐரோப்பா மற்றும் சைபீரியா போன்ற நாடுகளில் இக்காலப்பகுதியில் அசாதாரணமான குளிர் நிலவுவதால் அந்நாடுகளிலுள்ள பறவைகள் முல்லைத்தீவு மாவட்டத்தை நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு வரும் பறவைகள் இறைச்சித் தேவைக்காக வேட்டையாடப்படுவதாகவும் கூறப்படுகின்றது. இருப்பினும் குறித்த பறவைகளினால் முல்லைத்தீவு மாவட்டத்தில் பறவைக் காய்ச்சல் பரவக் கூடிய அபாயம் இருப்பதால் அவற்றை வேட்டையாட வேண்டாம் என்று சுகாதாரத் தரப்பினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை குறித்த பறவைகளால் முல்லைத்தீவு மாவட்டத்தில் பறவைக் காய்ச்சல் ஏற்படும் அபாயம் உள்ளதால் அவற்றைச் சுட்டுக்கொல்வதற்கான உத்தரவு பாதுகாப்புத் தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இருப்பினும் குறித்த பறவைகளினால் பொது மக்களுக்கு எவ்வித ஆபத்தும் ஏற்படாத நிலையில் அவற்றின் வருகையைத் தடுக்க எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படமாட்டாது எனவும் அவற்றை சுட்டுக்கொல்வதற்கான உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை என்றும் இராணுவ பேச்சாளர் மேஜர் ஜெனரல் உபய மெதவல தெரிவித்தார்.

# விற்ற காணிகளை திருப்பிக் கேட்பதால் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் முறுகல்

முல்லைத்தீவு,டிசெ.29

ஒட்டுசுட்டான்பிரதேசத்தில் தமது காணிகளை விற்றுவிட்டுச் சென்றவர்கள் மக்கள் தற்போது திரும்பிவந்து அந்தக் காணிகளைப் கைப்பற்ற முயல்வதால் முறுகல் நிலை தோன்றியுள்ளது. தாம் சிரமங்களை எதிர்கொள்வதாக பணம் கொடுத்துக் காணிகளை வாங்கிய மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் முத்து ஐயன்கட்டுக் குளத்தின் கீழ் காணிகள் பெற்று வாழ்ந்த முஸ்லிம் மக்கள் அப்போதைய சூழ்நிலை காரணமாக தமது காணிகளை விட்டு வெளியேறினர். பின்னர் சமாதான காலத்தில் திரும்பி வந்து புலிகளின் அனுமதியோடு தமது காணிகளைப் பணம் பெற்றுக் கொண்டு அறுதியாக விற்றுவிட்டுச் சென்றனர். தற்போது இவர்கள் மீண்டும் இங்கே வந்து தமது காணிகளை அடாத்தாகப் பிடிப்பதற்கு முயற்சி செய்கின்றனர் எனப் பணம் கொடுத்துக் காணிகளை வாங்கியவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்தக் காணிப் பிரச்சினை காரணமாக இருபகுதியினருக்குமிடையில் முறுகல் நிலையும் தோன்றியுள்ளது. (க-500)

# கற்சிலைமடுக் கிராமத்தில் வாழ்வாதாரக் கடன் திட்டம்

முல்லைத்தீவு,டிசெ.29

கற்சிலை மடுக் கிராமத்தில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு வாழ்வாதாரக்கடன் வழங்கும் நிகழ்வு கடந்த 23 ஆம் திகதி நடைபெற்றது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின்கீழ் இயங்கும் மீள் எழுச்சித் திட்டத்தில் கற்சிலை மடுக்கிராமம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இந்தக் கிராமத்தில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு வாழ்வாதாரக் கடன்களை வழங்கும் நிகழ்வே கடந்த 23 ஆம் திகதி நடைபெற்றது.

இந்த நிகழ்வு கற்சிலை மடு கிராம அபிவிருத்தி அமைப்பு அலுவலகத்தில் அதன் தலைவர் ஜெயரட்ணம் தலைமையில் நடைபெற்றது. இதில் 41 பயனாளிகளுக்குத் தலா 30 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது.

ஏனைய மக்களுக்குச் சுழற்சி முறையில் இந்த நிதி வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் மீள் எழுச்சித் திட்ட சமூக வலுவூட்டாளர் செல்வி தனபாலசிங்கம் கலைச்செல்வி உரையாற்றுகையில் -

இந்தக் கடனின் பயன்பாடு பற்றியும், இதனைத் திருப்பிச் செலுத்தும் முறை பற்றியும் சிறு குழுக்களில் உள்ள அனைவருக்கும் இந்தப் பணம் சுழற்றி முறையில் வழங்கப்படவுள்ளதால் பெற்ற கடனையும் வட்டியையும் உரிய காலத்தில் செலுத்தி ஒத்துழைப்பு வழங்கினால் மேலும் கடனுதவிகள் விரிவாக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

மீள்குடியேறிய மக்களுக்கு வழங்கப்பட்ட இந்த வாழ்வாதாரக் கடன் மிகவும் பயனுள்ளதாக இருப்பதாக கடனைப் பெற்றுக் கொண்ட மக்கள் மகிழ்ச்சி தெரிவித்தனர். (க-500)

# உரமானிய விநியோகத்தில் ஏற்பட்ட குளறுபடி மானாவாரி நெற்செய்கையாளர்கள் பாதிப்பு

கிளிநொச்சி,டிசெ.29

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேசத்திற்குட்பட்ட ஊரியான் கிராமத்தில் காலபோக நெற்செய்கைக்காக வழங்கப்படும் உரமானியத்தில் குளறுபடிகள் நடந்துள்ளதால் தாம் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

ஊரியான் கிராம அலுவலர் பிரிவில் சுமார் 265 குடும்பங்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளன. இதில் கணிசமான குடும்பங்கள் காலபோக நெற்செய்கையினை மேற்கொண்டுள்ளன. இவர்களுக்கு ஐந்து ஏக்கர் நெல் வயல்களுக்கான உரமானியங்கள் வழங்குவதற்குத் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தினால் வழங்கப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் ஐந்து ஏக்கருக்கும் கூடுதலான நெற்செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகளும், ஊரியான் பிரதேச விவசாய அமைப்பினரும் இணைந்து ஒரே குடும்பத்தைச் சேர்ந்த குடும்பத் தலைவர், குடும்பத் தலைவி என ஒன்றுக்கு மேற்பட்ட தேசிய அடையாள அட்டைகளில் பதிவுகளை மேற்கொண்டு உரமானியங்களைப் பெற்றுள்ளனர். அத்துடன் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடாத குடும்பங்களின் பெயர்களிலும் உரமானியங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாறு பல்வேறு குளறுபடிகள் காணப்பட்டதால் மீளக் குடியேறியவர்களின் பங்கீட்டு அட்டைகளுக்கே உரமானியம் வழங்குவதென முடிவு செய்யப்பட்டுள்ளது ஆரம்பத்தில் இவ்வாறு பங்கீட்டு அட்டைகளுக்கு உரமானியம் வழங்கப் பட்டிருந்தால் ஏற்பட்ட குளறுபடிகளைத் தவிர்த்திருக்கலாமென விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

ஊரியான் பிரதேசத்தில் இரணைமடுக் குளத்தின் கீழான பெரும் நீர்ப்பாசனம், சிறியளவு நீர்ப்பாசனம், மானாவாரி போன்றவற்றின் கீழ் விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உரமானியம் வழங்குவதில் ஏற்பட்ட குளறுபடிகள் காரணமாக மானாவாரி நெற்செய்கையாளர்கள் தமக்கு இதுவரை உரமானியம் வழங்கப்படவில்லையெனவும், தாம் இதனால் பல்வேறு வகையிலும் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கின்றனர்.

இதேபோன்று ஊரியான் பிரதேச விவசாயிகளின் நிலம் பண்படுத்துவதற்கென செஞ்சிலுவைச் சங்கத்தினால் ஊரியான் விவசாய அமைப்பினருக்கு இரண்டு இருசக்கர உழவு இயந்திரங்கள் வழங்கப்பட்டன. இவற்றைக் கொண்டு ஒரு குடும்பத்திற்கு தலா இரண்டு ஏக்கர் நிலத்தைப் பண்படுத்தக் கூடியதாக உள்ளபோதிலும் அவ்வாறு செய்யாமல் விவசாய அமைப்பினைச் சேர்ந்த குறிப்பிட்ட ஒரு சில விவசாயிகளின் பெருந்தொகை நிலங்களைப் பண்படுத்துவதற்குப் பயன்பட்டுள்ளதாகவும் பாதிக்கப்பட்ட விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பான ஆதாரங்கள் யாவும் தம்மிடம் உள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். (க-11)

# அரச உத்தியோகத்தர்களுக்கும் உதவிகள் வழங்கக் கோரிக்கை

முல்லைத்தீவு, டிசெ.29

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட அரச உத்தியோகத்தர்களுக்கும் சாதாரண மக்களுக்கு வழங்கப்படுவதுபோன்று உதவிகள் வழங்கப்படவேண்டும்.

இவ்வாறு வேண்டுகோள் விடுத்திருக்கின்றார் ஒட்டுசுட்டான் இந்து தமிழ்க்கலவன் பாடசாலை அதிபர் திருமதி நித்தியகலா வேகாவனம் .

ஒட்டுசுட்டானுக்கு பயணம் செய்த அமைச்சர் ரிசாத் பதியுதீனிடம் அவர் இந்த வேண்டுகோளை விடுத்தார். அரச உத்தியோகத்தர்களும் சாதாரண மக்களைப் போன்றுதான் யுத்தாதின்போது துன்ப துயரங்களைச் சுமந்தவர்கள். இவர்களும் உறவுகளை இழந்தனர், சொத்துச் சுகங்களை இழந்தனர். இவர்கள் சிறிய குடிசைகள் அமைத்து பல இன்னல்களுடன் வாழ்ந்து வருகின்றார்கள்.

யுத்தத்தின்போது வன்னி மக்கள் அனைவருமே பாதிக்கப்பட்டவர்கள். எல்லோரும் பாதிக்கப்பட்ட நிலையில் அரச ஊழியர்களை வேறுபடுத்திப் பார்ப்பது சரியானதல்ல. அவர்களுக்கு எது இல்லையென்றாலும் தங்கு மிட வசதியாவது செய்து தர வேண்டுமென்றும் அவர் கேட்டுக்கொண்டார். (க-500)




## எதிர்காலத் தலைவர்கள்....



சூட்டப்படும் சின்னம்: முல்லைத்தீவு அளம்பில் றோ.க. வித்தியாலயத்தின் மாணவத் தலைவன் ஒருவருக்கு பாடசாலை அதிபர் இ.நேவிற் ஜீவநேசன் சின்னம் அணிவிக்கின்றார். (555)

# மண்ணைக் கொண்டு செல்லும் தென்பகுதி மக்கள்

முல்லைத்தீவு,டிசெ.29

தெற்கிலிருந்து முல்லைத்தீவு வரும் சிங்கள மக்கள் புலிகளின் தலைவர் பிரபாகரன் இருந்ததாகக் கருதப்படும்இடத்திலிருந்துமண்ணை எடுத்துச் செல்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது தெற்கிலிருந்து சிங்கள மக்களின் வருகை முல்லைத்தீவில் அதிகரித்துக் காணப்படுகின்றது. முல்லைத்தீவு, புதுக்குடியிருப்புப் பகுதிகளுக்கு நாளாந்தம் பஸ்கள் மூலம் ஏராளமான ஆண்கள், பெண்கள், இளைஞர்கள், யுவதிகள், சிறுவர்கள் எனப் பலரும் வந்து செல்கின்றனர். இவர்கள் புலிகளின் தலைவர் பிரபாகரன் இருந்தாகக் கருதப்படும் இடத்தில் இருந்து மண்ணை எடுத்துச் செல்கின்றனர்.

இந்த இடத்திற்கு வந்து செல்லும் மக்கள் மண்ணைக் கொண்டுசெல்லாமல் இருப்பதில்லை என்பது குறிப்பிடத்தககது. (க-500)

# கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளின் க.பொ.த.உயர்தரப் பரீட்சை முடிவுகள்

கிளிநொச்சி,டிசெ.29

**உருத்திரபுரம் ம.வி.**

**கலைப் பிரிவு**

சத்தியமூர்த்தி ஆஷா ஏ பி சீ, குகநாதன் மகிந்துஜா 2 பி சீ, கோபாலசிங்கம் சசீதா பி 2 சீ, இராசரட்ணம தசாயினி பி 2 சீ, தர்மலிங்கம் துவாரசா பி 2 சீ

**பூநகரி, நல்லூர் ம.வி.**

**கலைப் பிரிவு**

விஜயரத்தினம் தர்சிகா ஏ பி சீ, கந்தவேல் நிஷாந்தினி 2பி சீ , தருமராசா சுரேந்தினி பி 2 சீ, சுப்பிரமணியம் யாழினி பி 2 சீ, தாமோதரம் பிள்ளை தபேந்திகா பி 2 எஸ் ,

**திருவையாறு ம.வி.**

**வர்த்தகப் பிரிவு**

கனகசபை அகலியன் ஏ பி.சீ, சச்சிதானந்தம் சத்தியகலா ஏ பிசீ.

**கலைப் பிரிவு**

இராசேந்திரன் வனிதா 3 பி, கிருபைநாதன் அபிராமி ஏ பி சீ, பரமானந்தம் பிருந்தா பி 2சீ, பொன்னம்பலநாதன் ராஜேஸ்குமார் பி சீ எஸ்.

**கனகபுரம் ம.வி.**

**வர்த்தகப் பிரிவு**

கோகுலராசா கௌசிகள் பி 2சீ, மேரி ஜோசப் அன்ரனி நிதர்சன் பி2சி, எஸ், விஜயசீலன் பிறேமலதா பி சீ எஸ்,

**கலைப் பிரிவு**

பழனிச்சாமி செட்டியார் யாழின் பி2சீ , இராம கிருஷ்ணன் மயூரி பி சீ எஸ், ஜேசுராசா மேரிஜெனோசினி பி 2 சீ, அலெக்சாண்டர் திலீபன் பி 2 எஸ்.

**பிரமந்தனாறு ம.வி.**

**கலைப் பிரிவு**

குணரத்தினம் சிந்துஜா பி 2 சீ, குணசேகரம் தாமிலா ஏ பி சீ, தர்மலிங்கம் சயந்தினி பி2 சீ, தவராசா கௌசலா 2பி சீ .

**முழங்காவில் ம.வி.**

தில்லைநாதன் தனராஜ் ஏ 2 பி, நவரட்ணசிங்கம் கேதாயினி ஏ2பி, பேரின்பநாதன் விஜயநாதன் ஏ2பி, முடியப்பு சுலோஜினி ஏ 2பி, ஆனந்தன் புஸ்பராசா பி 2 சீ , யூனினானந் ஜெறோம்வாஸ் பி 2 சீ, செல்வநாயகம் பானுசங்கர் பி சீ எஸ், அன்ரனி அமல கௌரி பி 2 சீ , கென்றிசன் தவீது நிர்மலா ஏ 2 சீ. (க-405)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குழந்தைகள் கைத்தொலைபேசி பாவிப்பது நல்லதல்ல



இன்றைய அவசர உலகில் தொலைத் தொடர்பாடல் என்பது இன்றியமையாத ஒன்றாகிவிட்டது. சிறுவர் முதல் பெரியவர்வரை கைத்தொலை பேசியினை இப்பொழுது பயன்படுத்திவருகிறார்கள். இப்படியான தொலைபேசிப் பாவனையால் மூளை பாதிக்கப்படுவதாக பலர் குறிப்பிடுகின்றபோதிலும் இன்னமும் ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்படவில்லை.

இந்நிலையில் டோனி செவேல் என்ற மருத்துவர், குழந்தைகள் கைத்தொலைபேசி பாவிப்பது அவ்வளவு நல்லதல்ல என்று வலியுறுத்தியுள்ளார். ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்படாவிட்டாலும் வரமுன் காப்பது நல்லது என மேலும் குறிப்பிட்டுள்ளார். கைத்தொலைபேசிப் பாவனையின்போது வெளிப்படுகின்ற ஒலி, ஒளி என்பன சிறுவர்களின் மூளைக்கு நேரடியாகக் கடத்தப்படுவதால் அவர்களின் மூளை செயலிழக்கும் அபாயம் இருப்பதாகக் குறிப்பிடுகிறார். இந்தக் கதிர்களைத் தாங்கும் சக்தி சிறுவர்களின் கிடையாது எனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

யார் என்ன சொன்னாலென்ன, நாங்கள் இப்படித்தான் இருப்போம் என்பவர்களுக்கு இது ஒரு பொருட்டாகவே இருக்கப்போவதில்லை. இக்கருத்தில் எவ்வளவுதூரம் உண்மையிருக்கிறது என்பதை ஆராயாமல், வரமுன் காப்பது சிறந்தது என்பதற்கிணங்க செயற்பட்டால் எதையுமே நாங்கள் வெல்லலாம். ஆகையினால் குழந்தைகளிடம் கைத்தொலைபேசியினைப் பாவிக்கக் கொடுப்பதை தவிர்ப்பது நல்லதல்லவா?

அ.ஜானுசா,
கொடிகாமம்.

## இதயம் சிதறுகிறது

கடந்த காலங்களில்
விழுந்த
நினைவுகளை ரசித்துப்
பார்க்கிறேன்!
நெஞ்சம் தவிக்கிறது.....
பழகிய நாள்களில்
பதிந்த
வார்த்தைகளை
நினைத்துப்
பார்க்கிறேன்!
ஜீவன் துடிக்கிறது......
இதயத்தில் இருந்து
உன்
நினைவுகளை எண்ணிப்
பார்க்கிறேன்!
உடல் சிலிர்க்கிறது.....
உன் பாசம் கண்டு
துடித்த என் மனதை
இழக்க நினைக்கிறேன்!
இதயம் சிதறுகிறது....
உன்னுடன் இருந்த
ஒவ்வொரு
நாள்களையும்
மறக்க
நினைக்கிறேன்!—ஆனால்
முடியவில்லை.......?
ஏனோ தெரியவில்லை
நண்பியே!
உன் நினைவால் நான்
ஒரு
நடைப் பிணமாகத்
திரிகிறேன்!

க.அனுஷா,
*A/L 2010,*
யாழ். இந்து மகளிர் கல்லூரி.

## அதிக வேலை செய்யும் எறும்பு

எறும்புகள் கூட்டமாக வாழும் உயிரினங்கள். இவற்றில் ஆண், பெண், அலி என மூன்று வகை உண்டு. இவற்றில் அலி வகையைச் சேர்ந்த எறும்புகள் தான் அதிகம் வேலைகள் செய்யும். இவை மரங்களையும் நிலத்தையும் துளைத்தும் புற்றுக்களை உண்டாக்குகின்றன.

இவைதான் பெண் எறும்புகள் இடும் மூட்டைகளை எடுத்துச் சென்று பொரிக்க வைக்கின்றன. எறும்பு முட்டைகளிலிருந்து புழுக்கள் பொரிக்கின்றன.

புழுக்கள் வெண்ணிறச் சவ்வினால் மூடப்பட்டு கூண்டுப் புழுக்களாக மாறுகின்றன. பின்தான் எறும்புகளாக மாறுகின்றன.

எறும்புகளில் சில காவலாளிகள் போல் நின்று கூட்டத்தைக் காவல் காக்கின்றன.



த.சுபா
மானிப்பாய்

''சல்பு எறும்பு'' என்னும் ஒரு வகை எறும்பு வேறு எறும்புகளுடைய முட்டைகளை எடுத்துவந்து அவை பொரித்து எறும்பாக வந்தவுடன் அவற்றை அடிமையாகளாகப் பயன்படுத்துகின்றன.

எறும்புகளிற்கு இனிப்புச் சுவை அதிகம் விருப்பம் என்ற படியால் இனிப்புப் பொதிகளைக் கக்கக் கூடிய ஒரு வகைப் பச்சை நிறப் பூச்சிகளைப் பிடித்து வதைப்பதுண்டு.

அது எறும்பின் ''பால் மாடு'' எனப்படும் எறும்புகளின் கூட்டத்தோடு இன் னொரு கூட்டம் போர் செய்வதும் உண்டு.

சில எறும்புகள் தானியங்களைப் புற்றுக்குள் சேகரித்து வைக்கு. அவை மாரிகாலத்திற்கு வேண்டிய உணவைக் கோடை காலத்திலேயே சேமித்து வைக்கும்.

தென்னமெரிக்காவிலும், மத்திய அமெரிக்காவிலும், மத்திய ஆபிரிக்காவிலும், ஒருவகை அழிவு செய்யும் எறும்புகள் உள்ளன. இவை நிரை நிரையாகச் செல்லும் போது வழியில் காணப்படும் இருப்பிலும் வைரங் குறைந்த எல்லாப் பொருள்களையும் உண்டு வரும். இவை படையெடுத்து வருவதை அறிந்த பூச்சிகளும், விலங்குகளும் அவ்விடத்தை விட்டே ஓடி மறைந்து விடும். மனிதன் கூட ஓடி மறைவான்.

1952 ஆம் ஆண்டில் 15000 வகையிலான எறும்புகள் இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளன.

## கடல்பசு



கடல்வாழ் விலங்குகளில் ''கடல் பசு'' என அழைக்கப்படுவது தான் இது. இவற்றின் முக்கிய உணவு கடல் தாவரங்கள்தான் கடலுக்குள்ளேயே இதன் வாழ்நாள் கழிந்து விடும். கடற்கரையின் அடுத்தாக ஆழமில்லா இடங்களில்தான் அதிகம் வாழும். இதன் இனமாகக் கருதப்படுவதே ''கடற்பன்றி'' என்பதாகும். இது திமிங்கல வகையைப் போன்று சூடான இரத்தம் கொண்டது. அத்துடன் இது குட்டி ஈனக்கூடியது.

த.சுபா, உடுவில்.

## குதி உயர்ந்த பாதணிகளின் அழகும் ஆபத்துக்களும்

எடுப்பான அழகுடனும் நவநாகரிகத்துடனும் விளங்குவதற்காகப் பெண்கள் பலர் அதிஉயர் குதிக்கால் பாத ணிகளை அணிகின்றனர். பெண்கள், ஆடைகளுக்கு ஏற்ற பாதணிகள் அணிந்து நடக்கும்போது அந்தப் பாதணிகள் அவர்களின் அழகை மேலும் மெருகூட்டுவதுடன் அவர்களிடம் ஒருவித செல்வந்தத் தோற்றத்தை ஏற்படுத்துகின்றன.

நாகரிக உலகில் புதிது புதிதாகப் பலவடிவங்களில் பாதணிகள் வந்துகொண்டு இருக்கின்றன.

எவ்வளவு தூரம் உயரமான பாதணிகளை உருவாக்க முடியுமோ அவ்வளவு உயரமாக குதிகால் பாதணிகளின் உயரத்தை அதிகரித்து அவற்றின் வடிவங்களில் பல மாற்றங்களைச் செய்து சந்தையில் விடுகின்றன நிறுவனங்கள். இந்தப் பாதணிகளை எவ்வளவு விலைக்கொடுத்தேனும் வாங்கி அணியக் கூடியவர்களாக நமது பெண்கள் மாறிப்போயுள்ளனர்.

உயரம் குறைந்தவர்களுக்கு இந்தப் பாதணிகளால் நன்மைதான். குள்ளமானவர்கள் இந்தப் பாதணிகளை அணிவார்களேயானால் அவர்கள் உயரமானவர்களாகத் தெரிவார்கள். குள்ளமானவர்களின் மனக்குறையைச் சற்று நீக்கும் ஒன்றாக இந்தப் பாதணிகள் விளங்குகின்றன.

இப்போது பெண்கள் சேலை அணிந்தால் கட்டாயம் குதிகால் பாதணிதான் அணிய வேண்டும், இல்லையென்றால் சேலைக்கு எடுப்பாக இருக்காது என்று கூறும் நிலை வந்துவிட்டது. அது மட்டுமல்ல, குட்டையான பாவாடைகளை அணியும் பெண்களும் இதனைதான் கடைப்பிடிக்கின்றார்கள்.

இதைவிடப் பெண்களின் அழகை இந்தப் பாதணிகள் மேலும் மெருகூட்டிக் காட்டுகின்றன.

இவற்றைத்தவிர, இந்தப் பாதணிகளால் நன்மையிருப்பதாகத் தெரியவில்லை. நாகரிக மாற்றத்திற்கு ஏற்ப தங்களது தோற்றங்களிலும் மாற்றங்களைக் கொண்டு வரும் பெண்கள் மேலைத்தேய மோகத்தில் அதிகமாகவே ஈர்க்கப்பட்டுவிட்டனர்.

இவ்வாறான பொருள்களை அதிக விளைக்கொடுத்து வாங்குபவர்கள் பணத்தை கொடுத்து பொருள்களை மட்டும் வாங்கவில்லை. பொருளுடன் சேர்த்து உடல் நலக்கேடுகளையும் வாங்கிக்கொண்டு வருகின்றார்கள்.

இத்தகைய அதி உயரமான குதிகால் பாதணிகளை அணிவதால் பல்வேறு நோய்கள் ஏற்படுகின்றன. இந்தப் பாதணிகள் இடுப்பு வலி, முதுகு கூன் விழுதல், கெண்டைக்கால் வலி, தலைச்சுற்று போன்ற உடலியல் நோய்களை ஏற்படுத்திவிடுகின்றன.



க.சோபி,
கன்னாகம்.

நோய்களுக்கு அப்பால், இந்தப் பாதணிகளால் பாதுக்காப்பற்ற நடையையே நடக்க வேண்டியுள்ளது.

அதிக உயரமாக பாதணிகளை அணிந்துக்கொண்டு வீதியில் செல்லும் போது எமது இயல்பான நடையை மறந்து பாதுகாப்பாகவே ஒவ்வொரு அடியையும் எடுத்துவைக்க வேண்டும். கொஞ்சம் சறுக்கினாலும் கீழே விழவேண்டிய நிலைதான் ஏற்படும். எமது உடல் எடையை இந்த பாதணியின் கூரான முனைகளே தாங்கிக்கொண்டு இருக்கின்றன. இதனால் கொஞ்சம் பிசகினாலும் தசைப்பிடிப்பு ஏற்படலாம். அதைவிட வீதியில் விழவேண்டியும் ஏற்படும்.

உயர் குருதியமுத்தம் போன்ற நோய்கள் உள்ளவர்கள் இவ்வாறான பாதணிகளை அணிவதை அறவே தவிர்த்துவிடவேண்டும். இந்தப் பாதணிகள் உயிராபத்தைக் கூட ஏற்படுத்தக் கூடியவைதான். இன்னும் சொல்லப்போனால் இந்தப் பாதணிகளை அணிந்துக்கொண்டு எந்தவித பயமும் இன்றி பளபளப்பான மேடையில் நடனமாடுபவர்களும் இருக்கவே செய்கின்றனர்.

இவ்வாறான பாதணிகளைத் தொடர்ந்து அணியாமல் குறிப்பட்ட நிகழ்வுக்காக அணிந்தால் அது பெரிதளவான பாதிப்பை ஏற்படுத்தப் போவதில்லை. ஆனால், தினமும் அதனையே அணியவிரும்புபவர்கள் கொஞ்சம் புணத்தை வைப்பிலிட்டு சேமித்துக்கொண்டால் எதிர்காலத்தில் வரப்போகும் நோய்களுக்கு செலவிடுவதற்கு இலகுவாக இருக்கும்.




## எதிர்கால எரிபொருள் சிக்கன விமானம்

சூழல் மாசடைதலிலிருந்து பாதுகாப்பதோடு எரிபொருள் சிக்கனத்தைத் தருவதும் பாரம் குறைந்ததுமான எதிர்கால விமானத்தினை காட்சிப் படுத்தியிருக்கிறார்கள். 2050ஆம் ஆண்டளவில் வானில் பறக்கவுள்ள இந்த விமானத்தின் மாதிரியினை எதிர்கால விமான வரைபடங்கள் கண்காட்சியில் காட்சிப்படுத்தியிருக்கிறார்கள்.

தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தித் தயாரிக்கப்படும் இந்த விமானம் எதிர்காலத்தின் வானரசனாகத் திகழவுள்ளதாக வடிவமைப்பாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். காற்றினைக் கிழித்துக் கொண்டு இலகுவில் பறக்கக்கூடிய விதத்தில் இந்த விமானத்தின் இறக்கைகள் வடிவமைக்கப்பட்டிருக்கின்றன.

பாரம் குறைந்த உலோகங்களைப் பயன்படுத்தியே இந்த விமானம் தயாரிக்கப்படவுள்ளது. இதனால் எரிபொருள் சிக்கனம் பேணப்படும். அத்தோடு சூரிய சக்தியினைப் பெறக்கூடிய வழிமுறைகளையும் இதில் பயன்படுத்தவுள்ளனர். 2050ஆம் ஆண்டு வானில் பறக்கும் நோக்கிலேயே இந்த விமானம் வடிவமைக்கப்பட்டிருக்கிறது. இருந்தபோதிலும் இப்போதுள்ள தொழில்நுட்ப வளர்ச்சி தொடருமேயானால் 2030ஆம் ஆண்டளவில் முதலாவது விமானத்தினை தயாரிக்க முடியுமெனவும் எயார் பஸ் நிறுவனம் அறிவித்துள்ளது.



ச.நிலா,
கொக்குவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் இயல்பு வாழ்க்கையை அமைக்க முடியாத நிலை

## பி.பி.ஸி. தகவல்

கொழும்பு, டிசெ. 29

புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகத்துடன் இணைக்கப்பட்டுள்ள முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்கள், இயல்பு வாழ்க்கையை அமைத்துக் கொள்ளக்கூடிய அளவிற்கு எவ்வித வாழ்வாதார, தொழில் வசதிகளுமின்றி சிரமப்படுகின்றனர் என பி.பி.ஸி. செய்தி வெளியிட்டுள்ளது.

இறுதிக்கட்ட யுத்தத்தின் பின்னர் இராணுவத்தினரிடம் சரணடைந்த முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கு புனர்வாழ்வு நிலையங்களை ஏற்படுத்தி அவற்றில் தொழில் பயிற்சி உட்பட பல்வேறு புனர்வாழ்வுப் பயிற்சிகளை வழங்கி வருவதாக அரச அதிகாரிகள் கூறுகின்றனர்.

இவ்வாறு பயிற்சி பெற்ற இளைஞர், யுவதிகள் கட்டம் கட்டமாக விடுதலை செய்யப்பட்டு சமூகத்தில் இணைக்கப்பட்டு வருகின்றனர் எனவும், அவர்களது வாழ்வாதாரத்திற்கான உதவிகளுக்கென பல்வேறு திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன எனவும் அரசு கூறுகின்றது.

ஆயினும், தொழில் பயிற்சி பெற்றிருக்கின்ற போதிலும், தமது வாழ்வாதாரத்திற்கான தொழில் வாய்ப்புக்களைப் பெற முடியாத நிலையிலேயே தாங்கள் இருப்பதாகப் புனர்வாழ்வு நிலையங்களிலிருந்து விடுதலை பெற்று சமூகத்தில் இணைக்கப்பட்டுள்ளவர்கள் கூறுகின்றார்கள் என பி.பி.ஸி. மேலும் தெரிவித்துள்ளது. (சி)

## தொடரும் நட்பு ....



உரையாடல்: இலங்கைக்கு வருகைதந்துள்ள இந்திய பாதுகாப்புச் செயலாளர் பிரதீப்குமார் தலைமையிலான குழுவினர் இலங்கைப் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தலைமையிலான குழுவினரைச் சந்தித்து உரையாடுகின்றார்.

# வாழ்விடங்களுக்குத் திரும்பிய வன்னி மக்கள் தொடர்ந்தும் இன்னல்களுக்கு ஆளாகின்றனர்

## நத்தார் திருப்பலியில் மன்னார் ஆயர்

மன்னார், டிசெ.29

பல இன்னல்களை எதிர்கொண்ட வன்னி வாழ் மக்கள் பாரிய இடப்பெயர்வின் பின்னர் தமது வாழ்விடங்களுக்கு மீண்டும் திரும்பியிருக்கிறார்கள். இருப்பினும் அவர்கள் இன்னல்களுக்குத் தொடர்ந்தும் ஆளாகி வருகின்றனர். இவ்வாறான நிலைமைகள் தொடர்ந்தால் தமிழ் மக்களின் எதிர்கால இருப்புக்கள் கேள்விக் குறியாகவே இருக்கும்.

இவ்வாறு மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை தெரிவித்தார். மன்னார் மறைமாவட்ட புனித செபஸ்தியார் பேராலயத்தில் கிறிஸ்மஸ் நள்ளிரவுத் திருப்பலி ஆராதனைகள் ஆண்டகை தலைமையில் கூட்டுத்திருப் பலியாக ஒப்புக் கொடுக்கப்பட்டது. இதன் போது மறை உரை ஆற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

உலகத்தை ஒன்று சேர்த்து அன்பிலே, மகிழ்விலே வாழ வழி அமைக்கும் குழந்தை இது. உலகில் வாழும் அனைத்து மக்களும் ஒரே உணர்வோடு பல்வேறு வகைகளில் இக் குழந்தையின் பிறப்பைக் கொண்டாடினாலும் அவர்கள் எல்லோரும் வாழும் அன்பிலும் மகிழ்ச்சியிலும் இவ் விழாவினைக் கொண்டாடுகின்றார்கள்.

உலகில் வாழும் மக்கள் உண்மையான சமாதானம் இருக்க வேண்டும் என்பதையே விரும்புகின்றார்கள். சிறப்பாக நமது நாட்டிலே சமாதானம் எனும் உயர்ந்த கொடையை இந்த ஆண்டவர் இயேசு கொண்டு வந்து தந்ததுபோல் அது நிறைவாகக் கிடைப்பதற்கும் இக் கிறிஸ்து பிறப்பு விழா வழி ஏற்படுத்த வேண்டும்.

பல இன்னல்களை எதிர்கொண்ட வன்னி வாழ் மக்கள், பாரிய இடப்பெயர்வின் பின்னர் தமது வாழ்விடங்களுக்கு மீண்டும் திரும்பியிருக்கிறார்கள். இருப்பினும் இன்னல்களுக்குத் தொடர்ந்தும் அவர்கள் ஆளாகி வருகின்றனர். இவ்வாறான நிலைமைகள் தொடந்தால் தமிழ் மக்களின் எதிர்காலமே கேள்விக்குறியாகி விடும்.

இந்தக் கிறிஸ்துப் பிறப்பு விழா அனைவரையும் ஒன்றிணைத்து அன்புப் பாதையில் பயணிக்கும் தன்மையை ஏற்படுத்த வேண்டும்- என்றார். (த-15)

# பெல்ஜியத்தில் இலங்கைக்கான உல்லாசப் பயணத்தடை நீக்கம்

கொழும்பு, டிசெ.29

பெல்ஜியத்திலிருந்து இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு அந்த நாட்டு அரசு விதித்திருந்த கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

யுத்தம் காரணமாக அமைதியற்று இருந்த இலங்கையில் தற்போது சுமுக நிலை தோன்றியுள்ளதாலேயே இந்தக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கு பயணம் செய்வதற்கான சில நிபந்தனைகள் பெல்ஜிய அரசால் விதிக்கப்பட்டிருந்தன. அத்தகைய பயணங்களை மேற்கொள்ள விரும்பும் பெல்ஜியப் பிரஜைகள் அந்நாட்டு அரசின் முன் அனுமதியைப் பெற வேண்டியிருந்தது.

இலங்கையில் நிலவும் அமைதியான சூழ்நிலை காரணமாக பெல்ஜிய சுற்றுலாப் பயணிகளை வரவழைக்க, பெல்ஜியத்திலுள்ள இலங்கைத் தூதரகம், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை ஆகியவை முன்வைத்த பல்வேறு திட்டங்களைக் கருத்தில் கொண்டே பெல்ஜிய அரசு கட்டுப்பாடுகளைத் தளர்த்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (சி)

# கடன் அட்டை மோசடிக் குற்றச்சாட்டில் கனடாவில் தமிழ் வாலிபர் 4 பேர் கைது

ரொரன்ரோ, டிசெ. 29

கடன் அட்டை மோசடியில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டில் மூன்று தமிழ் வாலிபர்கள் கனேடியப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுப் பின்னர் பிணையில் விடுக்கப்பட்டுள்ளனர்.

கனடாவின் ஹல்பா பிரதேசத்தில் இந்த மூன்று வாலிபர்களும் கைது செய்யப்பட்டனர் ஏனையவர்களின் கடன் அட்டைத் தகவல்களை திருட இவர்கள் முயற்சித்த வேளையில் கையும் மெய்யுமாகப் பிடிபட்டனர் என்று பொலிஸார் கூறினர்.

கனடா ரொரன்ரோவில் வசிக்கும், சுகிர்தன் ஸ்ரீஸ்கந்தராசா (34 வயது), பரணீதரன் சடாச்சரம் (29வயது) மற்றும் தயாபரன் தனநாயகம் (32 வயது) ஆகியோரே கனேடியப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் மூவரும் அந்தப் பகுதியில் சந்தேகத்துக் கிடமான முறையில் நடமாடினர் என்பதுடன் வங்கிகளின் தன்னியக்க பணப்பரிவர்த்தனை இயந்திரத்தில் (ஏ.டி.எம்.) மீது யாருக்கும் சந்தேகம் வராத வகையில் கடன் அட்டைத் தகவல்களைத் திருடும் கருவியைப் பொருத்தியுள்ளனர் என்று பொலிஸார் கூறுகின்றனர்.

வான் ஒன்றில் இருந்தவாறு கடன் அட்டைத் தகவல்களை திருடிக் கொண்டிருந்த நிலையில் அவர்களைத் தாம் கைது செய்தனர் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களின் காரில் இருந்து கடனட்டைகளின் தகவல்களைக் களவாடப் பயன்பட்ட கமெரா ஒன்றும் கடனட்டை உராய்வு இயந்திரம் ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பொலிஸார் தொடர்ந்து விசாரணைகளை நடத்தி வருகின்ற போதும் இளைஞர்கள் மூவருக்கும் பிணை வழங்கப்பட்டுள்ளது. (உ)

# புதுவருட தினத்தில் விதிகளை மீறும் மதுபான நிலையங்கள் முற்றுகை

கொழும்பு, டிசெ.29

புதுவருட கொண்டாட்டக் காலத்தில் கலால் திணைக்கள விதிமுறைகளை மீறும் மதுபான நிலையங்களை முற்றுகையிடவென கலால் திணைக்களம் மேலதிகமாக உத்தியோகத்தர்களை இணைத்துள்ளது.

சட்டவிரோதமாக மதுபான விற்பனை, கசிப்பு விற்பனை, அனுமதிப்பத்திரமின்றி உயர் மதுசார விற்பனைகள் மேற்கொள்ளப்படும் இடங்கள் முற்றுகையிடப்படுவதுடன், ஹெரோயின், கஞ்சா மற்றும் சட்ட விரோத சிகரெட்டுகள் போன்றவற்றை விற்பனை செய்பவர்களும் கைது செய்யப்படவுள்ளனர்.

கலால் திணைக்கள ஆணையாளர் வசந்த ஹப்பு ஆராய்ச்சியின் வழிகாட்டலின் கீழ் கொழும்பு கலால் பிரிவினால் இந்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. (சி)

# சுனாமியில் சிக்கிய ரயில் எஞ்சின் மீண்டும் அதே பாதையில் பயணம்

கொழும்பு, டிசெ.29

சுனாமியியில் சிக்கிய ரயில் எஞ்சின் மீண்டும் அதே பாதையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பயணமொன்றை மேற்கொண்டது.

சுனாமி ஏற்பட்டு 6 ஆண்டுகள் நிறைவுறுவதைக் குறிக்கும் முகமாக இந்த 50 ஆம் இலக்க ரயில் எஞ்சின் விசேட ரயிலொன்றை இழுத்துக்கொண்டு கடந்த ஞாயிற்றுக்கிழமை பெரலிய ரயில் நிலையத்தை நோக்கிப் புறப்பட்டுச் சென்றது.

இந்த ரயிலில் மகாசங்கத்தினர் பிரித் ஓதுவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன.

பயணத்தின்போது இடை நடுவில் போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கமவும் ரயிலில் ஏறி இணைந்து கொண்டார். (த)

# காலாவதியான உணவுகள் அழிப்பு

கொழும்பு, புறக்கோட்டை பகுதியில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த காலாவதியான உணவுப் பதார்த்தங்கள் சிலவற்றைக் கண்டுபிடித்த கொழும்பு நகர சபையின் சுகாதார அதிகாரிகள் அவற்றை அழித்துள்ளனர்.

300 கிலோ நிறையுடைய பழங் கள், 40 கிலோ ஐஸ்கிரீம், 40 கிலோ கொத்து ரொட்டி ஆகியவையே இவ்வாறு அழிக்கப்பட்டுள்ளன - என்று கொழும்பு நகரசபை வைத்திய அதிகாரி டாக்டர் பிரதீப் காரியவசம் தெரிவித்தார். (சி)

## தெய்வீக உலா...



அருளுரை: காரைநகர் மணிவாசகர் சபையின் மணிவாசகர் விழாவின் 2 ஆம் நாள் நிகழ்வு அண்மையில் இரவு ஈழத்துச் சிதம்பர வசந்த மண்டபத்தில் இடம் பெற்றது. காசி திருப்பனந்தாள் திருமடத்தின் இறையடிகள் சுந்தர மூர்த்தி தம்பிரான் சுவாமிகள் அருள்உரை வழங்குகிறார்.

(201-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கோழிக்குஞ்சு விநியோகம்**

BAHIRAHA NO-1 புறொயிலர் குஞ்சுகள் 29.12.2010 விநியோகிக்கப்படும். பதிவுகளை முன் கூட்டியே மேற்கொள்ளவும்.

**ராஜீவ்,**
நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
T.P. 0776090926, 021 222 2867

# சுயதொழில் பயிற்சி

யாழ்ப்பாணம், டிசெ.29

யாழ். வலயக்கல்வி அலுவலக முறைசாராக் கல்விப்பிரிவு சமூக கற்கை நிலையத்தில் அடுத்த ஆண்டு ஆரம்பிக்கப்படவுள்ள இலவச சுயதொழில் பயிற்சிநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தப் பயிற்சிநெறிக்குத் தோற்றவுள்ளவர்கள் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்திசெய்து கலா ஷேத்திரா கல்வி நுண்கலை வளாகம், மின்சார நிலைய வீதி, ஊரெழு மேற்கு, சுன்னாகம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இந்தப் பயிற்சியில் தையல், அலங்காரப் பொருள் உற்பத்தி, மனை முகாமைத்துவம், மெழுகுவர்த்தி, கடித உறை தயாரித்தல் போன்றவை கற்பிக்கப்படவுள்ளதால், விண்ணப்பதாரர்கள் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பயிற்சி நெறியைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (204-253)

# 11ஆம் ஆண்டு நினைவலைகள்....



திருமதி
**சிவலோகநாயகி குணபாலசிங்கம்**

மண்ணில்: 08.05.1937
விண்ணில்: 31.12.1999
திதி: நவமி (29.12.2010)


அன்பென்ற சொல்லுக்கு அர்த்தமான அம்மாவே!
அன்று அறுத்த தொப்புள்கொடி-
உறவை பிரிப்பதற்கல்ல; வளர்ப்பதற்கே!
இன்று உறவுகளையே விட்டு எங்கு சென்றிட்டீர்?

உங்கள் நினைவுகளுடன்:
**கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

உசன்.
(108098)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

சிவஜனனம் 25 . 08 . 1941



சிவஐக்கியம் 01 . 01 . 2008

**அமரர் சிவஸ்ரீ பரமேஸ்வரக் குருக்கள்**
**காயாரோகண சிவக்குருக்கள்**
(யாழ்.போதனா வைத்தியசாலை ஸ்ரீ ஞானவைரவர் தேவஸ்தான முன்னாள் பிரதம குருவும் அர்ச்சகரும்)
நட்சத்திரம்: சித்திரை

ஆண்டிரண்டு உருண்டோடினாலும்- அப்பா!
ஆறவில்லை எம் கவலைகள்
மாறவில்லை எம் சோகங்கள்
தேறவில்லை எம் இதயங்கள்
விழிநீரையும், இதயக் கமலங்களையும்
காணிக்கையாக்குகின்றோம் உங்கள் ஆத்ம சாந்திக்கு!

40/2, மாரியம்மன் லேன்,
திருநெல்வேலி தெற்கு.
(சி/573728)

என்றும் உங்கள் நினைவில் வாடும்:
**குடும்பத்தினர்.**

## நுளம்புவலை விநியோகம்

தென்மராட்சி, டிசெ.29

மட்டுவில் தெற்குப் பிரிவு மக்களுக்கு நேற்று முன்தினம் நுளம்பு வலைகள் விநியோகிக்கப்பட்டன.

யாழ்.சர்வோதயம் அமைப்பினால் வழங்கப்பட்ட 180 நுளம்பு வலைகள் மட்டுவில் வளர்மதி சனசமூக நிலையத்தில் வைத்து சுகாதாரப் பகுதி உத்தியோகத்தர்களால் விநியோகிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (204-207)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
**ஆறுமுகம் சிவலிங்கம்**

மண்ணில் 17.02.1948
விண்ணில் 29.11.2010

எங்கள் குடும்பக் குலவிளக்கே!
நீங்கள் மண்ணுலகை விட்டு விண்ணுலகு சென்று
31 நாள்கள் சென்றாலும் உங்கள் அன்புருவம் எங்கள்
உள்ளத்தை விட்டு என்றும் நீங்காது- ஐயா!

கடந்த 29.11.2010 திங்கட்கிழமை சிவபதமடைந்த எமது அன்புத்தெய்வத்தின் 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையும் இன்று (29.12.2010 புதன்கிழமை முற்பகல் 11மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நீங்காத நினைவுகளுடன்....
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

# வீட்டுக்கிருத்திய அழைப்பு



மலர்வு
20.06.1934

உதிர்வு
29.11.2010

# அமரர் சண்முகம் பரஞ்சோதி


கடந்த (29.11.2010) திங்கட்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்தியநிகழ்வு 29.12.2010 புதன்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

பழனிகோயிலடி,
இருபாலை றோட்,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.
(108108)

**குடும்பத்தினர்.**

உ
ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமக

# ஓராண்டு நினைவுத் துளிகள்



அமரர்
**இராஜேந்திரம் விஜயகுமார் (கண்ணன்)**

அன்னை மடியில்
08.03.1976

ஆண்டவன் திருவடியில்
08.01.2010

திதி: அபரபக்க நவமி

பாசப்பிரிவுகளும் நேச நெகிழ்வுகளும்
நெஞ்சமெங்கும் நிறைந்திருக்க
அன்புகொண்ட உள்ளங்கள் அழுது புரள
எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு
மீளாத்துயில் கொண்டீரே!!!

கலகலவெனச் சிரிக்கும் வதனத்தையும்
கண்டவரை கவர்ந்திழுக்கும் பார்வையையும்
காணாது வாடுகின்றோம் கண்ணீரால் தேடுகின்றோம்
மனதில் அழுகின்றோம் ஏங்கித் தவிக்கின்றோம்

அன்பு உள்ளம் கொண்ட எம் இனிய கண்ணனே!
கூடு கலைந்த குருவிகளாய்நாங்கள் இங்கிருக்க
எங்கள் கண்ணுக்குள் நின்றபடி கனவுகளில் வாழ்ந்திடுவீர்
என்றுமே நீங்கள் எங்கள் எண்ணச்
சிறகுகளின் எழுதாக்காவியம்.

525/1, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
(108087)

உங்கள் பிரிவால் தவித்திடும்:
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். ஆஸ்பத்திரியில் 'லிப்ற்' வசதியை திருத்தியமைக்க ரூ.83 லட்சம் தேவை

## அதனைப்பெற முடியாத நிலையில் நிர்வாகம்

யாழ்ப்பாணம்,டிசெ.29

யாழ். போதனா வைத்திய சாலையில் 7ஆம், 8ஆம், 9ஆம், இலக்க ஆண் நோயாளர் விடுதிகளுக்கான 'லிப்ற்' வசதியை திருத்தியமைக்க 83 லட்சம் ரூபா தேவை. இதற்கு நிதி இல்லாமையால் அதனைத் திருத்தியமைக்க முடியாமல் உள்ளதாக வைத்தியசாலையின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வைத்தியசாலையில் கடந்த இரண்டு மாதங்களாக மேற்படி விடுதிகளுக்கான 'லிப்ற்' பழுதடைந்துள்ளது. இதனால் விடுதியில் தங்கி சிகிச்சை பெறுகின்ற நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவது குறித்து கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யாழ். போதனா வைத்திய சாலையில் பல்வேறு அரச சார்பற்ற நிறுவனங்களினதும் அரசினதும் நிதியுதவியுடன் பல்வேறு அபிவிருத்தித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இருப்பினும் 7ஆம், 8ஆம், 9ஆம் இலக்க விடுதிகளுக்குச் செல்லும் 'லிப்ற்' கடந்த இரண்டு மாத காலமாகத் திருத்தப்படாமல் உள்ளது. இதனை மீளவும் திருத்தியமைக்க 83 லட்சம் ரூபா நிதியை மின்சார சபைக்குவழங்க வேண்டும்.

இதற்கு நிதியினை எங்கிருந்து எவ்வாறு பெற்றுக் கொள்ளலாம் என்று வைத்திய சாலை நிர்வாகம் திண்டாடிக் கொண்டிருக்கிறது. பல்வேறு தரப்பினரிடமும் பல தடவைகள் இது தொடர்பாக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த போதும் இதுவரை எந்தவித ஆக்கபூர்வமானபதிலும் கிடைக்கவில்லை என்றார் அந்த அதிகாரி. (த-9)



ஊக்குவிப்பு....

பரிசு: சுன்னாகம் கிழக்கு சனசமூக நிலையமும் சிவன் முன் பள்ளியும் இணைந்து நடத்திய கலைவிழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட சிறுவர் நிதியத் திட்டமிடல் அதிகாரி எஸ். பகீரத ராஜ் மாணவியொருவருக்கு பரிசில் வழங்குகிறார். (204)

# வலி.கிழக்கில் 71 பேருக்கு நீரிறைக்கும் இயந்திரம்

கோப்பாய்,டிசெ.29

வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள மக்களில் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகள் 71பேருக்கு நீரிறைக்கும் இயந்திரங்கள் 'போரூட்' நிறுவனத்தின் அனுசரணையுடன் கடந்த வெள்ளிக்கிழமை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

பிரதேச செயலர் ம.பிரதீபன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதம விருந்தினராக கலந்து கொண்டு நீரிறைக்கும் இயந்திரங்களைக் கையளித்தார்.

இந்த நிகழ்வில் 'போரூட்' நிறுவனத்தைச் சேர்ந்த திருமதி சுமதி தனபாலசிங்கம் மற்றும் பிரதேச செயலக பணியாளர்கள் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (72-11)

# காணி மாவட்டப் பதிவக பணிகள் இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம்,டிசெ.29

வருட நிறைவுப் பணிகளை முன்னிட்டு நாளை வியாழக்கிழமையும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமையும் யாழ். மாவட்ட காணிப் பதிவகத்தில் விவாக, பிறப்பு, இறப்பு மற்றும் காணி தொடர்பான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்றும் -

எதிர்வரும் 3ஆம் திகதி முதல் சகல பணிகளும் வழமைபோல் இடம் பெறும் என்றும் காணி மேலதிக மாவட்டப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

# சுகாதாரப் பரிசோதகர்களுக்கு சீன அரசின் மோட்டார் சைக்கிள்

யாழ்ப்பாணம், டிசெ.29

சீன அரசினால் வடமாகாண அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட மோட்டார் சைக்கிள்களில் இரண்டு யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் நிலைய சுகாதாரப் பரிசோதர்கள் இருவருக்கு ஆளுநரினால் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டுள்ளன.

சீன அரசின் நல்லெண்ண நடவடிக்கையாக 16 மோட்டார் சைக்கிள்கள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சிடம் கையளிக்கப்பட்டு மாகாண ஆளுநரிடம் பின்னர் வழங்கப்பட்டன.

இவ்வாறு கையளிக்கப்பட்ட மோட்டார் சைக்கிள்களே நேற்றுமுன்தினம் ஆளுநரினால் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் இந்த நிகழ்வில் வைத்து 16 சிற்றூழியர்களின் நியமனமும் வழங்கப்பட்டது.

அவர்கள் மாகாண அமைச்சின் வைத்திய சாலைகளில் கடமையாற்றுபவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (த-15)

வருகை.......



கையளிப்பு: இந்தியாவின் யாழ்ப்பாண துணைத் தூதரகத்தின் துணைத் தூதுவர் வெ.மகாலிங்கம் பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்திற்கு வருகை செய்த போது சுவாமி சித்ரூபானந்தா நூல் ஒன்றை வழங்குகிறார். (204-236)

# கலை இலக்கிய சங்கம் நடத்தும் கட்டுரைப் போட்டி

அல்வாய்,டிசெ.29

அகில இலங்கை கலை இலக்கிய சங்கம் வருடா வருடம் நடத்தும் கட்டுரைப் போட்டி இம்முறை சர்வதேச மட்டத்தில் நடைபெறவுள்ளது.

இக்கட்டுரைப்போட்டி நாடக கலைஞர் அமரர் கந்தையா வடிவேலு ஞாபகார்த்தமாக "ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் சிற்றிதழ்களின் பங்கு" என்னும் தலைப்பில் நடத்தப்படவுள்ளது. இப்போட்டிக்கு எந்தவித நிபந்தனையும் இல்லை. இப்போட்டியில் எவரும் பங்குபற்றலாம்.

இப்போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பெறும் அதிர்ஷ்டசாலிகளுக்கு பணப்பரிசுடன் சான்றிதழ்களும் வழங்கப்படும். மேலும் 10 பேருக்கு ஆறுதல் பரிசாக சான்றிதழ்கள் வழங்கப்படும்.

இப்போட்டியின் ஆக்கங்களை 25.02.2011 முன்னர் 'பண்டிதர் பொன்.சுகந்தன் தலைவர், அகில இலங்கை கலை இலக்கிய சங்கம், நெல்லியடி, கரவெட்டி' என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு சங்கத்தின் செயலாளர் கணபதிப்பிள்ளை கேட்டுள்ளார். (த-36)

# அனுமதி பெறாமல் அமைக்கப்படும் கட்டடங்கள் நட்டஈடு எதுவுமின்றி சபையால் அகற்றப்படும்

## வலி தென் மேற்குப் பிரதேச செயலாளர் அறிவிப்பு

சண்டிலிப்பாய்,டிசெ.29

வலி. தென்மேற்குப் பிரதேசத்தில் சபையின் அனுமதியின்றி கட்டப்படும் கட்டடங்கள் யாவும் எந்தவித நட்டஈடும் வழங்கப்படாமல் சபையினால் அகற்றப்படும் என்று தெரிவித்துள்ள பிரதேச சபைச் செயலாளர் கட்டடங்கள் அமைக்க விரும்புபவர்கள் சபையின் முன் அனுமதியைப் பெற வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

கட்டடம் அமைப்பது சம்பந்தமாக வரியிறுப்பாளருக்கு செயலாளர் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:

வீடமைப்பு நகர அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் வலிகாமம் தென் மேற்குப் பிரதேச சபையின் அனுமதியின்றிச் சபை எல்லைக்குள் அரச, தனியார் கட்டடங்கள், மதில், மலசல கூடங்கள், குழாய்க் கிணறுகள், கிணறுகள் என்பன அமைத்தல், புதுப்பித்தல், வேலை செய்தல் போன்றன சட்டத்தின்படி தண்டனைக்குரிய குற்றமாகும்.

எனவே, வலிகாமம் தென் மேற்கு பிரதேச சபையால் விநியோகிக்கப்படும் விண்ணப்ப படிவத்தின் மூலம் விண்ணப்பம் செய்து சபையின் முன் அனுமதி பெறப்படாமல் கட்டப்படும் கட்டடங்கள் யாவும் நட்டஈடு வழங்கப்படாது சபையினால் அகற்றப்படும்.

ஏற்கனவே அனுமதி பெற்றவர்கள் கட்டடம் கட்டி முடிக்கப்படாத பட்சத்தில் அனுமதியை புதுப்பித்தல் வேண்டும். அனுமதி பெற்றுக் கட்டடம் கட்டி முடித்தவர், கட்டி முடிக்கப்பட்டமை தொடர்பாக அலுவலகத்திற்கு அறியத்தந்து புதிய குடியமர்வுச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ள வேண்டும் - என்றார். (த-115)




# குடாநாட்டில் டெங்கு நோயால் இவ்வாண்டு 28 பேர் மரணம்

## அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,டிசெ.29

குடாநாட்டில் டெங்கு நோயினால் மரணமடைந்தோர் எண்ணிக்கை 28ஆக அதிகரித்துள்ளது.

இந்த மாதத்தில் மட்டும் 3 பேர் மரணமடைந்துள்ளதாக யாழ். பிராந்திய சுகாதாரத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது:

குடாநாட்டில் டெங்கு நோயின் தாக்கம் குறைந்திருந்த போதும் அவ்வப்போது டெங்கு மரணங்கள் இடம்பெற்று வருகின்றன.

இவ்வாண்டு ஜனவரி மாதம் முதல்கடந்த நவம்பர் மாதம் வரை டெங்கு நோயால் மரணமானோர் எண்ணிக்கை 25 ஆகக் காணப்பட்டது.

இம்மாதம் மட்டும் மூவர் டெங்கு நோயால் மரணமாகியுள்ளனர்.

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை பிரிவில் 2 மரணங்களும், யாழ். மாநகரசபைக்குட்பட்ட பிரிவில் ஒரு மரணமும் இடம் பெற்றுள்ளன.

மழை காலமாகையால் டெங்கு நோயின் தாக்கம் அதிகரிக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. எனவே இது குறித்துப் பொதுமக்கள் தொடர்ந்தும் விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டும் என்றும் சுகாதாரத் திணைக்களம் அறிவித்துள்ளது. (த-9)

# 'இன்புளுவென்சா' தடுப்பூசி வழங்கல்

தென்மராட்சி,டிசெ.29

பன்றிக்காய்ச்சல் நோய் வராமல் தடுப்பதற்கான 'இன்புளுவென்சா ஏ.எச்.என்.' தடுப்பூசி மருந்து சாவகச்சேரி சுகாதாரப் பிரிவனரால் ஏற்றப்பட்டு வருகின்றது.

சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையிலும் அந்தந்த ஆரம்ப சுகாதார நிலையங்களின் கிளினிக் நடைபெறும் நாள்களிலும் இந்தத் தடுப்பூசி ஏற்றப்[illegible].

இந்தத் தடுப்பூசி ஏற்ற விரும்பும் பொதுமக்கள் [illegible] முன்னர் இவ் விடங்களில் ஏற்றிக்கொள்ளலாமென அறிவிக்கப்பட்டுள்ளது. (204-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:**
நிதானம், பொறுமையுடன் செயற்பட வேண்டிய நாள். முடிவுகள் எடுப்பதில் தடுமாற்றங்களைத் தவிர்க்க, அனுபவம் உள்ளவர்களின் ஆலோசனை கேட்பீர்கள். பிள்ளைகளுக்கு நல்ல விடயங்களைச் சொல்லி உற்சாகப்படுத்துவீர்கள். மனைவி வழியில் சிறு பணக்குகள் ஏற்படலாம். உணவில் கவனம் அவசியம்.

**இடபம்:**
குறும்புத்தனமான வேலைகளைச் செய்து சொந்த பந்தங்களின் கோபத்திற்கு ஆள்படலாம். பல முறை முயற்சித்தும் சில காரியங்களில் தடை ஏற்படலாம். சக ஊழியர்கள் விடுமுறையால் கூடுதல் வேலைப் பளுவைச் சந்திக்கலாம். யாருக்காகவும் நீங்கள் பொறுப்பேற்க வேண்டாம். திறமைக்கு சவாலான விடயங்கள் நடக்கல்ாம்.

**மிதுனம்:**
குற்றம், குறை சொல்லியவர்களே இன்று பாராட்டுவர். அனைவரிடமும் அன்பாகவும், பாசமாகவும் நடந்து கொள்வீர்கள். உதிரி வருமானங்களைப் பெறலாம். ஏதேச்சையாகச் செய்த சில காரியங்கள் நல்ல விதமாக அமைந்து விடலாம். தம்பதியர் இடையே அன் யோன்யம் காணப்படும். காலை முதல் மாலை வரை பம்பரமாகச் செயற்படுவீர்கள்.

**கடகம்:**
தெரிந்தவர்கள் சிலர், உங்களிடம் உதவி கேட்கலாம். பெற்றோர் வழியில் செலவுகளைச் சந்திக்கலாம். துவங்கிய சில வேலைகளைப் பாதியில் விட்டு விட்டு வேறு வேலையில் ஈடுபடலாம். பிள்ளைகளின் பிடிவாதமான செயற்பாடுகளால் எரிச்சல் அடையலாம். சில பொருள்களை மறதியாக வைத்து விட்டு தேடலாம்.

**சிங்கம்:**
வீட்டில் வசதி, வாய்ப்புகள் அதிகரிக்கும். பண விவகாரங்களில் நாணயத்தைக் காப்பாற்றுவீர்கள். பழைய கடன் மிகுதி ஒன்றைத் திருப்பிக் கொடுப்பீர்கள். உறவினர்கள் சந்திப்பால் முக்கியமான காரியம் ஒன்று நிறைவேறும். உத்தியோகத்தர்கள் சிரமங்களுக்கு ஆளாகலாம். நாளை சந்திக்க நினைத்த ஒருவரை இன்றே சந்திக்க நேரிடலாம்.

**கன்னி:**
எதிர்ப்புகள், போட்டிகளால் எரிச்சல் அடையலாம். குடும்ப உறுப்பினர்களுடன் சின்ன விடயங்களுக்காக வாக்குவாதம் செய்யலாம். புதிய சில இடங்களுக்கு செல்லலாம். சங்கடம் தரும் அல்லது சந்தோஷம் தரும் செய்தி ஒன்றைக் கேட்கலாம். திட்டமிட்ட சில வேலைகளில் தடை ஏற்படலாம். கனவுகளால் தொல்லையுண்டு.

**துலாம்:**
திட்டமிட்ட காரியங்கள் சரியான நேரத்தில் நடக்கும். லாபகரமான பணவரவுகளைப் பெறலாம். நண்பர்கள் வழியில் பாராட்டுக்களைப் பெறலாம். ஆடம்பரப் பொருள்கள் வாங்குவதில் நாட்டம் செல்லும். பணிபுரிவோர் நிர்வாகத்தினரின் பாராட்டுக்களைப் பெறலாம். பயணங்களால் சந்தோஷம் உண்டு.

**விருச்சிகம்:**
நீண்ட நாள்களாக மனதில் நினைத்த வேலை ஒன்று எளிதாக முடிவுக்கு வரும். நண்பர்களுக்கு நல்ல ஆலோசனைகள் சொல்வீர்கள். உங்களின் இரகசியம் ஒன்றை மற்றவர்களிடம் வெளிப்படுத்துவீர்கள். தேக ஆரோக்கியம் தெம்பு, உற்சாகம் தரும். பிள்ளைகளின் அவசிய தேவை ஒன்றை நிறைவேற்றுவீர்கள். அனுகூலமான நாள்.

**தனுசு:**
முக்கிய செய்திகளைக் கேட்கலாம். உடல் நலம் இல்லாமல் இருக்கும் உறவினர் ஒருவரைப் பார்க்கலாம். நண்பர் ஒருவருக்காக மற்றொரு நண்பரிடம் நீங்கள் உதவி கேட்கலாம். உங்களுக்குப் பிடிக்காத ஒருவரை நீங்கள் செல்லும் இடத்தில் சந்திக்கலாம். குடும்பத்தினருக்கு தெரிந்த ஒருவர் உங்களுக்கும் அறிமுகமாகலாம்.

**மகரம்:**
கடும் வேலையால் வெறுப்பு, விரக்தி அதிகரிக்கும் நாள். ஆதாயத்தை எதிர்பார்த்துச் செய்த காரியம் ஒன்றில் எதுவும் கிடைக்காமல் போகலாம். மதிப்பு, மரியாதைக்குப் பாதகமான சில விடயங்கள் நடக்கலாம். வேண்டாத சிலரால் பிரச்சினைகளைச் சந்திக்கலாம். தொழிலில் கவனக் குறைவை தவிர்க்க வேண்டியது அவசியம்.

**கும்பம்:**
சிலர் உங்களை நம்பி முக்கிய வேலைகளை ஒப்படைக்கலாம். பெரிய மனிதர்கள் வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கலாம். உடல் சோர்வு நீங்கி உற்சாகம் பெறுவீர்கள். இரண்டு நாள்களுக்கு முன்னர் கைநழுவிப் போன காரியம் ஒன்று இன்று மீண்டும் கைகூடலாம். பழகிய சிலர் மூலம் பணவரவுகளைப் பெறலாம்.

**மீனம்:**
பெண்களால் உருவான பிரச்சினைகள் தீர்ந்து, அவர்களால் நன்மை அடையலாம். பிரியமான சக ஊழியர்களிடம் எதிர்பார்த்த பணஉதவி கிடைக்கும். பிள்ளைகளின் செயற்பாடுகளைப் பற்றி மற்றவர்களிடம் பெருமையாகப் பேசுவீர்கள். புதிய முயற்சிகளில் வெற்றி கிட்டும். உங்களுக்காக மற்றவர்கள் செலவு செய்யலாம்.

# நுளம்புக்குடம்பிகளை அழிக்கும் மீன்குஞ்சுகள் விநியோகம்

தென்மராட்சி டிசெ.29

டெங்கு நுளம்புக்குடம்பிகளை அழிப்பதற்கான மீன்குஞ்சுகள் எதிர்வரும் முதலாம் திகதி சனிக்கிழமை சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் விநியோகிக்கப்படவுள்ளன.

நீர் நிலைகளில் விடுவதற்காக மீன் குஞ்சுகள் பெற பணிமனையில் பதிவு செய்தவர்களை சமூகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை மீன் குஞ்சுகள் தேவைப்படுவோர் பணிமனையில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (201-207)

## மனிதநேயம் ...



ஆரம்பம்:ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் ஹம்பாந்தோட்டையில் நடைபெற்ற 2010 எட்டாவது தேசிய சாரணர் ஜம்போரி வைபவத்தை ஆரம்பித்து வைத்தார். ஆணையாளர் சி.பட்டுவந்தல ஜனாதிபதிக்கு ஜம்போரி சின்னத்தை சூட்டுகிறார்.

# பிரச்சினையற்ற வாழ்க்கை சாத்தியமா?



''ம்.. அவனுக்கு என்ன கவலை? பிறந்தால் அவனை மாதிரி ராஜா வீட்டுக் கன்றுக் குட்டியாகத்தான் பிறக்க வேண்டும்'' இப்படி பிறர் சௌக்கியமாக இருப்பதாக நினைத்துப் பொருமுகிறவர்கள் பலர் உண்டு. தன்னைத் தவிர மற்றவ்ர்கள் சௌக்கியமாக இருப்பதாகப் புலம்புபவர்களுக்கு ஒரு வார்த்தை நீங்கள் அவராக இருந்தால் தான் அவர் எவ்வளவு கஷ்டத்தில் இருக்கிறார் என்பதை உங்களால் அறியமுடியும்.

ராஜாதி ராஜாவாய் அயோத்தியை அரசாண்டு கொண்டிருந்த தசரதருக்கு எல்லாம் இருந்தது. ஆனால் பிள்ளை இல்லையே என்கிற மனக்கவலை கறையான் மாதிரி மனசை குடைந்திருந்தது. இப்படி ஏதாவது ஒரு சோகத்தை, துயரத்தை, வருத்தத்தை மூட்டை கட்டிச் சுமக்கும் முட்டாள் ஜனங்கள் தான் நாம். அவரவர் வரவு செலவுக்கேற்ப வயதுக் கேற்ப வருத்தத்தின் தன்மை தான் மாறுமே ஒழிய வருத்தத்தினால் வருத் தப்படாதவர்கள் எவருமே இருக்க முடியாது என்பதுதான் உண்மை.

ஓர் அழகான கற்பனைக் கதை, பரம பக்தி உடைய ஓர் ஏழை விவசாயிக்கும் கொஞ்ச நாளாக மன உளைச்சல் வேதனை. சந்தோசமாக வாழ்ந்து கொண்டிருந்த அவன் வாழ்க்கையில் ஒரு பிரச்சினை வந்தது . அவனுக்குக் கிடைத்த மனைவிக்கு அடிக்கடி ஏதாவது நோய் வந்து கொண்டே இருந்தது. மருத்துவர்களோ, ''மரணம் எல்லாம் நேராது. கவலை வேண்டாம்'' என்றார்கள். மனைவி உடல் நலக் குறைவால் அடிக்கடி மருத்துவம், செலவு. இதனால் வீட்டில் சமையல், சாப்பாடு, வீட்டுவேலை போன்றன நடப்பதில்லை'' என்கிற பிரச்சினை இருந்து கொண்டே இருந்தது.

உடல் மெலிந்து மனம் வாடி மிகச் சோர்ந்து கடவுளிடம் முட்டி மோதி ''என்னை ஏன் இப்படிச் சோதிக்கிறாய்... அந்தப் பண்ணையார் மாதிரி என்னை ஏன் வாழ வைக்கக்கூடாது. நான் அதிகமான துயரங்களோடு இருக்கிறேன். என்னுடைய துயரங்களை யாருக்காவது மாற்றிக்கொடுத்து விட்டு அவரது துயரத்தை யாவது எனக்குத் தரக் கூடாதா?'' என்று அழுது ஆர்ப்பாட்டம் செய்து வேண்டினான் விவசாயி.

பரமபக்தன் அழுது உறங்கிய பிறகு அன்று அவனது கனவிலே கடவுள் தோன்றினார். ''மறு'' நாள் மாலைப்பொழுது சாய்வதற்குப் பத்து நிமிடம் முன்பு அந்த ஊரில் உள்ள கோயிலுக்கு எல்லோரும் வரவேண்டும். வரும்போது அவரவர் கவலைகளையும், வருத்தங்களையும் பையில் போட்டு மூட்டையாகக் கட்டிக்கொண்டு வந்து கோயிலில் வைத்துவிட வேண்டும். சூரியன் மறைந்ததும் இருட்டான பிறகு கோயிலில் மணி அடிப்பார்கள். உடனே கையில் அகப்படுகிற ஏதாவது ஒரு மூட்டையை எடுத்துக்கொண்டு ஓடிவந்து விட வேண்டும். இவர்கள் கவலை இவர்களை விட்டுப் போய்விடும் இவர்கள் எடுத்துக் கொண்டுவந்த கவலை இவர்களுக்கு வந்துவிடும்'' இப்படியொரு உத்தரவை கடவுள் போட்டிருந்தார்.

''ஆஹா ... நம் கவலையைக் கோயிலில் போட்டுவிட்டுபண்ணையார் கவலையைத் தூக்கிக் கொண்டு ஓடி வந்து விடவேண்டும்'' என்கிற எண்ணத்தில் மறுநாள் பொழுது எப்போது சாயும் என்று காத்திருந்தான் விவசாயி - ஊர் முழுவதும் இதே பேச்சு. வானத்தில் ஓர் இடி இடித்து அசரீரியாகக் கடவுளின் உத்தரவு எல்லோருக்கும் கேட்டது. தனது கவலையை ஒரு துணிப்பையில் போட்டுக் கட்டி 'சனியன் ஒழிந்தது' என்று பெருமூச்சு விட்டபடி கோயிலுக்கு ஓடினான் விவசாயி.

கோயிலுக்குப் போன விவசாயி பிரமித்துப் போனான். அங்கே பலர் பெரிய பெரிய மூட்டைகளைக் கொண்டு வந்திருந்தனர். பலர் தாங்களே தூக்க முடியாத கவலை மூட்டைகளை ஆள்களை வைத்துத் தூக்கிக் கொண்டு வந்து போட்டனர். அங்கு வந்தவர்கள் கொணர்ந்த மூட்டைகளிலேயே சின்ன மூட்டை விவசாயியின் மூட்டைதான். பண்ணையார், கடைக்காரர் எல்லோரும் விவசாயி மூட்டையையே வெறியோடு பார்த்தனர். தங்கள் பெரிய பெரிய கவலை மூட்டையை யார் தலையிலாவது கட்டிவிட்டு விளக்கு அணைந்ததும், விவசாயி கொண்டுவந்த சின்ன மூட்டையுடன் ஓட பலர் தயாராக இருந்தனர். வெலவெலத்துப் போனான் விவசாயி.

''ஆஹா விளக்கு அணைந்ததும் யாருடைய பெரிய மூட்டையாவது நம் கைக்குச் சிக்கி அத்தோடு வீட்டுக்குப் போனால் நம் கதி என்னாகும்'' என்று யோசித் தான். அதை ஓரிடத்தில் வைத்துவிட்டு அதையே கவனமாகப் பார்த்தான். விளக்கு அணைந்ததும் இதை எடுத்துக்கொண்டு ஓடினாலேயே போதுமானது என்று தீர்மானித்து விட்டார்.

ஓர் ஆச்சரியம்... விளக்கு அணைந்த பிறகு மணி அடித்ததும் வெளியில் ஓடிவந்த எல்லோரும் ஞாபகமாக அவரவர் மூட்டையையே தூக்கிக் கொண்டு வந்தனர் 'ஏன்? என்று கேட்டபோது, "பழகிய பிரச்சினையே பரவாயில்லை புதிதாக ஒரு பூதத்தைப் பிடித்துக் கொண்டு போய் அவஸ்த்தைப் படக்கூடாதே'' என்கிற ஞானம் தான் காரணம் என்றார்கள். எல்லோருக்கும் பிரச்சினை உண்டு. அதில் நம்முடைய பிரச்சினை எவ்வளவோமேல்.

உதாரணத்துக்கு ஒருவருக்கு நீரிழிவு நோய் பெரிய பிரச்சினை என்று வைத்துக்கொள்ளுங்கள். நீரிழிவு நோயை மூட்டை கட்டி கோயிலில் எறிந்து விட்டு வேறொரு மூட்டையை எடுத்தால் அந்த மூட்டையில் எய்ட்ஸ் இருந்தால் என்ன ஆவது? அதற்கு நீரிழிவு நோய் மேல் என்று அத்தோடு வாழ்ந்து பழகிக் கொண்டிருக்கலாம்.

சில சமயங்களில் சில பிரச்சினைகளைத் தீர்க்கவே முடியாது. ஆனால் அவற்றைக் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு வாழ வேண்டும். பிரச்சினை களற்ற வாழ்க்கை என்பது முற்றிலும் சாத்தியம் இல்லை. எனவே சின்னச் சின்னப் பிரச்சினைகளைப் பெரிய பிரச்சினைகளாக ஆக்கிக் கொள்ளாது வாழப் பழகுங்கள்.

**சுகி சிவம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரமான கல்வியைப் பெறும் உரிமை வன்னி மாணவருக்கு இல்லையா?



வன்னிப் பெருநிலப்பரப்புக்கு ஆசிரியர்களை இடமாற்றம் செய்வது இன்று ஒரு சர்ச்சைக்குரிய விடயமாக மாறி உள்ளது. இரு பக்கங்களிலும் நியாய, அநியாயங்கள் முன்வைக்கப்படுகின்றன. இதில் பார்க்கத் தவறும் பக்கமாக வன்னி மாணவர்களின் கல்வி நிலையே உள்ளது.

வன்னிப் பெருநிலப்பரப்பில் இருந்து வெளிமாவட்டங்களுக்கு விடுவிக்கப்பட்ட ஆசிரியர்களுக்குப் பதிலீடாக வன்னி பெருநிலப்பரப்புக்கு இடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்கள் தொடர்பாக மேன்முறையீடுகளும் மீள்பரிசீலனைகளும் இடம்பெற்று வருகின்றன. இது ஒரு புறத்தில் இடமாற்றங்களைக் காலங் கடத்தும் முயற்சியா என்று எண்ண வைக்கிறது.

வன்னிப் பெருநிலப்பரப்பு எனக் குறிப்பிடப்படும் பகுதி கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்கள் உட்பட வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் குறிப்பிட்ட பகுதியையும் மன்னார் மாவட்டத்தில் மடு கல்வி வலயத்தில் குறிப்பிட்டளவு பிரதேசத்தையும் உள்ளடக்கியது. இந்தப் பிராந்தியம் ஒரு காலப் பகுதியில் தனித்துவமான அடையாளங்களுடன் சிவில் நிர்வாகத்துக்கு உள்ளடங்காத பகுதியென வரையறை செய்யப்பட்டிருந்தது.

வன்னிப் பெருநிலப்பரப்புக்கு 2009 ஆம் ஆண்டுக்கு முந்திய காலப் பகுதியில் சில வருடங்களாக ஆசிரியர் நியமனங்கள் எதுவும் வழங்கப்படவில்லை. அத்துடன் நீண்ட காலமாக நடைபெற்ற இராணுவ நடவடிக்கையால் கல்வியில் பல்வேறு பாதிப்புக்கள், இழப்புக்கள் ஏற்பட்டன. வன்னியில் யுத்த சூழல் நிலவிய காலப் பகுதியில் கல்விச் செயற்பாடுகள் அங்கு முற்றாக ஸ்தம்பிதம் அடைந்திருந்தன. ஒரு கல்வியாண்டுக்கு மேற்பட்ட காலம் பாடசாலைகளுக்கு சொல்லாமல் மாணவர்கள் இருந்ததும் உண்டு.

இத்தகைய நிலையில் வன்னிப்பெரு நிலப்பரப்பு மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளை - ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடும் போது அங்கு காணப்படும் இடைவெளியை நிரப்பி மேம்படுத்துவதற்கு மாறுபட்ட கருத்துக்களுக்கு இடமில்லாமல் ஒத்துழைக்க வேண்டியது தமிழ்மொழி - இனம் சார்ந்த ஒருமித்த கருத்தாகக் கொள்ளப்பட வேண்டும்.

ஆசிரியர் இடமாற்றக் கொள்கை தொடர்பாக வடக்கு மாகாணக் கல்வி நிர்வாகத்தில் திட்டமிட்ட வரையறுப்புக்கள் செய்யப்பட்ட கொள்கைத் தீர்மானங்கள் எவையும் இல்லை. மாகாண அமைச்சினால் அறிவிக்கப்பட்ட சுற்றறிக்கைகளுக்கு மாறுபட்ட விதத்திலும் வலயக் கல்வி அலுவலகங்களில் பணிபுரியும் அதிகாரிகளின் சொந்த விருப்பு வெறுப்புக்களுக்கு ஏற்பவும் இடமாற்றங்கள் நடைமுறைப்படுத்தப்படுவது ஆசிரிய இடமாற்றங்களில் மேல் நிலைபெற்று நிற்கின்றது. அதனையும் மறுப்பதற்கில்லை.

**தொடர்ந்து வசதியான இடங்களில் வீட்டுக்கு அருகில் தொடர்ந்து கடமையாற்றவேண்டும் என நினைக்கும் ஆசிரியத்துவம் அபாயகரமானது. அயல் சூழலையோ மாறுபட்ட தரநிலையில் உள்ள மக்கள் வாழ்க்கை முறைகளையோ மாணவர்களையோ கண்டுகொள்ளாமல் விடுவது ஆசிரியருக்கு ஒருவித அறிவியல் ஏழ்மை நிலையை உருவாக்கிவிடும்.**

வன்னிப் பெருநிலப்பரப்பு பாடசாலைகளில் கல்வி கற்பித்த ஆசிரியர்களுக்கு கடந்த 18 வருடங்களுக்கு மேலாக வருடாந்த ஆசிரியர் இடமாற்றக் கொள்கைக்கு அமையவோ வேறு மத்திய கல்வி அமைச்சின் சுற்றறிக்கைகளுக்கு அமையவோ மாகாணக் கல்வி அமைச்சின் சுற்றறிக்கைகளுக்கு அமையவோ இடமாற்றம் வழங்கப்படவில்லை. இதுவும் கவனத்திற்கொள்ளப்படவேண்டும்.

வன்னிப் பெருநிலப்பரப்பில் இருந்து அண்மையில் வெளிமாவட்டங்களுக்கு விடுவிக்கப்பட்ட 342 ஆசிரியர்களும் ஜனவரியில் புதிய பாடசாலைகளில் கடமைப் பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ளப்போகின்றனர். இவர்களின் இடங்களுக்கு பாட ரீதியாக, பதிலீடாக வெளி மாவட்டங்களில் இருந்து வன்னிக்கு இடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்களின் இடமாற்றப் பட்டியலும் பொருத்தமான முறையில் மீளாய்வு செய்யப்பட்டுவிட்டதாகவே தெரிகிறது. இடமாற்றச் சபையில் அங்கம் வகிக்கும் ஆசிரியர் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளும் அதில் ஒப்பமிட்டிருக்கின்றனர் என்று கூறப்படுகின்றது. எனினும் சர்ச்சைகளும் விவாதங்களும் ஓய்ந்தபாடில்லை.



வன்னிப பெருநிலப்பரப்பில் நேரடியாக யுத்தம் நடைபெற்ற காலப் பகுதியில், அதனோடு சேர்ந்த பின்புலத்தில் ஏற்பட்ட பாதிப்புக்களுடன் ஏனைய பிரதேசங்களின் பாதிப்புக்களை ஒப்பிடும் போது, வன்னிப் பெருநிலப்பரப்பில் இழப்பும் பாதிப்பும் ஒப்பீட்டுக்கு உட்படுத்த முடியாத பேரிழப்பாகும்.

## ஆசிரியர் இடமாற்றம் ஒரு நோக்கு

இழப்புக்களை, பாதிப்புக்களை காரணம் காட்டி வெளிமாட்ட ஆசிரியர்கள் வன்னிப் பெருநிலப்பரப்பு இடமாற்றத்தை ஏற்க மறுப்பது எந்த வகையில் நியாயமானது என்று தெரியவில்லை. அப்படி எனில் பாதிக்கப்பட்ட வன்னி மாணவர்கள் தரமான கல்வி கற்பதற் கான உரிமையற்றவர்களா என்ற கேள்வி எழுகின்றது.

மாவட்ட ரீதியில் நிபந்தனை அடிப்படையில் நியமிக்கப்பட்டவர்கள் ஆகக்கூடியது 5 வருடங்களுக்கு மேல் 8 வருடங்களுக்கு உட்பட்ட காலப் பகுதிக்கே நிபந்தனைக்கு உட்படுத்தப்படுவார்கள். அதனையும் தேவையின் நிமித்தம் சேவையைக் கருத்திற்கொண்டு இரத்துச் செய்வதற்கும் மாற்றுவதற்கும் நியமனம் வழங்கிய அதிகாரிக்கு உரிமையுண்டு. இதில் அடிப்படை உரிமை மீறல் என்பதை கருத்தேற்றம் செய்வது ஆசிரியர் தொழிலுக்கே அர்த்தமில்லாமல் செய்துவிடும். தமிழ் மாணவர்களுக்காக அர்ப்பணிப்போடு சேவையாற்றுபவர்கள் ஆசிரியர்கள் என்ற கருத்தையும் கேள்விக்குறியாக்கிவிடும்.

தொடர்ந்து வசதியான இடங்களில் வீட்டுக்கு அருகில் தொடர்ந்து கடமையாற்றவேண்டும் என நினைக்கும் ஆசிரியத்துவம் அபாயகரமானது. அயல் சூழலையோ மாறுபட்ட தரநிலையில் உள்ள மக்கள் வாழ்க்கை முறைகளையோ மாணவர்களையோ கண்டுகொள்ளாமல் விடுவது ஆசிரியருக்கு ஒருவித அறிவியல் ஏழ்மை நிலையை உருவாக்கிவிடும். இந்தவகையில் 15 வருடங்களுக்கு மேற்பட்ட காலங்களாக வேறு பாடசாலைகளுக்குச் செல்லாமல் ஒரே பாடசாலையில் கடமை புரியும் ஆசிரியர்கள் பலர் யாழ் மாவட்டத்தில் உள்ளனர்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு மாவட்ட சேவைத்திட்டத்தின் கீழ் நியமனம் பெற்று யுத்த சூழ்நிலையால் அந்த மாவட்டங்களில் கடமைப் பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ள முடியாமையால் வேறுபடுத்தப்பட்டு யாழ்.மாவட்டத்துக்கு இணைப்புச் செய்யப்பட்டவர்களும் தொடர்ந்தும் வன்னிப் பெருநிலப்பரப்புக்குச் செல்லமுடியாது என்ற வகையில் காரணம் காட்டுவது நிபந்தனையை மீறுவதாக இல்லையா?

சுகயீனம், தாய்சேய் நலம், உளப் பாதிப்பு, உறவுகளைப் பேணல் மற்றும் காரணங்கள் எல்லா மாவட்டங்களையும் சேர்ந்த சகல தரப்பினருக்கும் சொந்தமானது. இது வன்னிக்கு செல்லும் ஆசிரியர்களுக்கு மட்டும் உரியதல்ல. இந்த வகையில் காரணம் காட்டுவது வாதத்துக்கு மட்டும் பொருந்துவதாக இருக்குமே தவிர நடைமுறைக்கு சாத்தியமானதல்ல.

கல்வி அமைச்சு, வன்னிப் பெருநிலப்பு ஆசிரியர்களின் ஆளணித் தேவையை புதிய ஆசிரியர் நியமனத்தினால் நிவர்த்திசெய்து வெளிமாவட்டத்தில் இருந்து வன்னிக்குச் செல்வதை தவிர்கலாம் என்றால், அது தமிழர் விடயத்தில் சாத்தியமானதாக இப்போதைக்கு அமைய வாய்ப்பில்லை. வன்னி மாணவர்களின் கல்வித் தேவைக்கு உதவுவதாக அத்திட்டம் அமையும் என்பது கற்பனை வாதமே தவிர யதார்த்த பூர்வமானது அல்ல.


அவதானி

வன்னிப் பெருநிலப்பரப்பு மாணவர் எண்ணிக்கைக்கு தற்பொழுது அங்கு கடமையில் உள்ள ஆசிரியர்களின் தொகை ஏற்புடையதாக இருக்கலாம். ஆனால் பாட ரீதியிலான ஆசிரியர் ஆளணி பெரும் பற்றாக்குறையாகவே உள்ளது. குறிப் பாக விஞ்ஞான, கணித, ஆங்கில பாடங்களுக்குப் பற்றாக்குறை நிலவுகிறது. வன்னிப் பெருநிலப்பரப்பு மாணவர்களின் கல்வியில் அதிகூடிய கவனம் செலுத்தி இழந்த கல்வியை ஈடு செய்யவேண்டியது காலத்தின் கட்டாயம். அது ஆசிரியர் சமூகத்தின் அதி முக்கியமான கடமைப் பொறுப்புமாகும். அங்குள்ள மாணவர்களுக்கு மட்டும் தரமான கல்வியைப் பெறும் உரிமையை மறுப்பது நாம் எல்லோரும் தமிழர் என்ற நிலையையே கேள்விக்குறியாக்கிவிடும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணுக்குத் தாலி நாகரீகம் அல்ல புனிதமான உறவுக்கு அடையாளம்

பெண்களுக்குத் திருமணத்தின் போது சம்பிரதாய பூர்வமாக அணியும் தாலி அவளுக்கு ஒரு பாது காப்பு வேலியாக அன்று முதல் இன்று வரை அடையாளம் காட்டப்பட்டு வருகிறது. அவ்வாறு அணியப்பட்ட தாலியை அணியும் பெண்களின் எண்ணிக்கை இன்று குறைவடைந்து



வருகிறது. இதற்கு காரணம் சில பெண்கள் தம்மைத் திருமணமானவர் என அடையாளம் காட்டிக்கொள்ள விரும்புவதில்லை. அத்தோடு திருடர் பயமும் காரணமாகின்றது.

தாலியின் சிறப்பைப் பற்றி நோக்கும் போது பெண்கள் தாலி அணிவதன் மூலம் தன்னைத் திருமணமானவரென அடையாளம் காட்டிக் கொள்கிறாள். இதனைப் புனிதமான அணிகலான பெண் அணிந்திருப்பது தனது கணவன் தன்னை திருமணத்தின் போது சம்பிரதாய பூர்வமாக அக்கினி சாட்சியாகவும் அருந்ததி சாட்சியாகவும் சபையினர் சாட்சியாகவும் ஏற்றுக் கொண்டுள்ளார் என்பதனை ஏனையவர்களுக்கு பறைசாற்றுவதற்காகும்.

தனது வாழ்வின் புனிதத்துவத்தை எடுத்துக் காட்டும் இப்புனிதமான தாலியைப் பெண்கள் இன்றும் போற்றிவருகின்ற போதிலும் தற்போதைய சில பெண்கள் இத் தாலியை அணிவதை கௌரவக் குறைவாக நினைக்கிறார்கள். மற்றவர்கள் தம்மைத் திருமணமானவர் என அடையாளம் கண்டு விடுவார்களோ என்பதற்காகவும் இதை அணிந்தால் நாகரீகமில்லை எனவும் கூறுகின்றார்கள்.

நாகரிகம் என்ற போர்வையில் அரைகுறையாக ஆடைகளை அணிந்து கழுத்தில் சிறிய நூல் சங்கிலியையும் அணிந்து நெற்றியில் சிறிய ஸ்டிக்கர் பொட்டும் அணிந்து திருமணமானவரா? ஆகாதவரா? என அடையாளம் காட்டாமல் நவீன உலகில் வாழ்ந்து வருகின்றார்கள்.

இது என்ன கலாசாரம் என்று அவர்களிடம் கேட்டால் இது நாகரிகம் எனவும் இவ்வாறு சென்றால் தான் தம்மை சமூகத்தில் எல்லோரும் மதிப்பார்கள் எனவும் கூறுகிறார்கள் இருந்தாலும் பெண் என்றால் எமது சமுதாயத்தில் சேலை அணிந்து தாலிகட்டி குங்குமப் பொட்டிட்டுச் செல்லும் போது அது அழகாகவும் மற்றவர்களுக்கு முன் மாதிரியாகவும் ஆண்களாலும் சமூகத்தவர்களாலும் மதிக்கக் கூடியவர்களாகவும் இருப்பார்கள். பெண்கள் சமூகத்தில் மதிக்கப்பட வேண் டியவர்கள் இதனால் தான் இன்றும் எமது பெண்களுக்கு அரச அலுவலகங்களிலும் சரி கலாசாரச் சடங்குகள், கோயில்கள், விஷேட தினங்கள் போன்றவற்றிற்கு சேலை அணிய வேண்டும் என்ற கட்டுப்பாடு தொடர்ந்தும் உள்ளது.

ஹருனி

இதனால் தொழில் புரியும் பெண்கள் விரும்பியோ, விரும்பாமலோ சேலை அணிந்து வருகின்றனர்.

பெண்கள் சேலை அணிந்து தாலி அணிந்து சென்றால் ஆண்களினால் ஏற்பாடும் பாலியல் ரீதியான துன்புறுத்தல் குறைவடைந்து சக நண்பர்களாக மதிக்கும் வாய்ப்புக்கள் அதிகரிக்கும்.

எனவே திருமணமான பெண்கள் தமக்கான வெளி அடையாளங்களான தாலி, குங்குமப்பொட்டு, புடவை போன்றவற்றை நாகரிகம் எனப் புறந் தள்ளி வைக்காது அணிவதன் மூலம் சமூகத்தில் போற்றுதலுக்குரிய பெண்மணியாகவும், புனிதமான உறவுகளை மற்றவர்களுக்கு எடுத்துக் காட்டுபவளாகவும் திகழ்வாள். இதனை தமது வாழ்வில் செயற்படுத்தும் ஒவ்வொருவரும் தாய்க் குலத்துக்கே பெருமை சேர்ப்பவளாவாள்.*




## ஏன் பிறந்தோம்...

பெண்ணென்று பூமியில் பிறந்துவிட்டோம்
புண்பட்டு புழுவாய் துயரில் துடிக்கின்றோம்

பிறப்பொன்றாய் மண் மீது உதித்தோம்
இப்போ தாழ்வுற்று தனித்தீவாய் தவிக்கின்றோம்

உயிர் ஒன்றாய் இருந்த போதும்
உடற்கூறால் கீழென்றாகி குறுகித் தவிக்கின்றோம்

தாயென்றும் தெய்வமென்றும் சீர்பெற்று
சிறந்தோம்
தரணி வாழ்வில் எவ்வகையில் தாழ்ந்து விட்டோம்

பிறந்த இடத்திலும் புறந்தள்ளிய தவிப்பு
பிறத்தியாரிடத்தும் சொல்லொண்ணா முறைப்பு

நித்தமும் செத்துச் செத்து பிறப்பு
நித்திய வாழ்வில் ஏனிந்த பரிதவிப்பு

நீதியற்ற செயல்கள் ஒழித்திட விழித்திடுவோம்
நிகர்தான் நாமென்று இனி உரைத்திடுவோம்

நடுங்கி அஞ்சும் நிலையை அகற்றிடுவோம்
நடை பிணங்களல்ல நாங்களென்று
உயர்ந்திடுவோம்

நம்மினமே நமைத் தாழ்த்தாமல் தடுத்திடுவோம்
நயவஞ்சகரை இனம்பிரித்து வேரறுத்திடுவோம்

நெஞ்சத்தில் நேர்நின்று நடந்திடுவோம்
நாளைய உலகம் நாமென்று உணர்த்திடுவோம்.

தர்சிகா

## வாழ்வின் வடிவம்...

வாழ்க்கை:-
எமது வாழ்க்கை இனை கோடுகளின் பயணம் ஆனால் ஒரு கோட்டிற்கு மட்டுமே சுமை
முரண்பாடு:-
எமது நாட்டில் பெண்களைத் தெய்வமென்று வணங்குவோம். ஆனால் அவர்களையே சில வேளைகளில் தீட்டென்று ஒதுக்கி வைப்போம்
சலனமற்ற உலகம்:-
அன்பர்களே உங்களுக்கு விடை தெரிந்தால் சொல்லுங்களேன்? இந்த உலகில் பெண் எப்போது தாழ்ந்து போனாள் ? என்று.
குடும்பச் சிறை:-
எமது வாழ்வில் காலத்தின் கொடுமை வலியது. இதில் பெண்கள் மட்டுமல்ல தென்றல் கூட அடைபட்டுக் கிடக்கின்றது.

-மைதிலி-

## உடல் பருமன் குறைய சைக்கிள் ஓடுவதே நலம்

பருமனாக இருக்கும் 42 வயதுக்கு உட்பட்ட பெண்கள், வாரத்துக்கு 4 மணி நேரம் சைக்கிள் ஓட்டினால் எடை குறையும் அற்புதத்தை காணலாம் என அமெரிக்க ஆய்வு தெரிவிக்கிறது. அமெரிக்காவின் பாஸ்டன் நகரில் உள்ளது ஹார்வர்ட் ஸ்கூல் ஆப் பப்ளிக் ஹெல்த். அதன் சார்பில் 1989 முதல் சில ஆண்டுகள் ஆய்வு நடந்தது. அதில் 18,414 பெண்கள் பங்கேற்றனர். அனைவரும் 25 முதல் 42 வயதுக்கு உட்பட்டவர்கள். அதன் தொடர்ச்சியாக 2ஆவது கட்ட ஆய்வு 2005இல் தொடங்கி இவ்வருடம் வரை நடந்தது. மொத்தம் 1.16 லட்சம் பெண்கள் கலந்து கொண்டனர்.

பங்கேற்றவர்களில் பருமனான பெண்கள் தனியாக பிரிக்கப்பட்டனர். அவர்களில் பெரும்பாலானோர் மெதுவாக நடக்கும் வழக்கம் கொண்டவர்களாகவும், சைக்கிள் ஓட்டிப் பழக்கம் இல்லாதவர்களாகவும் இருந்தனர்.

அவர்களில் ஒரு பிரிவை வாரத்துக்கு 4 மணி நேரம் சைக்கிள் ஓட்டுமாறு தெரிவிக்கப்பட்டது. ஒவ்வொரு பிரிவைத் தினமும் அரைமணி நேர நடைபயிற்சி செய்விக்கப்பட்டது. இடையே அவர்களது எடையில் ஏற்படும் மாற்றங்கள் அவ்வப்போது பரிசோதிக்கப்பட்டன. வாரத்துக்கு 4 மணி நேரம் சைக்கிள் ஓட்டிய பெண்கள் பரிவினர் பரமிக்கத்தக்க வகையில் எடை குறைந்திருந்தனர்.

-அபி

தொடரும்



"அம்மா" என்று அழைக்கும் போது எம்மை அறியமலேயே எமக்குள் ஒரு உணர்வு தோன்றுகின்றது. அது வார்த்தை மட்டுமல்ல. அதனை உச்சரிக்கும் போதே எமக்குள் தோன்றும் புது உற்சாகம் ஆகும். அத்தகைய சொல்லின் மதிப்பே தாய்மையின் மகத்துவத்தை உணர்த்துகின்றது.

## அம்மா...

"நீயும் வளர்ந்து கொண்டு பிறரையும் வளரவை" என்று சுவாமி விவேகானந்தர் கூறியிருக்கின்றார். இதேபோல் பெண்மைக்கு எடுத்துக் காட்டாக தாய் தனக்குள்ளும் ஒரு சிசுவை வளர்த்துக் கொண்டு தானும் வாழ்கிறாள். "தாய்மை" என்னும் உயர்ந்த நிலை பெண்களுக்கு இறைவன் கொடுத்த வரப்பிரசாதமாகும்.

தாயானவள் தனது இரத்தத்தைப் பாலாக தனது குழந்தைக்கு கொடுக்கும் போதே அன்பு, அறிவு, அடக்கம், வீரம், ஆன்மீகம், தியாகம் போன்ற வற்றையும் பெற்றுக் கொடுத்து விடுகிறாள். இதன் மூலம் இப் பிள்ளைகள் அவணியில் நற் பிரஜைகளாக வழிகாட்டி நிற்கின்றாள்.இவ்வாறு புராண காலம் தொட்டும் இன்று வரை. பிள்ளைகளின் எதிர்காலத்திற்காக தன் னையே தியாகம் செய்தவர்களில் தாயே முக்கிய பங்கு வகிக்கிறாள்.

எனவே எமது வாழ்வின் சிறந்ததொரு வழிகாட்டியாக விளங்கும் அன்னையை மதித்து அவளை இறுதிவரை கலங்காது மகிழ்விப்பதே அவளுக்கு நாம் செய்யும் கைமாறாகும்.

சோபனா

## தோழியே...

தோழியே
நீ என்னுடையவள் அல்ல
ஆனால் நான்
உன்னுடையவள்

நாம் இருவரும்
ஆருயிரியில் ஒருயிராய்
இருந்த போதும்
உன் வீட்டின் ஜன்னல் பக்க
கதவுகளை கூட
நான் திறக்கச் சொன்னதில்லை

இருப்பினும் என் இதயக்
கதவுகளை என்றென்றும்
உனக்காக திறந்து வைப்பேன்.

தோழியே நான் என்றும்
உன்னுடையவள்

## சித்திரம்

*ஒரு பெண்ணின் அழகில் மயங்கி அவளை மணப்பது வண்ணச் சுவர்களில் விருப்பப்பட்டு ஒரு வீட்டை வாங்குவது போலாகும்.

*ஒரு பணக்காரப் பெண்ணை மணந்து கொள்ள விரும்புகின்றவன் தனது ஒரு துளி வியர்வையைக் கூட நிலத்தில் சிந்த விரும்பாதவன் ஆகிறான்.

*பல இளைஞர்களிடம் உள்ள குறை பெண்களைப் பற்றி எல்லாம் தெரிந்து வைத்திருக்கிறார்கள் ஆனால் அவர்களின் மனதைப்பற்றி எதுவுமே புரிந்து கொள்ள மாட்டார்கள்.

*அழகிய பெண்ணைக் கண்டவுடன் என் மனதில் தோன்றுவது மனைவியின் பாவை முகமே.

- கறுப்பி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி




நீண்ட கல்விப் பாரம்பரியத்தைக் கொண்ட ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியின் அகவை 138 வருடங்கள் ஆகின்றன. இதன் வளர்ச்சிப் பாதையை பின்னோக்கிப் பார்க்கின்றபோது பல சாதனைகளைப் பதிவு செய்துள்ளதுடன் வேதனையான நிகழ்வுகளுக்கும் முகம் கொடுத்துள்ளதை அறியமுடிகின்றது.

இலங்கை ஆங்கிலேயரின் ஆட்சிக்குட்பட்டிருந்த காலம் அது. இன்று, நேற்று அல்ல 1872 ஆம் ஆண்டு ஊர்காவற்றுறை பங்குத் தந்தையாக விளங்கிய பிரான்ஸ் நாட்டு மறைப் போதகர் அருட்திரு.ஜே.பொய்சோ அ.ம.தி என்பவரால் யாழ். குடாநாட்டுக்கு வெளியே முதன்முதலாக ஆங்கிலம் கற்பிக்கும் பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்டது. ஊர்காவற்றுறை வாழ் மக்கள் மனமுவந்து வழங்கிய ஆறு ஏக்கர் காணியில் கட்டி எழுப்பப்பட்ட புனித அந்தோனியார் கல்லூரியின் முதல் தலைமை ஆசிரியராக எ.சுவாம்பிள்ளை நியமிக்கப்பட்டார்.

**க.ஶ்ரீ**

மறைப் போதகர்களின் பக்கபலத்துடன் இப்பாடசாலை மெல்ல மெல்ல வளர்ச்சி கண்டு வந்தது. 1907 ஆம் ஆண்டில் இப்பாடசாலை ஆங்கிலப் பாடசாலையாகப் பதிவு செய்யப்பட்டது. பின்னர் ஆரம்பப் பாடசாலைக் கட்டடம் 1909 ஆம் ஆண்டில் விஸ்தரிக்கப்பட்டது. 1918 இல் 250 மாணவர்கள் இங்கு கல்வி கற்றபோது அவர்களுடைய கல்விப் பெறுபேற்று வீதம் 89 ஆக இருந்தது என அறிய முடிகிறது. 1921 ஆம் ஆண்டில் இருந்து ஆங்கிலம், தமிழ் என இரு பிரிவுகள் இப்பாடசாலையில் செயற்படத் தொடங்கின.

தற்போதைய பிரதான கட்டடமும் அழகுற உயர்ந்து நிற்கும் போட்டிக்கோவும் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் ஆலயத்தை எதிர்நோக்கிய விதமாக அருட்சகோதரர் பாக்கியநாதர் அதிபராக இருந்த காலத்தில் கட்டியெழுப்பப்பட்டது. "உன்னை பிறதர்மாரின் பாடசாலையில் சேர்த்தால்தான் நீ எல்லா விதத்திலும் சரிப்படுவாய்" என்று பெற்றோர்கள் தமது பிள்ளைகளை இப்பாடசாலையில் சேர்ப்பதில் பெரிதும் ஆர்வம் செலுத்தினர்.





1938 ஆண்டு முதல் அருட்சகோதரர்களிடம் இருந்து குருமார்களின் கைகளுக்குப் பாடசாலை நிர்வாகம் கொண்டுவரப்பட்டது. இதற்கமைய கல்லூரியின் அதிபராக அருட்திரு ஏ.எஸ் ஜோசப் அடிகளார் ஆயரால் நியமிக்கப்பட்டார். இவரின் காலத்திலேயே ஊர்காவற்றுறை குடாக்கடலில் படகோட்டப் போட்டிகளும், நீச்சல் போட்டிகளும் அறிமுகம் செய்யப்பட்டன. இன்றும் இப்போட்டிகள் வருடாந்தம் நிகழ்த்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

1961 ஆண்டில் பாடசாலைகள் அரசினால் பொறுப்பேற்கப்பட்ட போது ஆயரின் பராமரிப்பில் இருந்த 186 கத்தோலிக்கத் தனியார் பாடசாலைகளில் 5 பாடசாலைகளைத் தவிர அனைத்தும் அரசிடம் கையளிக்கப்பட்டன. இந்த ஐந்து பாடசாலைகளில் ஊர்காவற்றுறைப் புனித அந்தோனியார் கல்லூரியும் ஒன்றாகும். அருட்திரு அல்பிறெட் பெஞ்சமின் கல்லூரியின் நூற்றாண்டு கால அதிபராகும் பெருமையைப் பெற்றார் இவரே. ஊர்காவற்றுறை பழைய மாணவர் சங்கம், கொழும்பு பழைய மாணவர் சங்கம் என்பவற்றை ஸ்தாபித்து அவர்களின் உதவியோடு எமிலியானுஸ்பிள்ளை தொழில்நுட்பப் பயிற்சி நிலையத்தை நிறுவி பாடசாலையை விட்டு வெளியேறிய மாணவர்களுக்குத் தொழிற் பயிற்சிகளை வழங்குவதில் பெரிதும் ஆர்வம் செலுத்தினார். 1974 ஆண்டில் அருட்திரு பி.சூசைப் பிள்ளை அடிகளார் அதிபரானார். இவரின் காலப்பகுதியில் வர்த்தக, விஞ்ஞானப் பிரிவுகள் உயர்தர வகுப்புக்களில் அறிமுகப்படுத்தப்பட்டன.

கல்லூரியின் தொடக்க காலத்தில் பொது நிலையினர் அதிபர்களாகவிருந்த பின் மிக நீண்டகாலம் அருட்சகோதரர்களாலும் குருமார்களினாலும் மட்டுமே இக்கல்லூரி வழி நடத்தப்பட்டது. இந்த நிலையில் பொது நிலையினரான எஸ்.ஏ.ஈ இரட்ணராஜா 1976 ஆண்டு முதல் அதிபராகக் கடமையேற்றார். இக்கல்லூரி ஆண்கள் கல்லூரியாக இருந்த போதும் பெற்றோரது வேண்டுகோளையடுத்து பெண் களும் உயர்தர வகுப்புக்களுக்கு அனுமதிக்கப்பட்டதுடன் முதற் தடவையாக ஆசிரியைகளும் கல்வி கற்பிக்க அழைக்கப்பட்டனர். 1978 ஆண்டில் இக்கல்லூரி அரசிடம் கையளிக்கப்பட்டதைத் தொடர்ந்து அரச அதிகாரம் பெற்ற கல்லூரியாகியது. அத்தோடு ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவின் 1AB தரமுடைய ஒரே ஒரு கல்லூரியாகத் தரமுயர்த்தப்பட்டது. 1986 ஆண்டில் கொத்தணி முறை அறிமுகப்படுத்தப்பட்ட போது ஊர்காவற்றுறை கொத்தணிப் பாடசாலையாக ஊர்காவற்றுறைப் புனித அந்தோனியார் கல்லூரி நிறுவப்பட்டு 10 பாடசாலைகள் அதன் கீழ்க் கொண்டுவரப்பட்டன.

1990 இல் உள்நாட்டுப் போர் தீவிரமடைந்ததைத் தொடர்ந்து காரைநகர் கடற்படைத்தளத்திற்கு அருகாமையில் இருந்த ஊர்காவற்றுறைப் பிரதேச மக்களும் இடம்பெயர்ந்தனர். இதனால் கல்லூரியும் செயலிழந்தது.

(தொடரும்...)



# புங்குடுதீவு சர்வோதயம்



(சென்றவாரத் தொடர்ச்சி.....)

சாதாரண மக்களின் கஷ்டங்களை அறிந்து அவர்களுக்கு உதவிகளைப் பெற்றுக் கொடுக்கும் நிறுவனமாகப் புங்குடுதீவு சர்வோதயம் விளங்குகிறது.

ஆசிரியர் ஐந்து பேர்களுக்கான கொடுப்பனவை இந்த அமைப்பின் உதவியுடன் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

ஞாயிற்றுக்கிழமைகளில் தொண்டர் திருநாவுக்கரசு அறநெறிப்பாடசாலை, புங்குடுதீவு கலட்டி ஸ்ரீ வரசித்தி விநாயகர் அறநெறிப்பாடசாலைகளுக்கான மதிய உணவு வழங்கல், புங்குடுதீவில் உள்ள முன்பள்ளி ஆசிரியர்களுக்காக, பிரான்ஸ் புங்குடுதீவு மக்கள் ஒன்றியத்தின் உதவியுடன் 8 ஆசிரியர்களுக்கு மாதாந்தம் ஒருவருக்கு தலா ரூபா 3000/= என்ற அடிப்படையில் வழங்கப்படுகின்றது.

தீவின் முக்கிய வீதிப்புனரமைப்பு, பொதுக்கிணறு, மலசல கூடங்கள் அமைத்தல், சிரமதானப் பணிகள், இளம் பிள்ளைகளுக்குக் குடும்பத்தை - கிராமத்தை வழி நடத்தக் கூடியதான பயிற்சிகள் வழங்கல் என்பன இடம்பெறுகின்றன.அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் சுய தொழில், வாழ்வாதாரத்துக்கென ஆடு, கோழிகள் போன்றவற்றைப் பெற்றுக்கொடுத்தல், யூ.என்.டி.பி உதவியுடன் உணவு பதனிடல், பெண் தலைமைத்துவப் பயிற்சிகள் போன்ற பல்வேறு திசைகளிலும் [illegible] யைத் திருப்பி மக்களின் வாழ்வுக்குக் கைகொடுக்கும் நிறுவனமாக [illegible]

உணவு பதனிடல் குறித்த பயிற்சிபெற்ற யுவதிகள் ஆரம்பத்தில் 250 ரூபா வருமானம் பெற்றபோதும் தற்சமயம் மாதம் ஒன்றுக்கு ரூபா 4000/= வரை வருமானம் பெறுவதாகக் கூறுகிறார்கள். இதில் 17பேர் பயிற்சி பெற்றிருந்தனர். பதனிட்ட உணவுப் பொருள்கள் உள்ளூரில் உள்ளவர்களுடன் மட்டும் நின்றுவிடாது வெளிநாடுகளில் உள்ள மக்களது கவனத்தையும் ஈர்த்துள்ளது எனவும் சொல்லப்படுகின்றது.

ஆன்மீக நெறிகளை வளர்ப்பதிலும் சர்வோதய அமைப்பு தனது பங்களிப்பை முழுமையாக வழங்கி வருகின்றது.

வட இலங்கை சர்வோதய அமைப்பு இத்தனை உதவிகளைக் கிராமத்துக்கும் அயல் கிராமங்களுக்கும் வழங்குவதற்கு அது ஒரு பெரிய வருமானத்தைக் கொண்டிருக்கும் அமைப்பல்ல. வெளிநாடுகளில் உள்ள புங்குடுதீவு மக்கள், கொழும்பில் உள்ள மக்கள் தாராளமாகவே ஊருக்குச் செய்ய வேண்டும் என்று விரும்புகிறார்கள். ஜமுனதேவி நிதியத்தின் ஊடாக புங்குடுதீவின் 12 வட்டாரங்களிலும் கல்வியை ஊக்குவிக்க மாதம் ரூபா 1000 படி வழங்கப்படுகின்றது. பல்கலைக் கழகத்தில் பயிலும் இடம்பெயர்ந்த மாணவர் ஒருவருக்கு ரூபா 2000/= வீதம் 12 மாணவர்களுக்கு லண்டனைச் சேர்ந்த ஆவர்த்தன நிறுவனத்தின் உதவியுடன் வழங்கப்படுகின்றது.

**- லக்ஸ்மன்**

திட்டங்களைத் தயார்ப்படுத்தி வெளிநாடுகளில் உள்ள புங்குடுதீவுக்கான அமைப்புக்களுக்கு அனுப்புவது எமது கடமை என்கிறார் பொறுப்பாளர் செல்வி க.புஸ்பமணி. நிர்வாகத்தர் செல்வி பொ. ஜமுனதேவி இது குறித்து கூறுகையில்: 'தற்சமயம் பல்வேறு துறைசார்ந்த அலுவலகப் பணியாளர்கள் 7 பேரும், தொண் டர்களாக 50 இற்கு மேற்பட்டவர்களும் சேவையில் உள்ளனர்.

நிறுவனத்தைக் கொண்டு நடத்த பக்கபலமாக நியாயவிலை, சில்லறை புடவை நிலையம் போன்றவற்றை ஏற்படுத்தி அதில் கிடைக்கும் வருமானத்தில் ஒருபகுதியை நிலையத்தை நடத்துவதற்குப் பயன்படுத்துகிறார்கள்.

நெடுந்தீவு கடல்போக்குவரத்துச் சேவைகள் பாதிப்படையும்போது இங்கே வந்து தங்கிநிற்கும் மக்களுக்கான தேவைகள் உரியமுறையில் செய்யப்படுகின்றது. 1984 ஆண்டில் கஷ்டமான காலத்தில் தோட்டம் செய்தும், சிறிய போத்தல்களைச் சேகரித்தும், மிளகாய், கோப்பி, எள்ளுப்பாகு போன்றவற்றை உற்பத்தி செய்து அதில் கிடைத்த சொற்ப வருமானத்திலேயே எமது பணியாளர்களின் உணவுக்குப் பயன்படுத்தப்பட்டது- என்றார்.

மனிதன் மனித விழுமியங்களுடன் வாழக் கூடியதாக எதிர்கால சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்பதால் ஸ்தாபகர் திருநாவுக்கரசு இதை தாய் நிலையமாக வைத்திருக்க வேண்டும் என விரும்பினார். அந்த லட்சியம் சிதறிவிடாமல் ஒரு சிறப்பான எதிர்காலத்தை எமது மக்கள் பெறவேண்டும் என்பதற்காக ஜீவதாணிகளாக இருந்து செயற்பட்டு வட இலங்கை சர்வோதய [illegible] காப்பவர்கள் செல்விகள் க.புஸ்பமணி, பொ.ஜமுனதேவி. [illegible] பணி இது என்கிறார்கள் பயனாளிகளான மக்கள். (முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். குடாநாட்டுப் பாடசாலைகளின் உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள்

யாழ்ப்பாணம், டிசெ.28

கடந்த ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ.(உயர்தர) பரீட்சையின் முடிவுகள் அண்மையில் வெளியாகின.

இந்தவகையில் பாடசாலை அதிபர்களால் அனுப்பி வைக்கப்பட்ட சித்தியடைந்த மாணவர்களின் விவரங்களை உதயன் தொடர்ச்சியாக வெளியிட்டு வருகிறது. ஒரு தொகுதி மாணவர் விவரம் வருமாறு:

**மீசாலை வீரசிங்கம் ம.வி**

**கலை:**

கந்தசாமி மனோசா-3ஏ, தவராசா நித்தியரூபன்-2ஏபி, ஈஸ்வரன் தமிழினி-2ஏபி, சுப்பிரமணியம் சுபநீதன்-ஏ2பி, தம்பிராசா சுரேகா-ஏபிசி, சின்னத்துரை நிரோஜன்- ஏ2பி, மோகனதாஸ் அருள்ராஜ்-ஏ2சி, சிங்கராசா கீர்த்தனா-ஏ2சி.

**வணிகம்:**

ஜெயராமு சிந்துஜா-2ஏசி, சிவகுரு தனுஷன்- 2ஏசி, பரராஜசிங்கம் நிகிந்தன்-ஏபிசி, கந்தையா கஜீபன்-2பிசி.

**வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி**

**கணிதம்:**

ஜே.ஜட்சன்-2ஏபி, இ.வேல்மகிபன்-2ஏபி.

**உயிரியல்:**

ச.பாமினி- 2பிசி, த.குமுதினி- பி2சி, இ.பகீரதன்-3சி.

**வர்த்தகம்:**

து.திவாயினி- ஏ2பி, நே.சிவானுஜா-ஏ2பி, த.வேனுசா-ஏபிசி, ந.கிருசாந்தினி-2பிசி.

**கலை:**

மு.றஞ்சனா- 3ஏ, நா.பிரதீபா-2ஏபி, ஞா.சிந்துஜா- 2ஏசி, எ.துனுசியா- 2ஏசி, ம.திவ்யா- ஏ2பி, வ.சோபிகா- ஏ2பி, க.சுபத்திரா-ஏபிசி, க.றெஜிந்தா-ஏபிசி, பு.யாழினி-ஏபிசி, பா.நிருசா-ஏபிசி, க.லசந்தி- ஏபிசி, இ.அஸ்வினி-ஏபிசி, யோ.ஜினித்தா-ஏபிசி, தி.மோகனவாணி-ஏபிசி, ச.சிவரூபி- 2பிசி, த.கேதீஸ்-ஏசிஎஸ்.

## மீளாய்வுக் கூட்டம்

வடமராட்சி கல்வி வலயத்தின் வருட இறுதிக்கான மாதாந்த மீளாய்வுக் கூட்டம் நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணிக்குப் புலோலி மெதடிஸ்த மிஷன் தமிழ்க்கலவன்பாடசாலை மண்டபத் தில் மேற்படி வல யக் கல்விப் பணிப் பாளர் வ.செல்வராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் பிரதிக்கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், சேவைக்கால ஆலோசகர்கள் மற்றும் வடமராட்சி வலயப் பாடசாலை அதிபர்கள் ஆகியோரை தவறாது கலந்துகொள்ளுமாறு வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

(201)


## தேவை

யாழ்.நகரை அண்டிய பகுதியில் கடையோ அல்லது வெற்றுக்காணி குத்தகைக்குத் தேவை.

தொடர்புகளுக்கு: 077 320 8634, 0777 144130, 021 7201282. (108112)




சீட்டிழுப்பு இலக்கம் 711 திகதி 27-12-2010

வெற்றி எண்கள்

08 23 32 40 Z (ஆங்கில எழுத்து)

ஜக்பொட் பரிசு ரூ. 18,983,050/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 18,983,050/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 02 | 400,000/= | 800,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 19 | 2,000/= | 38,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 401 | 1,000/= | 401,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 657 | 1,000/= | 657,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 16473 | 60/= | 988,380/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 7752 | 40/= | 310,080/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 195061 | 20/= | 3,901,220/= |
| | | மொத்தம் | ரூ. 7,095,680/= |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா 50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| காலி | 600668345-4-34 |
| கம்பஹா | 600669002-9-09 |
| அம்பாறை | 600664402-3-33 |
| கேகாலை | 600665598-9-29 |
| மாத்தளை | 600666174-8-08 |
| கண்டி | 600671699-4-14 |
| வவுனியா | 600667940-2-32 |
| புத்தளம் | 600660677-7-37 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 7,495,680/=

இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட

ரூ. 19,511,200/=

செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2010 டிசம்பர் 30 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02

தொ.பே: 2333546/7

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்


## கண்ணீர் அஞ்சலி



வலி.தென்மேற்கு, சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலராக இருந்தபோது எமது பிரான்பற்றுக் கிராமத்தின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டவராகிய முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர்

**நாகலிங்கம் வேதநாயகன்**

அவர்களின் அன்புத் தந்தை

**பண்டிதர் கனகர் நாகலிங்கம்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நிர்வாகமும் கிராமமக்களும்.
பிரான்பற்று கலைமகள் சனசமூக நிலையம்.

(சி/573742)


## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான No.1 பிறிமா புறொயிலர் கோழிக் குஞ்சுகள் நியாயமான விலையில் 30.12.2010 காலை விநியோகிக்கப்படும். முன்பதிவு செய்யவும்.

(பின்பு 100 வீதம் இறைச்சிக் கோழிகள் திருப்பி வாங்கப்படும்.)

நல்லூர் பாம் சென்ரர்.
19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம். 021 222 6944

## இறைச்சிக் கோழி விற்பனை

நத்தார், புதுவருடத்தை முன்னிட்டு உள்ளூரில் உற்பத்திசெய்யப்பட்ட புறொயிலர் இறைச்சிக்கோழி சுத்தம் செய்யப்பட்டது. 1kg 450/= மட்டும். (காலை 6 மணிதொடக்கம் இரவு 8 மணிவரை வியாபாரம் நடைபெறும்).

நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் லேன், நல்லூர்.

(107846)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
# அந்தியேட்டி அழைப்பும்



## பத்மநாதன் சுரேஸ்

காலனும் தன் கணக்கைக் கணப்பொழுதில் முடித்துவிட
கரைந்தோடி விட்டதையா முப்பத்தொரு நாள்கள்
கண்டது கனவென்று கண் திறந்து பார்க்கின்றோம்.
கண்முன்னே - நீர் இல்லை கண்கலங்கி நிற்கின்றோம்
பாரினில் எமையெல்லாம் பரிதவிக்கவிட்டு
வானுலகம் சென்று விட்டாயே ஐயா!
நிலவில்லா வானம் போல் ஆனதே எம் இதயம்
நீங்கள் இல்லா நாங்கள்- தாங்குவோமோ இந்நிலையை
ஏங்கி நிற்கின்றோம் உம் அன்புக்காக
என்றுமே நினைத்து நிற்கின்றோம் உம்மை



கடந்த 28.11.2010 - 29.11.2010 அன்று எம்மைவிட்டுப் பிரிந்த எமது குடும்பக் குலவிளக்குகளின் மறைவு கேட்டு எமக்கு நேரிலும் தொலைபேசியிலும் மரணச் சடங்கிலும் பங்குபற்றிய அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன் இன்று (29.12.2010) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும்மதிய போசன நிகழ்விலும் பங்குகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்

[illegible] வீதி,
சாவகச்சேரி.



## பத்மநாதன் செல்வமலர்

குடும்பத்தின் குல விளக்காய் மறவா
அன்புடன் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும்
ஒளியூட்டிய அன்புத் தெய்வம் நீங்கள்
மாதம் ஒன்று சென்றாலும்
உங்கள் குரல் காதில் கேட்குதே!
நீங்காத நினைவுகளுடன்
ஆத்மா சாந்திபெற ஆண்டவனை வேண்டுகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களுவாஞ்சிக்குடி தொழிற்பயிற்சி நிலைய சொத்துக்களைச் சூறையாட முயற்சி

## நிர்வாகம் கவலை தெரிவிப்பு

மட்டக்களப்பு, டிசெ.29

களுவாஞ்சிக்குடி தொழிற்பயிற்சி நிலையத்தில் நடைபெறும் பயிற்சிநெறிகளை இடைநிறுத்தி, அங்குள்ள விலைமதிப்புள்ள சொத்துகளைச் சூறையாட சிலர் திட்டமிட்டுள்ளனர் என களுவாஞ்சிக்குடி தொழிற்பயிற்சி நிலைய நிர்வாகம் தெரிவிக்கின்றது.

களுவாஞ்சிக்குடியில் அமைந்துள்ள தொழிற்பயிற்சி நிலையத்தில் பிளமிங் மோட்டார் சைக்கிள் திருத்துதல், தகவல் தொழில்நுட்பம், ஆடையலங்காரம் செய்தல், மின்சார உபகரணம் திருத்துதல் ஆகிய பயிற்சி நெறிகள் மிகவும் சிறப்பாக இடம்பெற்று வந்தன.

எனினும், கடந்த சில காலங்களாக இத்தொழிற்பயிற்சி நிலையத்தை சீர்குலைக்கும் எண்ணத்திலும், இங்கு இப்பிரதேச மாணவர்களுக்காக யூ.எஸ்.எயிட் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட விலைமதிப்புள்ள பயிற்சி உபகரணங்களை அபகரிக்கும் நோக்கிலும் சிலர் திட்டமிட்டு செயற்பட முனைந்துள்ளனர் என தொழிற்பயிற்சி நிர்வாகம் சுட்டிக்காட்டுகின்றது.

சிலர் இப்பிரதேச ஒற்றுமையைச் சீர்குலைக்கும் நோக்குடன் இவ்வளங்களை வெளியேற்றுவதற்குத் திட்டமிட்டுள்ளனர். தற்பொழுது பயிற்சிநெறிகளுக்கான எந்த வித பொருட்களும் இல்லை.

ஆனாலும் பயிற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதனால் அங்கு பயிலும் மாணவர்களின் வரவும் மிகக் குறைவாக உள்ளது என்றும் இந்நிர்வாகம் குறிப்பிடுகின்றது.

ஆழிப்பேரலை பேரழிவை அடுத்து அபிவிருத்தி நடவடிக்கைக்காக யூ.எஸ்.எயிட் நிறுவனம் இத் தொழில் பயிற்சி நிறுவனத்தை சகல வசதிகளுடனும் ஆரம்பித்தது. இச் சொத்துகள் அனைத்தும் இப்பிரதேசத்திற்கே உரித்தானவை, ஐந்து வருடகாலத்திற்கு இவற்றை எங்கும் கொண்டு செல்ல முடியாது என்றும் அது குறிப்பிடுகின்றது.

எனினும் பிமிங், மோட்டார் சைக்கிள் திருத்துதல் பயிற்சி நெறியை இவ்வருடம் இடைநிறுத்தியுள்ளனர். ஆனால் அவற்றுக்காக நூற்றுக்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன. எனவே இவ்விடயத்தில் உரிய அதிகாரிகள் உடனடித் தீர்வு வழங்க முன்வரவேண்டும் என களுவாஞ்சிக்குடி தொழிற்பயிற்சி நிலையத்தின் நிர்வாகம் மேலும் வேண்டுகோள்விடுக்கின்றது. (ளி)




# கிழக்கு ஊடகவியலாளர்களுக்கு மாகாண சபைக் கொடுப்பனவு

அம்பாறை, டிசெ.29

கிழக்கு மாகாண சபை அமர்வுகளில் செய்தி சேகரிக்கும் பொருட்டு வருகை தரும் ஊடகவியலாளர்களில் முதல் 10 பேருக்கு தலா 2 ஆயிரம் ரூபா கொடுப்பனவாக வழங்குவதற்குத் தாம் தீர்மானித்துள்ளார் என கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தன்னிடம் தெரிவித்தார் என அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளனத் தலைவர் மீரா எஸ்.இஸ்ஸதீன் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளனத்தின் மாதாந்தக் கூட்டம் கடந்த சனிக்கிழமை அக்கரைப்பற்று அதாவுல்லா அரங்கில் இடம்பெற்றது.

இக்கூட்டத்துக்குத் தலைமை தாங்கி உரையாற்றும் போதே மீரா எஸ்.இஸ்ஸதீன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்,

அண்மையில் அம்பாறை மாவட்டத்துக்கு முதலமைச்சர் வந்திருந்தார். அப்போது அவரைச் சந்தித்து ஊடகவியலாளர்களின் நலன்கள், பிரச்சினைகள் ஆகியவை குறித்து நாம் பேசினோம்.

அதன்போது கிழக்கு மாகாண சபை அமர்வுகளில் செய்தி சேகரிக்கும் பொருட்டு வருகை தரும் ஊடகவியலாளர்களில் முதல் 10 பேருக்கு தலா 2 ஆயிரம் ரூபா கொடுப்பனவாக வழங்குவதற்குத் தாம் தீர்மானித்துள்ளார் என முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

அதேவேளை, அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளன அங்கத்தவர்களுக்கு இலவச பஸ் போக்குவரத்துக்கான 'பாஸ்'களை வழங்குவதற்கும் முதலமைச்சர் இதன்போது உறுதியளித்துள்ளார் - என்றார். (ளி)

# மத்திய வங்கியின் கிளை அலுவலகம் திருகோணமலையில் திறந்து வைப்பு

திருகோணமலை, டிசெ.29

இலங்கை மத்திய வங்கியின் மாகாணங்கள் தோறும் பிராந்தியக் காரியாலயங்கள் ஆரம்பிக்கும் திட்டத்தின் கீழ்- கிழக்கு மாகாணத்தில் தனது 5 ஆவது கிளையைத் திருகோணமலையில் மத்திய வங்கி அண்மையில் ஆரம்பித்துள்ளது.

திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்ட மக்கள் இதுவரை காலமும் மத்திய வங்கியின் பிராந்தியக் காரியாலயம் இல்லாமல் இருந்ததனால் கொழும்பு சென்றே தமது தேவைகளை நிறைவேற்றினர். இவற்றினை இல்லாதொழிக்கும் முகமாகவே திருகோணமலையில் இலங்கை மத்திய வங்கியின் 5 ஆவது மாகாண பிராந்தியக் காரியாலயமாக திறக்கப்பட்டுள்ளது.

மத்தியவங்கியின் வட மாகாணக்கிளை யாழ்ப்பாணத்தில் இந்த வருட நடுப்பகுதி யில் திறக்கப்பட்டதைத் தொடர்ந்து தற்போது கிழக்கு மாகாணத்திலும் மத்திய வங்கியின் கிளை திறக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-15)

# பத்தினி புரத்தில் வெள்ளம் குடும்பங்கள் இடம்பெயர்வு

திருகோணமலை மாவட்டத்தின் தம்பல காமத்திலுள்ள பத்தினிபுரம் கிராமம் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. இதனால் அங்கிருந்த 150 குடும்பங்கள் கடந்த சனிக்கிழமை காலை இடம் பெயர்ந்துள்ளன.

பாலங்கோட்டாறு சித்தி விநாயகர் ஆலயத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள இக்குடும்பங்களுக்கு உணவுவழங்குவதற்கான ஏற்பாடுகளைத் தம்பலகாமம் பிரதேச செயலாளர் தென்னகோன் மேற்கொண்டுள்ளார். கல்வெட்டியாவ குளம் நிரம்பி வழிந்ததால் பத்தினிபுரம் கிராமம் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. (ளி)

# வாழைச்சேனை பள்ளிவாசலில் சுஹதாக்கள் தின நிகழ்வு

மட்டக்களப்பு, டிசெ.29

கல்குடாத் தொகுதி முஸ்லிம் பிரதேசத் தின் சுஹதாக்கள் தினம் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை வாழைச்சேனை முஹைதீன் ஜும் ஆ பள்ளிவாசலில் நடைபெற்றது.

1992ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 26ஆம் திகதி நிலக்கண்ணி வெடியில் ஸஹீதாக்கப்பட்ட மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரச அதிபரும் எழுத்தாளருமான வை.அஹமத், சட்டத்தரணி ஏ.பி.எம்.முஹைதீன், பிரதேச செயலாளர் ஏ.ஏக. உதுமான், சாதுலியா வித்தியாலய அதிபர் எஸ்.ஏ.எஸ்.மஹ்முத், விறகு வியாபாரி சாஹுல் கமீட் ஆகியோரின் 18ஆவது ஆண்டு நிறைவையொட்டி சுஹதாக் கள் தினம் நடைபெற்றது.

கல்குடா சமூக விழிப்புணர்வுக்கான ஒன்றியத்தின் தலைவர் ஏ.பி.எம்.இர்பான் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஜாமியா நளீமியா கலாபீடத்தின் விரிவுரையாளர் ஏ.பி.எம்.இத்ரீஸ் சிறப்புப் பேச்சாளராகக் கலந்துகொண்டார்.

கிழக்கு மாகாணசபை உறுப்பினர்களான எ.ஜவாஹிர்சாலி, எம்.எச்.எஸ்.இஸ்மாயில், வாழைச்சேன மாவட்ட வைத்திய சாலையின் வைத்திய அதிகாரி ஏ.எஸ்.எம்.அஜமுன் நிஸாம் ஆகியோரும் கலந்துகொண்டனர். (ளி)

# மாத்தளை மாவட்டத்தில் இயங்காதிருக்கும் தேயிலைத் தொழிற்சாலைகள் மூடப்படும் அபாயம்

## அரசைப் பொறுப்பேற்குமாறு வேண்டுகோள்

மாத்தளை, டிசெ.29

மாத்தளை மாவட்டத்தில் இயங்காத நிலையிலுள்ள பல தேயிலைத் தொழிற்சாலைகள், பராமரிப்பின்றிக் கிடப்பதால் காலப்போக்கில் அவற்றை மூடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி தொழிற்சாலைகளில் அரைப்பதற்கானகொழுந்துகள் கிடைக்காத காரணத்தாலேயே நீண்டகாலமாக மூடப்பட்டு பராமரிப்பின்றிக் கிடக்கின்றன.

பாரிய செலவில் நிர்மாணிக்கப்பட்ட இத் தொழிற்சாலைகள் வீணே சேதமடைவதைத் தடுக்கவேண்டுமானால்அவற்றை அரசு பொறுப்பேற்று வேறு ஏதாவது தொழில்களை ஆரம்பிக்க வேண்டும். - என மாத்தளை மாவட்ட இணைப்பதிகாரியும், நாடாளுமன்ற உறுப்பினருமான லக்ஷ்மன் வசந்த பெரேரா தெரிவித்தார்.

அண்மையில் மாத்தளை பிரதேச செயலகத்தில் நடைபெற்ற இணைப்பதிகாரிகள் குழுக் கூட்டத்தில் உரையாற்றிய வசந்த பெரேரா தெரிவித்தவை வருமாறு:-

ஆங்கிலேயர்களால் கட்டப்பட்ட இந்தத் தொழிற்சாலைகள் பராமரிப்பு இல்லாத நிலையில் அவற்றிலுள்ள பல கோடி ரூபா பெறுமதியான இயந்திரங்களும், தளபாடங்களும் உருக் குலைந்து போகின்றன. இது நாட்டுக்குப் பேரிழப்பாகும்.

மூடப்பட்டிருக்கும் மேற்படி தொழிற்சாலைகளை அரசு உடனடியாகப் பொறுப்பேற்று அவற்றில் ஆடை உற்பத்தியையோ அல்லது வேறு ஏதாவது உற்பத்தி நடவடிக்கைகளையோ ஆரம்பிக்கவேண்டும்- இவ்வாறு வசந்த பெரேரா தெரிவித்தார். (ளி)

# காலாவதியான பக்கெற் பாலை அருந்திய சிறுமி பரிதாப மரணம்

குருநாகல், டிசெ.29

கடையில் வாங்கப்பட்ட காலாவதியான குளிரூட்டிய பால் பக்கெற் ஒன்றிலிருந்த பாலைப் பருகிய ஐந்து வயதுச் சிறுமி குருநாகல் போதனா வைத்திய சாலையில் உயிரிழந்தார்.

பொல்பித்திகம பிரதேசத்தில் வசித்த இசாங்கா திவ்யாங்கனி எனும் சிறுமியே இவ்வாறு மரணமாகியுள்ளார்.

கடந்த 17ஆம்திகதி அவரது தாயுடன் பிரயாணமொன்றை மேற்கொண்டபோது இடை நடுவில் கடையில் வாங்கிய குளிரூட்டப்பட்ட பக்கெற் பாலை அருந்தியுள்ளார்.

அதனைத் தொடர்ந்து கடும் சுகவீன முற்று, குருநாகல் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். எட்டு நாள்களாக தீவிர சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்ட போதும் சிறுமியின் உயிரைக் காப்பாற்ற முடியவில்லை.

பிரபல நிறுவனமொன்றால் தயாரிக்கப்பட்ட இந்தப் பாலை விற்ற கடைக்காரருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

குருநாகல் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் வாஸ் குணவர்தனவின் பணிப்புரையின் கீழ் பொலிஸார் விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர். (ளி)

# 7 வருடங்களுக்கு முன் நடந்த கொலை : இறந்தவரின் மனைவி, பெறாமகன் கைது

ஏழு வருடங்களுக்கு முன்பு கொலை செய்யப்பட்ட நபரொருவரின் மனைவியும், உறவுமுறை மகனும் தென்மாகாண விசேட குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டனர். பத்தேகம பிரதேச வாசியான பியசேன (வயது-55) எனும் தோட்டத் தொழிலாளியே கொலை செய்யப்பட்டிருந்தார். கொலையுண்ட நபர் இரண்டு திருமணங்களை செய்திருந்தவரெனத் தெரிய வந்துள்ளது. கைதான நபர்கள் இருவரும் அவரைப் பொல்லால் தாக்கிக் கொலை செய்தபின் சடலத்தை வீட்டுத் தோட்டக் கிணற்றுக்குள் தள்ளி மண்ணால் மூடி அதற்கு மேலாகத் தேயிலைச் செடியை நட்டு வைத்துள்ளனர்.

தன் கணவன் தொழில்தேடி வேறொரு பிரதேசத்துக்குச் சென்று விட்டார் எனக் கூறி வந்த மனைவி அதன் பிறகு அவர் காணாமல் போய் விட்டார் என வதந்தியைப் பரப்பியுள்ளார். மரணமானவரின் முதல் மனைவிக்குப் பிறந்த மகன் காலி கோட்டை விசேட பொலிஸ் செயலணிக்குத் தெரிவித்த முறைப்பாட்டையடுத்தே சந்தேகநபர்கள் கைதாகினர். பத்தேகம நீதிவானின் உத்தரவுக்கமைய கடந்த வெள்ளிக்கிழமை அவரது முன்னிலையில் சடலம் தோண்டி எடுக்கப்பட்டது. தென்மாகாண விசேடக் குற்றத்தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி சிந்தக்க பனாவல தலைமையில் விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. (ளி)

# பதுளையில் தொலைபேசி விற்பனை நிலையம் உடைக்கப்பட்டு 100 செல்போன்கள் திருட்டு

கடந்த பூரணை தினத்தன்று இரவு பதுளை முத்தியங்கன மணிக்கூண்டுக் கோபுரத்தின் முன்னால் அமைந்துள்ள தொலைபேசிகள் விற்பனை நிலையம் உடைக்கப்பட்டு அங்கிருந்த நூறு கையடக்கத் தொலைபேசிகள் திருடப்பட்டுள்ளன என அந்நிறுவனத்தின் உரிமையாளர் பதுளை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.




கடையின் முன் கதவிலிருந்த பூட்டுகளை உடைத்து கதவைத் திறந்து கொண்டு கொள்ளையர்கள் உள்ளே நுழைந்துள்ளனர் என அவரது முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பதுளை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆனந்த விஜே சூரியவின் பணிப்புரையின் கீழ் பதுளை தலைமையக பொலிஸ் பொறுப்பதிகாரி பண்டார ரத்நாயக்காவின் தலைமையில் மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. (ளி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அகராதிச் சொற்கள்...

அகடவிகடம்
கோமாளிச் செயல்: சிரிப்பு வரவழைக்கும் சொல்.
அகம்பாவம்
திமிர் : திமிரானசெயல்: பேச்சு.
அகலக்கால் வைத்தல்
சிந்தனையின்றி இறங்குதல்.
அகஸ்மாத்தாக
தற்செயலாக: எதிர்பாராதவாறு.
அக்கக்காக
பகுதி பகுதியாக.
அக்கடா
ஓய்வைக் குறிக்கும் வியப்புச் சொல்.
அக்கடா என்று ஓய்வாக.
அக்கப்போர்
புரளி.
அக்கம் பக்கம்
சுற்றியிருக்கும் பகுதி.
அக்கிரமம்
முறையற்றது.

கௌதமி

## மாணவர்களுக்குச் சில தகவல்கள்...

**1 . வானத்தைப் பிரதிபலிப்பதால் கடல் நீர் நீலம்.**
உண்மையில் தூய நீர் நீல நிற இரசாயனப் பொருள். நீரின் மூலகக்கட்டமைப்பு ஒளியின் நீலம் தவிர்ந்த அனைத்து நிறங்களையும் உறிஞ்சிவிட்டு நீலத்தை மட்டும் வெளிவிடுகிறது.கோப்பை ஒன்றில் உள்ள நீர் அளவு குறைவாக உள்ளதால் வெளியாகும் நீல நிறம் கண்ணுக்குத் தெரியாது என்பதால் அது நீலமாக தெரிவதில்லை.

**2 . பிரதான நிறங்கள் - சிவப்பு, மஞ்சள், நீலம்.**
உண்மையில் பிரதான நிறங்கள் சிவப்பு, மஞ்சள், நீலம் ஆகும். இவைதான் ஒளியின் பிரதான கட்டமைப்பு நிறங்கள் ஆகும். பாடசாலையில் சிவப்பு, மஞ்சள், நீலம் ஆகிய நிறங்களைக் கொண்டு பல நிறங்களை ஆக்கலாம் எனக் கூறப்பட்டாலும் உண்மையில் இவற்றைக் கொண்டு ஆக்கக் கூடிய நிறங்களை ஆக்க முடியாது.

**3 . சீனப் பெருஞ் சுவர் விண்வெளியில் தெரியும்.**
உலகில் நீளமான மனித படைப்பான இது வெண்வெளியில் (9000 கிலோ மீற்றர் )இருந்து அதுவும் சந்திரனில் இருந்து பார்க்கமுடியும் எனப் பரவலாகக் கருதப்பட்டாலும் வெறும் 10 மீற்றர் அகலமான இதனைக் காண்பது சாத்தியமே அல்ல என நாசா கூறுகிறது. இது 2700 கி.மீற்றருக்கு அப்பால் இருந்து ஒரு தலைமுடியைப் பார்ப்பதற்கு ஒப்பானது.

## இராமாயணம்

வால்மீகி என்னும் முனிவரால் சமஸ்கிருத மொழியில் இயற்றப்பட்ட மிகப் பழைய இதிகாசமாகும். இது கி.மு. 400ஆம் ஆண்டுக்கும் கி.பி. 200 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் இயற்றப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. இது இந்து சமயத்தின் முக்கியமான நூல்களுள் ஒன்று. மூல நூலான வால்மீகியின் இராமாயணத்தைத் தழுவிப் பல இந்திய மொழிகளிலும், பிற நாடுகளின் மொழிகளிலும் ராமாயணம் இயற்றப்பட்டுள்ளது. கம்பர் என்னும் புலவர் இதனைத் தமிழில் எழுதினார். இது கம்ப இராமாயணம் எனப்படுகின்றது. கெமர் மொழியில் உள்ள ரீம்கெர், தாய் மொழியில் உள்ள ராமகியென், லாவோ மொழியில் எழுதப்பட்ட ப்ரா லாக் ப்ரா லாம், மலாய் மொழியின் இக்காயத் சேரி ராமா போன்றவை வால்மீகியின் இராமாயணத்தைத் தழுவியவையே ஆகும். கோசல நாட்டின் தலை நகரமான அயோத்தியைச் சேர்ந்த ரகு வம்ச இளவரசரான இராமர், அவர் மனைவி சீதை ஆகியோரின் வாழ்க்கையை விவரிக்கும் இந்த இதிகாசம், உறவுகளுக்கு இடையேயான கடமைகளை எடுத்துக் காட்டுகின்றது. சிறந்த வேலையாள், சிறந்த தம்பதி, சிறந்த மனைவி, சிறந்த அரசன் போன்றோர் எப்படி இருக்கவேண்டும் என்பது இதன் கதை மாந்தர்கள் மூலம் விளக்கப்படுகின்றது.இராமாயணம் என்னும் பெயர் இராமன், ஆயனம் என்னும் சொற்களின் கூட்டாகும். ஆயனம் என்னும் சொல் சமஸ்கிருதத்தில் பயணம் என்னும் பொருளுடையது. இதனால், இராமாயணம் என்பது, இராமனின் பயணம் என்னும், பொருள் குறிக்கிறது.

## சொர்க்கம் சென்ற சோற்றுமூடை



பரமார்த்தர் எங்கோ வெளியே சென்றிருந்தார். சீடர்கள் மட்டும் திண்ணையில் இருந்தனர். அப்போது புளுகன் ஒருவன் அங்கே வந்தான். திண்ணையில் படுத்தபடி, ''அப்பாடா! இப்போதுதான் சொர்க்கத்தில் இருப்பது மாதிரி இருக்கிறது!'' என்று கூறினான்.

அதைக் கேட்ட மட்டிக்கு வியப்பாக இருந்தது. ''அப்படியானால் நீங்கள் சொர்க்கம் போய் இருக்கிறீர்களா?'' என்று கேட்டான். ''நேராக அங்கே இருந்துதான் வருகிறேன்!'' என்றான் புளுகன்.

''அடேயப்பா! எங்களால் சந்திரலோகமே போக முடியவில்லை. நீங்கள் எப்படிச் சொர்க்க லோகம் போய் வந்தீர்கள்?'' எனக் கேட்டான், மடையன்.

''சொர்க்கத்தில் யார் யார் இருக்கிறார்கள்?'' என்று விசாரித்தான் முட்டாள்.

''உங்கள் குருவுக்குக் குருவான சோற்று மூடை அங்கேதான் இருக்கிறார்'' என்றான் புளுகன்.

''அப்படியா? அவர் நலமாக இருக்கிறாரா?'' என்று கேட்டான் மண்டு.

''ஊகும்! பேர் தான். சோற்று மூடையே தவிர சோற்றுக்கே தாளம் போடுகிறார்! கந்தல் துணிகளைக்கட்டிக்கொண்டு, பைத்தியம் மாதிரி திரிகிறார்! பார்ப்பதற்குப் பாவமாக இருக்கிறது!'' என்றான் புளுகன்.

''பூலோகத்தில் இருந்த போது சுகமாக இருந்திருப்பார்..... அங்கே போய் இப்படிக் கஷ்டப்படுகிறாரே!..'' என்று துக்கப்பட்டான் மூடன்.

''ஐயா நீங்கள் மறுபடி சொர்க்கத்துக்குப் போவீர்களா?'' என்று மட்டி கேட்டதும், ''ஓ நாளைக்கே போனாலும் போவேன்!'' என்றான் புளுகன்.

''அப்படியானால், எங்களிடம் இருக்கிற புதுத் துணிகளை எல்லாம் தருகிறோம். கொஞ்சம் பணமும், சுருட்டும் கொடுக்கிறோம். எல்லாவற்றையும் கொண்டு போய், எங்கள் குருவுக்குக் குருவிடம் தந்து விடுங்கள்.''

புளுகனோ மகிழ்ச்சியோடு ''சரி'' என்று சம்மதித்தான். உடனே ஐந்து சீடர்களும் போட்டி போட்டுக் கொண்டு, மடத்தில் இருந்த துணிமணிகள், சுருட்டு, பணம் பூராவையும் எடுத்து வந்தனர்.

''போகும் வழியில் சாப்பிடுங்கள்'' என்று புளிச் சாதம் தந்தான் மட்டி.

எல்லாவற்றையும் மூட்டை கட்டி எடுத்துக் கொண்ட புளுகன், சொர்க்கம் போவதாகக் கூறி விட்டு, ஓட்டம் பிடித்தான்.

வெளியே சென்றிருந்த பரமார்த்தர் திரும்பி வந்தார். ''குருவே! நீங்கள் இல்லாத சமயத்தில் கூட, நாங்கள் புத்திசாலித்தனமான செயல் செய்துள்ளோம்'' என்று பெருமையோடு சொன்னான் மண்டு. உங்கள் ''குருநாதரான சோற்று மூடை சுவாமிக்கு இனி கவலையே இல்லை!'' என்றான் மூடன்.

(தொடரும்)

## பொதுஅறிவு...

01. உலகின் முதற் செயற்கைக்கோளின் பெயர் என்ன?
ஸ்புட்னிக் 1.
02. உலக இரத்ததான தினமாகக் கருதப்படும் நாள் எது?
அக்டோபர் 1.
03. மோப்ப சக்தியால் இரை தேடும் பறவை இனம் எது?
கிவி.
04. போலியோ நோய் எதனால் ஏற்படுகிறது?
வைரஸ்.
05. அகச்சிவப்பு கதிர்களை எது அதிகமாக ஈர்க்கும்?
தண்ணீர்.
06. இந்தியத் தேசிய நாள்காட்டியின்படி புத்தாண்டு எப்போது தொடங்குகிறது?
மார்ச் 21.
07. இதயத்தில் எத்தனை அறைகள் உள்ளன?
நான்கு.
08. பயணித்த தூரத்தை அறிய வாகனங்களில் பயன்படுத்தப்படும் கருவி எது?
ஓடோமீட்டர்.

அஸ்வினி




### தமிழ் வருடங்களின் 60 பெயர்களில் சில..

தமிழ் ஆண்டுகள் ஒவ்வொன்றிற்கும் ஒரு பெயர் உண்டு. இது மொத்தம் 60 ஆகும். வரிசையாக 60 ஆண்டுகளின் பெயர்களைப் பார்ப்போம்.

| | |
|---|---|
| 1. பரபவ | 6. ஆங்கீரச |
| 2. விபவ | 7. ஸ்ரீமுக |
| 3. சுக்ல | 8. பவ |
| 4. பரமோதூத | 9. யுவ |
| 5. பரசோற்பத்தி | 10. தாது |

(தொடரும்)



## அணில்

வாலைத் தூக்கி கத்திக் கத்தி
மரத்தில் பாயும் அணிலே!- பழுத்த
மரத்தில் பாயும் அணிலே!
காலைத் தூக்கிக் கோதிக் கோதிக்
கடிப்பதென்ன அணிலே?- நீயும்
கடிப்பதென்ன அணிலே!

வெள்ளரிக்காய்த் தோலைப் போல
வெள்ளைக் கோடு முதுகில்!- மூன்று
வெள்ளைக் கோடு முதுகில்!
பிள்ளை அணிலே! உனக்குத் தீட்டிப்
பறக்க விட்டார் யாரோ?- அழகு
சிறக்க விட்டார் யாரோ?

பழுக்கும் முன்னர்ச் செங்காய் கோதும்
பண்பை எங்குக் கற்றாய்? கெட்ட
பண்பை எங்குக் கற்றாய்?
இழுத்துப் பறித்துப் போடு செங்காய்
எடுத்துத் தின்பேன் அணிலே! நானும்
எடுத்துத் தின்பேன் அணிலே!

பிருந்தா

## குழந்தைகள் தொடர்பான சில தகவல்கள்...

குழந்தைகளுக்கு நீரைக் கண்டாலே குஷி தான். மழையில் நனைந்து, சேற்றை அளைந்து, குதித்து விளையாடுவது, பச்சைத் தண்ணீரைக் குடிப்பது என, நம் கண்ணில் மண்ணைத் தூவி விட்டு, ஆர்ப்பாட்டம் செய்யும் சிறுவர்கள் ஏராளம். மழைக் காலத்தில் அவர்களைப் பாதுகாக்க சில யோசனைகள் இதோ:
நீரால் பரவும் நோய்களைத் தடுப்பது எவ்வாறு?

1. தண்ணீரை குறைந்தது 20 நிமிடங்களாவது காய்ச்சிய பின் குடிக்க வேண்டும். அல்லது சுத்திகரிக்கப்பட்ட நீரைக் குடிக்க வேண்டும்.
2. உணவுப் பொருள்களைக் கையாளுவதற்கு முன்னும், சாப்படுவதற்கு முன்னரும், கழிவறை சென்று வந்த பின்னரும் கைகளை நன்றாகக் கழுவ வேண்டும்.
3. வெளியிடங்களில், பச்சைக் காய்கறிகளால் தயாரிக்கப்படும் சாலட்கள் மற்றும் வெட்டி வைத்திருக்கும் பழங்களைச் சாப்பிடுவதைத் தவிர்க்கவும்.
4. வீட்டில் சுகாதாரத்தைப் பேண வேண்டும்.
5. வீட்டிலும், பச்சைக் காய்க்றிகள் மற்றும் பழங்களைச் சாப்பிடுவதற்கு முன், அவைகள் முறையாக கழுவப்பட்டிருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடகொரியாவுக்கு பதிலடி கொடுக்க மக்களை ஒன்றுதிரளுமாறு தென்கொரியா அறைகூவல்

சியோல்,டிசெ.29

''வடகொரியாவுக்குப் பதிலடி கொடுப்பதற்கு ஒன்று திரளுங்கள்'' என்று தென்கொரிய ஜனாதிபதி லீமியுங் பாக் மக்களுக்கு அறைகூவல் விடுத்துள்ளார்.

தென்கொரிய தேசிய வானொலியில் நேற்றுப் பேசிய அவர் இதுகுறித்து கூறியவை வருமாறு:-

வடகொரியா இனிமேல் ஏதாவது ஒரு தாக்குதல் நடத்தினாலும் அதன் மீது இரக்கம் காட்டாமல் கடுமையாகத் தாக்குவோம். நமது நாட்டின் பாதுகாப்பு தற்போது ஓர் ஆபத்தான நிலையில் இருக்கிறது.

இந்த நேரத்தில் நமக்குள் வேறுபாடுகள் எழுவதை நாம் அனுமதிக்க முடியாது. நமது போர்க் கப்பல், வடகொரிய நீர்மூழ்கிக் கப்பலால் தாக்கப்பட்டு அதிலிருந்தவர்களில் 46 பேர் உயிரிழந்த சம்பவம் நம்மில் பல்வேறு கருத்து வேறுபாடுகளை உண்டாக்கியது.


அந்தக் கருத்து வேறுபாடுகள்தான் இயான்பியாங் தீவு மீது வடகொரியா தாக்குதல் நடத்த வழிகாட்டிவிட்டது. அதனால் நாம் ஒன்றுதிரண்டு நமது ஒற்றுமையைக் காட்டினால் வடகொரியா நம்மை எதிர்க்க அஞ்சும்.

நடந்த தாக்குதலுக்குச் சரியான பதிலடி கொடுக்க வேண்டும் என்பதை நாம் உணர்ந்துள்ளோம். அதுதான் போரைத் தடுக்கும் அமைதியை நிலைநிறுத்தும். வடகொரியா உடனான அமைதியான இணக்கத்தையே இப்போதும் தென்கொரியா விரும்புகிறது.

இவ்வாறு லீமியுங் பாக் தெரிவித்துள்ளார்.

சமீபத்தில்தான் தென்கொரிய பாதுகாப்பு அமைச்சர் கிம் க்வான் ஜின்னும், சீனப் பாதுகாப்பு அமைச்சர் லியாங் குவாங்லீயும் அடுத்தாண்டு பெப்ரவரி மாதம் சீனத் தலைநகர் பீஜிங்கில் சந்தித்து இந்தப் பிரச்சினை குறித்து பேசுவர் என்ற செய்தி வெளியானது.

## புதிய அத்தியாயம்....



உறுதிமொழி: ஈராக்கில் புதிதாக பதவியேற்ற எண்ணெய்வள அமைச்சர் அப்துல் கரீம் எலைபிக்கு (இடது) பக்தாத்தில் முன்னாள் எண்ணெய்வள அமைச்சர் ஹுசைன் அல்-ஷாரிஸ் தானி (வலது) பதவிப் பிரமாணம் செய்து வைக்கிறார்.

## அமெரிக்க விமானத் தாக்குதலில் 18 தீவிரவாதிகள் பலி!

பெஷாவர்,டிசெ.29

பாகிஸ்தானில் ஆப்கன் எல்லையை ஒட்டியுள்ள பழங்குடியின பகுதியான வடக்கு வசிரிஸ்தானில் தீவிரவாதிகள் பதுங்கியிருப்பதால் அங்கு அமெரிக்க இராணுவ விமானங்கள் குண்டு வீசி தாக்கி வருகின்றன.

திங்கட்கிழமை நடந்த குண்டு வீச்சில் 18 தீவிரவாதிகள் பலியாயினர். இது தவிர இரண்டு இடங்களில் பாகிஸ்தான் பாதுகாப்புப் படைக்கும் தீவிரவாதிகளுக்குமிடையே நடந்த மற்றொரு துப்பாக்கிச் சண்டையில் ஆறு தீவிரவாதிகள் பலியாயினர்.

உலக அரங்கில்

# பாப்பரசரின் கருத்துக்கு சீனா கண்டனம்

பீஜிங்,டிசெ.29

கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு பாப்பரசர் பதினாறாவது ஆசீர்வாதப்பர் விடுத்திருந்த செய்தியில் சீனா குறித்து தெரிவித்திருந்தார். இதற்கு சீனா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

''அரசியல்வாதி போல் பாப்பரசர் பேசியுள்ளார். சீன விவகாரங்களில் தலையிடுவதை அவர் நிறுத்த வேண்டும்'' என அந்நாட்டு அரசின் பத்திரிகை கூறியுள்ளது.

கடந்த 1949இல் சீனாவில் மா சே துங் தலைமையிலான கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சியைப் பிடித்த பின்னர் தாவோயிசம், பௌத்தம், இஸ்லாம், கத்தோலிக்கம், புரட்டஸ்டண்ட் கிறிஸ்தவம் ஆகிய ஐந்து மதங்கள் அரசால் அங்கீகரிக்கப்பட்டன.

சீன தலைமை கத்தோலிக்க திருச்சபைக்கும், வத்திகானுக்கும் சம்பந்தம் கிடையாது. 'தேசாபிமான திருச்சபை' என்ற பெயரில் சீன அரசின் நேரடிக் கட்டுப்பாட்டில் அது இயங்கி வருகிறது.

சீனாவில் திருச்சபை ஆயர்களை வத்திக்கான் நியமிக்க முடியாது; அரசுதான் ஆயர்களை நியமிக்கும். இதனால் சீனா - வத்திகான் உறவு முறிந்து 60 ஆண்டுகளாகி விட்டன.

இந்த நிலையில் சமீபத்தில் நடந்து முடிந்த கிறிஸ்மஸ் பண்டிகையின்போது பாப்பரசர் வெளியிட்ட சிறப்புச் செய்தியில், ''சீனக் கிறிஸ்தவர்கள் நம்பிக்கையுடன் இருக்க வேண்டும். தங்கள் மதச் சுதந்திரம் மீது மேலும் மேலும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவதால் அவர்கள் மனம் தளர்ந்துவிட வேண்டாம். கிறிஸ்து மற்றும் அவரது தேவாலயம் மீதான விசுவாசம் உங்களது நம்பிக்கைச் சுடரை அணையாது காக்கும்'' எனக் குறிப்பிட்டிருந்தார்.

இதற்கு சீன கம்யூனிஸ்ட் கட்சியின் நாளிதழான 'பீப்பில்ஸ் டெய்லி'யின் ஆங்கிலப் பதிப்பான 'குளோபல் டைம்ஸில்' தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

பாப்பரசரின் குரல் மதகுரு என்பதை விட அரசியல்வாதியின் குரலாகவே வெளிப்பட்டிருக்கிறது. சீன விவகாரங்களில் தலையிடுவதை வத்திக்கான் நிறுத்திக்கொள்ள வேண்டும். இரு தரப்பிலான உறவு சமீபகாலமாக மேம்பட்டு வந்தாலும் தாய்வானுடனான வத்திக்கானின் உறவு, ஆயர்களை நியமிப்பது குறித்த உரிமை கோரல் ஆகியவை அந்த உறவு தொடர்வதை கடினமாக்கி விடும்.

சீன ஆயர்கள் வழக்கம் போல் தங்களுக்குள் தேர்தல் நடத்தி தலைவரைத் தேர்ந்தெடுக்கின்றனர். இது பாப்பரசரை எரிச்சல்படுத்துகிறது. உலகம் மாறி வருகிறது. மத நம்பிக்கைக்குப் பின்னால் சமூக அரசியல் பின்புலங்கள் உள்ளன. உலகம் செல்லும் வேகத்தையும், பாதையையும் தடுக்கும் ஆற்றல் வத்திக்கானுக்குக் கிடையாது.

சீனாவில் அனைத்து மதங்களும் சுதந்திரமாக இயங்குகின்றன. சட்டத்தை எதிர்த்து யாரும் இங்கு செயல்பட முடியாது. மத நம்பிக்கை தனிமனித சுதந்திரம். அதேநேரம் ஒவ்வொருவரும் சட்டத்தாலும் குடிமகன் என்பதாலும் அடையாளப்படுத்தப்படுகிறார்.

விரைவிலோ அல்லது தாமதித்தோ சீனா பற்றிய தனது கொள்கையை வத்திக்கான் மாற்றிக்கொள்ள வேண்டும். இவ் வாறு அந்தப் பத்திரிகையில் கூறப்பட்டுள்ளது.

# நைஜீரியாவில் வெடிகுண்டுகளுடன் தீவிரவாதிகள் மூன்று பேர் கைது

ஜோஸ், டிசெ.29

ஆபிரிக்கா கண்டத்திலுள்ள பெரிய நாடுகளில் நைஜீரியாவும் ஒன்று. அங்கு அடிக்கடி மதக்கலவரங்கள் நடைபெற்று வருகின்றன.

இந்த நிலையில் கிறிஸ்மஸ் பண்டிகை அன்று அங்குள்ள ஜோஸ் நகரில் தீவிரவாதிகள் குண்டு வீசி தாக்குதல் நடத்தினார்கள். அதில் 31 பேர் கொல்லப்பட்டனர். 74 பேர் காயமடைந்தனர்.

இச்சம்பவத்தில் தொடர்புடைய தீவிரவாதிகளை பொலிஸார் தேடி வந்தனர். இந்த நிலையில் பிளாட்டூ மாகாணத்தில் சந்தேகப்படும் நிலையில் சுற்றித் திரிந்த 3 பேரை கைது செய்தனர்.

சோதனை நடத்தியதில் அவர்களிடம் வெடிகுண்டுகள் இருந்தன. அந்த வெடிகுண்டின் மூலம் அங்குள்ள கிறிஸ்தவ தேவாலயத்தை தகர்க்க இருந்தமை தெரியவந்தது.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் சாட் நாட்டைச் சேர்ந்தவர். மற்ற 2 பேரும் நைஜீரியாவைச் சேர்ந்தவர்கள். அவர்களிடம் தீவிர விசாரணை நடக்கிறது. இந்தத் தகவலை நைஜீரியாவின் பிளாட்டூ மாகாண ஆளுநரின் சிறப்பு ஆலோசகர் கயாங் ஷோஜி தெரிவித்துள்ளார்.

# ஈராக்கில் தற்கொலைத் தாக்குதல்கள்: 7 பேர் உயிரிழப்பு; 30 பேர் படுகாயம்!

பக்தாத், டிசெ. 29

ஈராக்கின் அன்பார் மாகாணத் தலைநகர் ரமதியில் திங்கட்கிழமை அரசு அலுவலகம் ஒன்றை குறிவைத்து அடுத்தடுத்து இரு தற்கொலைப் படைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இவற்றில் 7 பேர் உயிரிழந்தனர். 30 பேர் காயமடைந்தனர்.

அரசு அலுவலகம் செயல்படத் தொடங்கி சற்றுநேரத்தில் முதல் தற்கொலைப் படை தாக்குதல் நடத்தப்பட்டது. வெடிகுண்டு நிரப்பிய மினி பஸ்ஸை ஓட்டிவந்த தற்கொலைப் படை வீரர் அரசு அலுவலக வளாகச் சுவர் மீது மோதினார்.

இதில் பலத்த சப்தத்துடன் மினி பஸ் வெடித்துச் சிதறியது. அலுவலகச் சுவரும் இடிந்து விழுந்தது. மினி பஸ்ஸுக்குள் இருந்த வெடிகுண்டுகள் அனைத்தும் சக்திவாய்ந்தவை. இதனால் அவை வெடித்ததும் விண்ணை முட்டும் விதத்தில் சப்தம் எழுந்தது.

இதையறிந்த அக்கம் பக்கத்தினர் சம்பவ இடத்துக்கு ஓடி வந்தனர். வெடித்து சிதறிக்கிடந்த மினி பஸ்ஸையும், இடிந்து விழுந்த சுவரையும் அதிர்ச்சியுடன் பார்த்துக்கொண்டிருந்தனர்.

இந்நிலையில் கூட்டத்தை நோக்கி விரைந்து வந்த மற்றொரு தற்கொலைப் படை வீரர் வெடித்துச் சிதறினார். இதில் சம்பவ இடத்திலேயே 7 பேர் உயிரிழந்தனர். 30 பேர் காயமடைந்தனர்.

இதை அங்கு கூடியிருந்த பொதுமக்கள் சற்றும் எதிர்பார்க்கவில்லை. அக்கம் பக்கத்தில் இருந்தவர்களும், பாதுகாப்புப் படை வீரர்களும் விரைந்து வந்து காயமடைந்தவர்களை மீட்டு வைத்தியசாலைகளில் சேர்த்தனர்.

காயமடைந்தவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. இதனால் சாவு எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என்று அஞ்சப்படுகிறது.

இந்தத் தாக்குதலுக்கு எந்த ஒரு தீவிரவாத அமைப்பும் உடனடியாகப் பொறுப்பேற்கவில்லை. ஆனால் அல்-குவைதாவினர்தான் இந்தத் தாக்குதலை நடத்தியிருப்பர் என்று அந்நாட்டு பாதுகாப்புப் படையினர் தெரிவிக்கின்றனர்.

## நினைவில் நிறைந்த...



பிரார்த்தனை: பாகிஸ்தானில் ஜனாதிபதி அஷிப் அலி சர்தாரி (வலமிருந்து இரண்டாவது) பெனாஸிர் பூட்டோவின் நினைவுநாளை முன்னிட்டு பிரார்த்தனை செய்கிறார்.

# கடத்தலில் ஈடுபட்ட பிரி. விமான ஊழியர் சமூக சேவையாற்ற நீதிமன்றம் உத்தரவு

பிரிட்டிஷ் ஏர்வேஸ் விமான ஊழியர் 75 ஆயிரம் சிகரெட்டுகளையும், 12 கிலோ புகையிலையையும் கடத்தியமைக்காக சமூக சேவை செய்யும்படி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பிரிட்டனைச் சேர்ந்தவர் கிறிஸ்டேகிஸ் லேம்ப்ரூ. பிரிட்டிஷ் ஏர்வேஸ் விமான நிறுவனத்தில் விமானியாகப் பணி புரியும் [illegible] தற்காகக் காத்திருந்த போது எல்லைப் பாதுகாப்பு அதிகாரிகள் இவரைச் சோதனையிட்டனர்.

இவருடைய சூட்கேஸில் 2 ஆயிரம் பென்சன் ஹெட்ஜஸ் சில்வர் சிகரெட்டுகள் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. இவரது காரை சோதனையிட்டபோது 6 கிலோ புகையிலையும், மேலும் 2 ஆயிரம் சிகரெட்டுகளும் இருந்தமை கண்டு பிடிக்கப்பட்டது.

உடனடியாக கிறிஸ்டேகிஸ் கைதுசெய்யப்பட்டார். இவரது வீட்டை சோதனையிட்டதில் 11 ஆயிரத்து 760 சிகரெட்டுகளும் 5 கிலோ புகையிலையும் கண்டுபிடிக்கப்பட்டது. 8 இலட்ச ரூபா மதிப்புள்ள 75 ஆயிரம் சிகரெட் மற்றும் 12 கிலோ புகையிலையை வரியில்லாமல் கடத்தி வந்ததை கிறிஸ்டேகிஸ் ஒப்புக்கொண்டார்.

இதையடுத்து 120 மணி நேரம் சமூக சேவையாற்றும்படி நீதிமன்றம் இவருக்கு தண்டனை வழங்கியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 2 ஜி விவகாரம் சூடு பிடித்துள்ள நிலையில் ஜன. 2 இல் சென்னை வருகிறார் பிரதமர்

## பாதுகாப்பு ஏற்பாடு குறித்து அதிகாரிகள் ஆலோசனை



சென்னை, டிசெ. 29 பிரதமர் மன்மோகன். சிங் ஜனவரி 2 ஆம் திகதி இரவுசென்னை வருகிறார். ஜனவரி 3 ஆம் திகதி நடைபெறும் இரண்டு நிகழ்ச்சிகளில் அவர் பங்கேற்று அன்றைய தினம் பிற்பகலிலேயே டில்லி திரும்புகிறார்.

டில்லியிலிருந்து ஜனவரி 2 ஆம் திகதி இரவு சென்னை வரும் அவர், ஆளுநர் மாளிகையில் தங்குகிறார். இதன் பின், ஜனவரி 3 ஆம் திகதி சென்னை அருகேயுள்ள எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழக நிகழ்ச்சியில் பங்கேற்கிறார்.

இதற்காக, ஆளுநர் மாளிகையில் இருந்து சென்னை விமான நிலையம் செல்லும் அவர் அங்கிருந்து தனி ஹெலிகொப்டர் மூலம் பல்கலைக்கழகம் செல்கிறார். இதற்காக, பல்கலைக்கழக மைதானம் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது என அதிகாரிகள் தெரிவித்தனர்.

எஸ்.ஆர்.எம்.பல்கலைக்கழக நிகழ்ச்சி மு.ப. 10 மணிக்கு நடைபெறுகிறது. அந்த நிகழ்ச்சியை முடித்துக் கொண்டு தமிழக அரசின் சார்பில் சென்னை அடையாறில் அமைக்கப்பட்டுள்ள பூங்காவைத் திறந்து வைக்கிறார்.

இந்த நிகழ்ச்சியில் பங்கேற்று விட்டு நேரடியாக விமான நிலையம் செல்லும் பிரதமர் மன்மோகன் சிங் அங்கிருந்து டில்லிக்கு பயணமாகிறார்.

பிரதமர் மன்மோகன் சிங்குக்கு தீவிரவாத அச்சுறுத்தல் இருப்பதால் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது என உள்துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சென்னைக்கு மிக அருகிலுள்ள பல்கலைக்கழகத்துக்குச் செல்வதற்கு வீதி வழியாகச் செல்லும் வாய்ப்பிருந்தாலும் பாதுகாப்புக் காரணங்கள் கருதி ஹெலிகொப்டர் மூலம் செல்கிறார்.

மேலும், பிரதமரின் வருகையை ஒட்டி செய்யப்பட வேண்டிய பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து ஆய்வு செய்ய தேசிய பாதுகாப்புப் படையினர் (என்.எஸ்.ஜி.) சென்னை வருகின்றனர்.

பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பாக ஆய்வு செய்யும் அவர்கள், தமிழகப் பொலிஸ் துறையைச் சேர்ந்த உயரதிகாரிகளுடனும் ஆலோசனை நடத்துவார்கள் எனத் தெரிகிறது.


இந்தியா முழுவதும் 2ஜி அலைக்கற்றை விவகாரம் சூடு பிடித்துள்ள நிலையில், பிரதமர் தமிழகம் வருகிறார். அடையாறு பூங்கா திறப்பு விழா, தமிழக அரசின் நிகழ்ச்சி என்பதால் அதில் முதல்வர் கருணாநிதி, துணை முதல்வர் மு.க.ஸ்டாலின் உள்ளிட்டோருடன் பிரதமர் மன்மோகன் சிங்கும் கலந்து கொள்கிறார்.

2 ஜி அலைக்கற்றை விவகாரம் விஸ்வரூபம் எடுத்ததற்குப் பின்னர் தி.மு.க. தலைமையைப் பிரதமர் சந்திப்பது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.

பிரதமர் மன்மோகன் சிங் சென்னை வரும்போது அவர் பங்கேற்கும் நிகழ்ச்சிகளில் பத்திரிகையாளர்கள் உட்பட யாரும் அவரை நெருங்க முடியாது.

பிரதமரை எவரும் எளிதில் அணுக முடியாதபடி அவருக்கு கூடுதல் பாதுகாப்புக்களை அளிக்கும்படி டில்லியில் இருந்து தமிழக உள்துறைக்கு தனி சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது என தலைமைச் செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதனால், 2ஜி உள்ளிட்ட விவகாரங்கள் தொடர்பாக பிரதமரிடம் வினாக்களை எழுப்ப முடியுமா என்ற கேள்வி பத்திரிகையாளர்கள் மத்தியில் எழுந்துள்ளது.



பீஹார் முதல்வர் நிதிஷ்குமாருக்கு இந்தாண்டுக்கான சிறந்த இந்தியன் விருது வழங்கப்பட்டது. இதை, பாட்னாவில் நடந்த நிகழ்ச்சியில் துணை முதல்வர் சுசில் குமார் மோடி வழங்கினார்.

# வட இந்தியாவில் கடும் பனி ரயில் போக்குவரத்துப் பாதிப்பு

இந்தியச் செய்திகள்

டில்லி, டிசெ.29 வட இந்தியாவில் நேற்று கடும் பனிமூட்டம் காணப்பட்டது. இதன் காரணமாக 5 ரயில்களின் காலஅட்டவணை மாற்றி அமைக்கப்பட்டது. 55 ரயில்கள் தாமதமாக இயக்கப்பட்டன.

போபால் சதாப்தி, அமிர்த சரஸ் சதாப்தி, சீமாஞ்சல் எக்ஸ்பிரஸ் மற்றும் தாஜ் எக்ஸ்பிரஸ் உள்ளிட்ட 5 ரயில்களின் அட்டவணை மாற்றியமைக்கப்பட்டது.

ராஜஸ்தானில் குஜ்ஜர்களின் போராட்டம் காரணமாகவும் சில ரயில்கள் இரத்துச் செய்யப்பட்டன. கோட்டா ஜனசதாப்தி மற்றும் அஜ்மீர் சதாப்தி உள்ளிட்டவை இரத்துச் செய்யப்பட்டன. டேராடூன் நந்தா எக்ஸ்பிரஸ் மற்றும் மும்பை ஜனதா எக்ஸ்பிரஸ் ஆகியவை அடுத்த 7 நாள்களுக்கு இயக்கப்படாது என ரயில்வே அதிகாரிகள் தெரிவித்தனர்.



காங்கிரஸ் கட்சியின் 125 ஆவது ஆண்டு விழாவை யொட்டி, மேற்கு மாநிலம் முர்சிதாபாத் மாவட்டம் பெர்காம்பூரில் சைக்கிள் பேரணியை மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி சைக்கிளைச் செலுத்தித் தொடக்கி வைத்தார்.

# இராமேஸ்வரம் மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படை தாக்குதல்

இராமேஸ்வரம், டிசெ. 29 இராமேஸ்வரம் அருகே தமிழக மீனவர்களை தாக்கிய இலங்கைக் கடற்படையினர், மீன்பிடி வலைகளையும் சேதப்படுத்தினர் எனத் தமிழக நாளிதழ்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இராமேஸ்வரத்தில் இருந்து 600 படகுகளில் சென்ற தமிழக மீனவர்கள் கச்சதீவு அருகே கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்தனர். அப்போது அங்கு வந்த இலங்கைக் கடற்படையினர் இராமேஸ்வரம் மீனவர்களைத் தாக்கியுள்ளனர். மேலும் மீன்பிடிவலைகளையும் சேதப்படுத்தியுள்ளனர்.

இந்தியக் கடலோர எல்லையில் மீன் பிடித்துக்கொண்டிருந்த இராமேஸ்வரம் மற்றும் காரைக்கால் பகுதி மீனவர்களை விரட்டி அடித்த இலங்கைக் கடற்படையினர், விலை மதிப்புமிக்க மீன்களையும் பறித்துச் சென்றனர்.

கடந்த வாரம் இராமேஸ்வரத்தில் இருந்து நூற்றுக்கும் மேற்பட்ட படகுகளில் சென்ற மீனவர்கள் கச்சதீவு அருகே இந்தியக் கடல் எல்லையில் மீன் பிடித்துக்கொண்டிருந்தனர். அப்போது அவர்களைச் சுற்றி வளைத்த இலங்கைக் கடற்படையினர், படகுகளில் ஏறி மீன்களை அள்ளிச் சென்றனர். மேலும் அப்பகுதியில் மீன்பிடிக்கக் கூடாது என விரட்டியடித்தனர்.

இதேபோல் கடந்த வாரம் காரைக்கால் பகுதி மீனவர்களின் படகுகளைச் சேதப்படுத்திய இலங்கைக் கடற்படையினர், வழிகாட்டும் கருவிகளையும், மீன்களையும் பறித்துச் சென்றனர். ஒரே வாரத்தில் அடுத்தடுத்து மூன்று தடவைகள் தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் தாக்கியுள்ள சம்பவத்தால், இராமேஸ்வரம் மீனவர்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

# புத்தாண்டை ஒட்டி தீவிரவாதிகள் தாக்க திட்டம்; கர்நாடகா முழுவதும் உச்சக்கட்டப் பாதுகாப்பு

## துணை இராணுவப்படை பெங்களூர் விரைந்தது

புத்தாண்டையொட்டி கர்நாடகத்துக்கு தீவிரவாதிகள் அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதால் துணை இராணுவப்படை பெங்களூர் விரைந்தது. முதல்வர் எடியூரப்பா நேற்றுமுன்தினம் உயர் அதிகாரிகளுடன்அவசர ஆலோசனை நடத்தி, பாதுகாப்பை பலப்படுத்தும்படி உத்தரவிட்டார்.

புத்தாண்டையொட்டி கர்நாடகத்தில் வழிபாட்டுத் தலங்கள் மற்றும் மக்கள் நெருக்கடி மிகுந்த இடங்களில் தீவிரவாதிகள் நாச வேலையில் ஈடுபடலாம் என்ற அச்சுறுத்தல் ஏற்பட்டு உள்ளது. இது தொடர்பாக மத்திய உளவுத்துறை கர்நாடக அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது. கர்நாடகத்தில் முக்கிய இடங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. அவசர பணிக்காக மத்திய அரசு 550 இராணுவத்தினரைக் கொண்ட துணை இராணுவப் படையை பெங்களூருக்கு அனுப்பி வைத்துள்ளது. தீவிரவாதிகள் அச்சுறுத்தல் காரணமாக பொது மக்கள் பயப்பட வேண்டிய அவசியம் இல்லை. புத்தாண்டை மகிழ்ச்சியாக கொண்டாடலாம். அரசு அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுத்து உள்ளது- என்றார்.

பெங்களூர், மைசூர், மங்களூர், உடுப்பி, பெல்காம் போன்ற முக்கிய நகரங்கள் மீது தீவிரவாதிகள் அச்சுறுத்தல் உள்ளது எனவும், வழிபாட்டுத் தலங்கள், அணைக்கட்டுகள், அடுக்குமாடி வணிக வளாகங்கள் ஆகிய இடங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருக்கிறது எனவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

புத்தாண்டையொட்டி தீவிரவாதிகள் அச்சுறுத்தல் இருப்பதால் மும்பை, கொல்கத்தா உட்பட பல்வேறு முக்கிய நகரங்கள் மற்றும் அனைத்து மாநிலங்களும் உஷார் நிலையில் இருக்கும்படி மத்திய அரசு எச்சரித்துள்ளது.

# 2ஜி விசாரணை தொடர்பில் பிரதமரின் கடிதம் குறித்து உரிய நேரத்தில் முடிவு

## பொதுக் கணக்குக் குழுத் தலைவர் தெரிவிப்பு

டில்லி, டிசெ. 29 2 ஜி ஊழல் விவகாரம் தொடர்பில் பொதுக் கணக்குக் குழு முன்பு ஆஜராகி விளக்கம் அளிக்கத் தயார் என்று பிரதமர் மன்மோகன் சிங் எழுதிய கடிதம் குறித்து உரிய நேரத்தில் உரிய முடிவு எடுக்கப்படும் - என்று பொதுக் கணக்குக் குழுத் தலைவர் முரளி மனோகர் ஜோஷி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் ஜோஷிக் கூறியவை வருமாறு -

பிரதமரின் கடிதம் கிடைத்தது. அதில் பொதுக் கணக்குக் குழு முன்பு ஆஜராகும் விருப்பத்தை அவர் மீண்டும் தெரிவித்துள்ளார். அதே நேரத்தில் 2ஜி அலைக்கற்றை ஒதுக்கீடு தொடர்பாக பொதுக் கணக்குக் குழுவுக்கு என்னென்ன விவரங்கள் தேவைப்பட்டதோ அந்த விவரங்களின் நகல்கள் ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளன என்பதையும் பிரதமர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். இந்த ஆவணங்களை ஆய்வு செய்த பின்னரே பிரதமரின் கடிதம் குறித்து முடிவு செய்ய முடியும்.

விதிகளையும் நடைமுறைகளையும் ஆய்வு செய்து அனைவரிடமும் கலந்தாலோசித்து அதன்படி உரிய நேரத்தில் உரிய முடிவு எடுக்கப்படும்.

- இப்படி அவர் தெரிவித்தார்.

அமைச்சரை விசாரணைக்கு அழைக்க விதிகளில் இடம் இல்லையே என்று கேட்டபோது, உண்மைதான். ஆனால் பிரதமர் தாமாக முன்வந்து விருப்பம் தெரிவித்திருப்பதால் அவரை அழைப்பதாகக் கருத முடியாது என்று ஜோஷி தெரிவித்தார். நாடாளுமன்ற பொதுக் கணக்குக் குழுவில் 22 பேர் உள்ளனர். இதில் 10 பேர் ஆளும் கூட்டணியைச் சேர்ந்தவர்கள். மற்றவர்கள் எதிர்க்கட்சியினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களைகட்டும் டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகள்

International Cricket Council

சச்சினின் 50 ஆவது சதம், இந்திய-தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான டெஸ்ட், ஆஷஸ் டெஸ்ட் தொடர் போன்றவற்றால் டெஸ்ட் கிரிக்கெட் உச்சத்தை அடைந்துள்ளதாக சர்வதேச கிரிக்கெட் சபையின் (ஐ.சி.சி.) தலைமைச் செயல் அதிகாரி ஹாரூன் லோர்கட் தெரிவித்துள்ளார்.

டெஸ்ட் கிரிக்கெட் மீதான ஆர்வம் ரசிகர்களிடையே அதிகரித்துள்ளதாகக் கூறிய அவர் உலகம் முழுவதுமுள்ள ரசிகர்களின் மனதில் இந்த இரு தொடர்களும் இடம்பிடித்துள்ளதாகக் அவர் கூறினார்.

உலகம் முழுவதிலுமுள்ள ஒவ்வொருவரும் டெஸ்ட் கிரிக்கெட்டைப் பற்றித்தான் பேசிக் கொண்டிருக்கிறார்கள். இங்கிலாந்து - ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான மெல்போர்ன் டெஸ்ட் போட்டிக்கு நுழைவுச்சீட்டு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இந்தப் போட்டி வெகுவாக ரசிகர்களைக் கவர்ந்துள்ளது.

அடிலெய்ட் டெஸ்ட் போட்டியைப் பார்த்து ரசித்ததை என் அதிர்ஷ்டமாகக் கருதுகிறேன். 1932-33 ஆம் ஆண்டுக்குப் பிறகு அடிலெய்ட் டெஸ்ட் போட்டிக்குத்தான் பெருமளவு ரசிகர்கள் வந்திருந்தனர். மெல்போர்ன் டெஸ்ட் போட்டிக்கு 90,000 ரசிகர்கள் வருவார்கள் என்று ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்திய-தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான அடுத்த இரு டெஸ்ட் போட்டிகளின் நுழைவுச்சீட்டுகள் விற்பனை அதிகரித்துள்ளது மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது. இதன் மூலம் டெஸ்ட் போட்டிக்கு நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது.

4 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் வகையில் டெஸ்ட் சம்பியன்ஷிப் போட்டி விரைவில் அறிமுகப்படுத்தப்படவுள்ள நிலையில் இப்போது டெஸ்ட் போட்டி மீதான ஆர்வம் ரசிகர்களிடையே அதிகரித்திருப்பது மிகுந்த மிகழ்ச்சியளிக்கிறது.

50 ஆவது சதம் அடித்ததன் மூலம் டெஸ்ட் வரலாற்றில் புதிய மைல்கல்லை எட்டியுள்ள சச்சினுக்கு வாழ்த்துக்களையும் பாராட்டுகளையும் தெரிவித்த லோர்கட் இந்த ஆண்டு டெஸ்ட் போட்டியில் இலங்கை வீரர் முத்தையா முரளிதரன் (800 விக்கெட்), மேற்கிந்திய தீவுகள் வீரர் கிறிஸ் கெயில் (முச்சதம்), தென்னாபிரிக்க வீரர் ஜக்கலிஸ் (முதல் இரட்டைச் சதம்) ஆகியோர் தனிப்பட்ட சாதனை படைத்திருப்பதையும் சுட்டிக்காட்டினார்.

டெஸ்ட் கிரிக்கெட்டில் ஒரு வீரரின் உண்மையான திறமையை பரிசோதிக்க முடியும். டெஸ்ட் கிரிக்கெட் எப்போதும் சர்வதேச போட்டிகளில் முன்னணியில் இருக்குமென்றார் லோர்கட். (23)

# ரிக்கி பொண்டிங்குக்கு அபராதம்



ஆஸ்திரேலிய அணித் தலைவர் ரிக்கி பொண்டிங் போட்டி ஊதியத்தில் 40 சதவீதம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலிய வீரர் ரியான் பீற்றர் சனுக்குப் பந்து வீசினார். அப்போது பந்து பீற்றர்சனின் துடுப்புபில் பட்ட தாகக் கூறி விக்கெட் காப்பாளர் பிராட் ஹாடின் ஆட்டமிழப்பு கோரினார். இதையடுத்து நடுவர் அலீம்தார், மற்றொருகள நடுவர் டோனி ஹில்லிடம் இதுகுறித்து கேட்டார். அதன்பிறகு பந்து துடுப்புபில் படவில்லை என்று அவர் அறிவித்தார்.

இதனால் ஆத்திரமடைந்த ரிக்கி பொண்டிங், நடுவரிடம் நீண்ட நேரம் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். பொண்டிங்கின் ஒழுங்கீனமான நடவடிக்கையால் அதிருப்திக்குள்ளான போட்டி நடுவர் ரஞ்சன் மடுகல்ல, பொண்டிங் ஒழுங்கீன நடவடிக்கையில் ஈடுபட்டதோடு, நடுவரிடம் நீண்ட வாக்குவாதத்தில் ஈடுபட்டதாகக் கூறி அவருக்கு 2 லட்சத்து 44 ஆயிரத்தை அபராதமாக விதித்து உத்தரவிட்டார். பொண்டிங்கின் செயல் ஏற்க முடியாதது என்றும் போட்டி நடுவர் மடுகல்ல தெரிவித்துள்ளார்.

## வல்லவர்கள்...



தொடரும் வெற்றி: யாழ்ப்பாணம் சென்றல் விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்டம் நடத்திய சிறந்த கிரிக்கெட் அணித் தரப்படுத்தலில் இரண்டாம் இடத்தைப் பெற்ற ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணி. (த-23)

# அவுஸ்திரேலியாவின் மோசமான சாதனை

ஆஷஸ் டெஸ்ட் தொடரின் 4 ஆவது டெஸ்ட் போட்டியில் ஆஸ்திரேலிய அணி முதல் இனிங்ஸில் 98 ஓட்டங்களுக்குள் சுருண்டது. இது ஆஸ்திரேலிய அணியின் வரலாற்றில் சில மோசமான சாதனைகளுக்கு வழிவகுத்துள்ளது.

மெல்போர்ன் கிரிக்கெட் மைதானத்தில் ஆஸ்திரேலிய அணி எடுத்த (98 ஓட்டம்) 2 ஆவது குறைந்தபட்ச ஓட்டம் இதுவாகும். இதற்கு முன்பு 1981 ஆம் ஆண்டு இந்தியாவுக்கு எதிராக 83 ஓட்டங்களுக்கு சுருண்டது. 1984 ஆம் ஆண்டுக்குப் பிறகு சொந்த மண்ணில் ஆஸ்திரேலிய அணி எடுத்த குறைந்தபட்ச ஓட்டமும் இதுவாகும். 1968 இற்குப் பிறகு இங்கிலாந்துக்கு எதிராக எடுத்த குறைந்தபட்ச ஓட்டம் இதுதான். 1990 ஆம் ஆண்டுக்குப் பிறகு ஆஸ்திரேலிய அணி உள்ளூரில் 120 ஓட்டங்களுக்கும் குறைவான ஓட்டத்தில் ஆட்டமிழந்தது 4 ஆவது முறையாகும்.

இந்த மைதானத்தில் முதல் இனிங்ஸில் எடுக்கப்பட்ட குறைந்தபட்ச ஓட்டம் இது (98) தான்.

முதல் இனிங்ஸில் அவுஸ்திரேலிய வீரர்கள் அனைவரும் பிடி கொடுத்து ஆட்டமிழந்தனர். இதேபோல் டெஸ்டில் எல்லா துடுப்பாட்ட வீரர்களும் பிடிகொடுத்து ஆட்டமிழப்பு 48 முறையாகும். விக்கெட் காப்பாளர் மேட் பிரையன் 6 கச் பிடித்தார். அவர் ஒரு கேட்ச்சில் சாதனையை சமன் செய்யத் தவறினார்.

இங்கிலாந்து அணித் தலைவர் ஸ்டிராஸ் கடந்த ஞாயிற்றுக்கிழமை 6000 ஓட்டங்களை கடந்தார். இதன் மூலம் அவர் டெஸ்டில் 6 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்த 52 ஆவது வீரர் என்ற பெருமையை வென்றார். ஸ்டிராஸ், குக் இணைந்து தொடக்க விக்கெட்டுக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை 10 ஆவது முறையாக 100 ஓட்டத் தைக் கடந்தனர். இதன் மூலம் தொடக்க விக்கெட்டுக்கு அதிக 100 ஓட்டத்தைக் கடந்த இணைகள் பட்டியலில் 4 ஆவது இடத்தைப் பெற்றனர். (23)




## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,டிசெ.29

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கம், அங்கத்துவ கழகங்களுக்கு இடையில் நடத்தி வரும் 2010 ஆம் ஆண்டுக்கான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று புதன்கிழமை யாழ். மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத்திடலில் இடம் பெறவுள்ள பெண்களுக்கான ஆட்டங்களில் பங்கு கொள்ளவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:-

மாலை 3 மணிக்கு

* பட்டபிளை விளையாட்டுக்கழக அணி எதிர் பமிலியன்ஸ் விளையாட்டுக் கழக அணி.

மாலை 4மணி

கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக் கழக அணி எதிர் யாழ் இந்துமகளிர் விளையாட்டுக் கழகம். (த-23)

# இராமநாதன் கல்லூரிக்கு கூடைப்பந்தாட்ட மைதானம்

யாழ்ப்பாணம்,டிசெ.29

சுன்னாகம் இராமநாதன் மகளிர் கல்லூரிக்கான புதிய கூடைப் பந்தாட்ட மைதானம் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு கைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா திறந்து வைத்தார்.

இராமநாதன் மகளிர் கல்லூரிக்கெனப் புதிதாக் கூடைப்பந்தாட்ட மைதானம் அமைக்கப்பட்டு அந்த மைதானம் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக் கலந்து கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவையும் ஏனைய அதிதிகளையும் கல்லூரி அதிபர் உள்ளிட்ட சமூகத்தினர் வரவேற்றனர்.

தொடர்ந்து புதிய மைதானத்தை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நாடாவை வெட்டித் திறந்துவைத்தார்.

இராமநாதன் கல்லூரி மற்றும் கொக்குவில் இந்துக்கல்லூரி வீராங்கனைகள் விருத்தினர்களுக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டதையடுத்து இடம்பெற்ற சிநேகபூர்வ போட்டியில் இராநாதன் கல்லூரி 25 புள்ளிகளையும் கொக்குவில் இந்துக்கல்லூரி 19 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டன. (த)

## எதுவும் தடையல்ல...



எமது வெற்றி: யாழ். மாவட்ட பாடசாலைகள் ஹொக்கிச் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ். மாவட்டப் பாடசாலைகளின் 15 வயதுப் பிரிவுப் பெண்களுக்கு இடையே நடைபெற்ற ஹொக்கிப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட உடுவில் மகளிர் கல்லூரி வீராங்கனைகள் (த-86)

# கூடைப்பந்தாட்டப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், டிசெ. 29

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கம் அங்கத்துவ கழகங்களுக்கு இடையில் நடத்தி வரும் 2010 ஆம் ஆண்டுக்கான கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் கடந்த ஞாயிறு, திங்கள் கிழமைகளில் யாழ். மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டதிடலில் இடம் பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு:-

ஞாயிறுக்கிழமை காலை இடம் பெற்ற ஆடத்தில் ஜொலிஸ்ரார் 'பி' அணியை எதிர்த்து கோப்பாய் விளையாட்டுக் கழக அணிமோதியது.

இதில் கோப்பாய் விளையாட்டுக்கழக அணி தன்னை எதிர்த்து விளையாடிய ஜொலிஸ்ரார் 'பி' அணியை 84:64 என்ற புள்ளிக் கணக்கில் வென்றது.

மாலை இடம்பெற்ற பெண்களுக்கான போட்டியில் கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பமிலியன்ஸ் விளையாட்டுக்கழக அணிமோதியது.

இதில் பமிலியன்ஸ் விளையாட்டுக் கழக அணி தன்னை எதிர்த்து விளையாடிய கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக் கழக அணியை 38:31 என்ற புள்ளி அடிப்படையில் வென்றது.

இதனைத் தொடர்ந்து இடம் பெற்ற ஆண்களுக்கான ஆட்டத்தில் சென்றலைட்ஸ் 'பி' அணியை எதிர்த்து கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக் கழக அணி மோதியது.

இதில் சென்றலைட்ஸ் 'பி' விளையாட்டுக் கழக அணி தன்னை எதிர்த்து விளையாடிய கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக் கழக அணியை 76:75 என்ற புள்ளி அடிப்படையில் வென்றது.

திங்கட்கிழமை காலை இடம் பெற்ற ஆண்களுக்கான ஆட்டத்தில் பற்றிசியன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் 'பி' அணி மோதியது. ஆட்ட முடிவில் இரு அணிகளும் 57:57 என்ற புள்ளிகளை பெற்றதினால் ஆட்டம் சம நிலையில் முடிவடைத்தது. வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக மேலதிகமாக 5 நிமிடங்கள் வழங்கப்பட்டன. இதில் பற்றிசியன்ஸ் விளையாட்டுக் கழகஅணி தன்னைஎதிர்த்துவிளையாடிய சென்றலைட்ஸ் 'பி' அணியை 73:69 என்ற புள்ளி அடிப்படையில்வென்றது. (த-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நியூஸிலாந்துக்கு எதிரான 'இருபது-20' தொடர்

# 2ஆவது போட்டியிலும் தோல்வி; தொடரை கோட்டைவிட்டது பாக்.!

நியூஸிலாந்து - பாகிஸ்தான்

பாகிஸ்தானுக்கு எதிரான மூன்று போட்டிகளைக் கொண்ட 'இருபது-20' கிரிக்கெட் போட்டியின் இரண்டாவது போட்டியிலும் தோற்றதன் மூலம் பாகிஸ்தான் அணி, தொடரையும் பறிகொடுத்துள்ளது.

நியூஸிலாந்து - பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் 3 போட்டிகளைக் கொண்ட 'இருபது-20' கிரிக்கெட் தொடர் நடைபெற்றுவருகிறது.

இத்தொடரில் முன்னர் முடிந்த முதலாவது போட்டியில் நியூஸிலாந்து அணி வெற்றிபெற்றிருந்தது.

இந்நிலையில், இரண்டாவது போட்டி நேற்று நடைபெற்றது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணிக்கு ஆரம்பம் அதிர்ச்சியாக அமைந்தது. ஆரம்ப வீரரான ரெய்டர் ஓட்டமெதுவும் பெறாமல் ஆட்டமிழந்தார். எனினும், பின்னர் வந்த பிராங்ளின், மறுமுனையில் நின்ற குப்திலுடன் இணைந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

அதிரடியா ஆடிய குப்தில் 28 பந்துகளில் 3 சிக்ஸர்கள், 3 பெண்டரிகள் உட்பட 44 ஓட்டங்களைச் சேர்த்த நிலையில் ஆட்டமிழந்து சென்றார். அவரைத் தொடர்ந்து பிராங்ளின் 40 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார்.

பின்னர் வந்த, ஸ்ரைரிஸ் (34), பிரண்டன் மக்கலம் (26), நதன் மக்கலம் (1) ஆகியோர் தம்மாலான ஓட்டங்களைச் சேர்தது ஆட்டமிழந்தனர். மில்ஸ் ஓட்டம் எதுவும் பெறாம் ஆட்டமிழந்தார்.

இறுதியில் நிர்ணயிக் கப்பட்ட 20 ஓவர்கள் நிறை வில் நியூஸிலாந்து அணி, 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 185 ஓட்டங்களைச் சேர்த்தது.

ரெய்லர் 30 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது களத்தில் இருந்தார்.

பாகிஸ்தான் அணி சார்பாக பந்துவீச்சில், சயீத் அஜ்மல் 3 விக்கெட்டுகளையும், அப்துல் ரஸாக், சொய்ப் அக்தர், ரியாஸ், அப்ரிடி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

பின்னர், 186 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கித் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி, அப்ரிடியை விரைவாகவே இழந்தது. அவர் 7 ஓட்டங்களைச் சேர்த்த நிலையில் ஆட்டமிழந்தார்.

அவரைத் தொடர்ந்து அஹமட் (15), மொஹமட் ஹபீஸ் (46), யூனுஸ்கான் (3), அஸாட் ஷபீக் (6), அப்துல் ரஸாக் (14), உமர் குல் (0), உமர் அக்மல் (26) ரியாஸ் (18) ஆகியோர் சீரான இடைவெளியில் ஆட்டமிழந்து சென்றனர்.

இறுதியில் பாகிஸ்தான் அணி 20 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்டுகள்



இழப் புக்கு 146 ஓட்டங் களை மட்டுமே சேர்த்தது.

இதன டிப்படை யில், 39 ஓட்டங் களால் தோல் வியடைந்தது.

நியூஸிலாந்து அணி சார்பாக பந்துவீச்சில், நதன் மக்கலம் 4 விக்கெட்டுகளை யும், சௌத்தீ 2 விக்கெட்டு களையும், மில்ஸ், புற்லெர் ஆகியோர் தலா ஒரு விக் கெட்டையும் கைப்பற்றினர்.

இந்தப் போட்டியிலும் தோற்றதன் மூலம், பாகிஸ்தான் அணி 3 போட்டிகளைக் கொண்ட 'ருவென்ரி-20' தொடரை, 2-0 என்ற கணக்கில் கோட்டைவிட்டது. கடைசிப் போட்டி நாளை நடைபெறவுள்ளது.

## மோடிக்கு நேரில் ஆஜராக சென்னை நீதிமன்றம் நோட்டீஸ்

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை செயலர் ஸ்ரீனிவாசன் அளித்த நிதி முறைகேடு தொடர்பான வழக்கில், விசாரணைக்காக நேரில் வருமாறு முன்னாள் ஐ.பி.எல். தலைவரான லலித்மோடிக்கு சென்னை பொலிஸார் நோட்டீஸ் அனுப்பியுள்ளனர்.

ஊடக உரிமை மற்றும் இலவச வர்த்தக உரிமை ஆகியவற்றை ஒதுக்கீடு செய்ததில் நிதி முறைகேடுகள் நடைபெற்றிருப்பதாகக் குறிப்பட்டு சென்னை பொலிஸில் சில மாதங்களுக்கு முன்னர் ஸ்ரீனிவாசன் முறைப்பாடு கொடுத்திருந்தார்.

இந்த முறைப்பாட்டில் மோடியுடன் மேலும் 6 பேர் மீதும் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது. விசார ணைக்காக ஆஜராகும்படி அனைவருக்கும் சென்னை பொலிஸார் நோட்டிஸ் அனுப்பியுள்ளனர்.

## பேர்த் மோதலில் வாங்கிய அடிக்கு மெல்பேர்ண் களத்தில் வைத்து பதிலடி

### ஆஸ்திரேலியாவை திணறடிக்கிறது இங்கிலாந்து

மெல்பேர்ண், டிச. 29

ஆஸ்திரேலியாவிடம் பேர்த் களத்தில் முறையாக வாங்கிக் கட்டிய இங்கிலாந்து அணி, மெல்பேர்ண் களத்தில் வைத்து பதிலடிகொடுக்கும் வகையில் அகோரத் தாக்கு தலைத் தொடுத்துள்ளது.

இங்கிலாந்து - ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான 5 போட்டிகளைக் கொண்ட ஆஷஸ் டெஸ்ட் தொடர் ஆஸ்திரேலியாவில் நடைபெற்றுவருகிறது.

முன்னர் நடந்து முடிந்த 3 போட்டிகளின் அடிப்படையில் 1-1 என்ற கணக்கில் தொடர் சமனிலையில் உள்ளது.

இந்நிலையில், தொடரில் முன்னிலை வகிப்பது யார் என்பதைத் தீர்மானிக்கும் போட்டியாக நான்காவது மோதல் கடந்த ஞாயிறன்று ஆரம்பமாகியது.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி, 42.5 ஓவர்களில் 98 ஓட்டங்களுக்குள் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து தனது இன்னிங்ஸை சுருட்டிக்கொண்டது.

பின்னர் தனது இன்னிங்ஸைத் தொடங்கிய இங்கிலாந்து அணி, நேற்று முன்தினம் ஆட்ட நேரம் முடியும்போது 5 விக்கெட்டு கள் இழப்புக்கு 444 ஓட்டங் களைக் குவித்திருந்தது.

டிராட் சதம் கடந்து 141 ஓட்டங்களுடனும், பிரையர் அரைச்சதம் கடந்து 75 ஓட்டங் களுடனும் களத்தில் இருந்தனர்.

மீண்டும் நேற்று தனது இன்னிங்ஸைத் தொடர்ந்த இங்கிலாந்து அணி, சகல விக்கெட்டுகளையும் இழந்து 513 ஓட்டங்களைக் குவித்தது.




டிராட் 168 ஓட்டங்களைச் சேர்த்து ஆட்டமிழக்காது களத்தில் இருந்தார்.

பின்னர், 415 ஓட்டங்கள் பின்னிலையுடன் தனது இரண்டாவது இன்னிங்ஸைத் தொடங்கிய ஆஸ்திரேலிய அணி, முதல் இன்னிங்ஸைப் போலவே இரண்டாவது இன்னிங்ஸிலும் தடுமாறிக்கொண்டிருந்தது.

ஆரம்ப வீரர்களான ஹக்ஸ் 23 ஓட்டங்களுடனும், வோட்சன் 53 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்து சென்றனர். அவர்களைத் தொடந்து வந்த அணித்தலைவர் பொண்டிங் (20), ஹஸி (0), கிளார்க் (13), ஸ்மித் (38) ஆகியோரும் நிலைத்து நின்று ஆடத் தவறினர்.

இதனால், நேற்று ஆட்ட நேரம் முடியும்போது ஆஸ் திரேலிய அணி, 6 விக்கெட்டு கள் இழப்புக்கு 169 ஓட்டங் களை மட்டுமே பெற்று, இன்னிங்ஸ் தோல்வி நோக்கி நகர்ந்துகொண்டிருக்கிறது.

ஹடின் 11 ஓட்டங்களுடனும், ஜோன்சன் 6 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

இங்கிலாந்து அணி சார்பாக பந்துவீச்சில், பிரேஸன் 3 விக்கெட்டுகளையும், அன்டர் சன், ஸ்வான் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

நேற்றைய கள நிலவரப்படி ஆஸ்திரேலிய அணி 246 ஓட்டங்களால் பின்னிலையில் உள்ளது.

இன்னும் இரண்டு தினங்கள் ஆடவேண்டிய நிலை இருப்பதால் ஆஸ்திரேலிய அணியின் தோல்வி உறுதியாகியுள்ளது.

அதேவேளை, பேர்த் டெஸ்டில் வாங்கிய அடிக்கு இங்கிலாந்து அணி மெல்பேர்ண் களத்தில் வைத்து பதிலடி கொடுப்பதும் உறுதியாகிவிட்டது.

இன்று ஆட்டத்தின் நான்காம் நாள் ஆகும்.

## டர்பன் மோதலில் இந்தியா - தென்னாபிரிக்கா பலப்பரீட்சை

டர்பன், டிசெ. 29

தென்னாபிரிக்கா - இந்தியா இரண்டாவது டெஸ்ட் போட்டியில் நேற்றைய ஆட்ட முடிவில் தென்னாபிரிக்கா 3 விக்கெட்டுக்களை இழந்து 111 ஓட்டங்களைப்பெற்றது.

நான்காவது நாளான இன்று தென்னாபிரிக்காவும் இந்தியாவும் பலப்பரீட்சை யில் ஈடுபடப்போகின்றனர். யாருக்கு வெற்றி என்பது இன்று தெரியவரும்.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணி, தனது முதல் இனிங்ஸை 205 ஓட்டங்களுக்குள் முடித்துக்கொண்டது. பின்னர், தனது இனிங்ஸை ஆரம்பித்த தென்னாபிரிக் காவை, ஹர்பஜனின் சுழல் ஜாலம் பட்டையைக்கிளப்ப இந்தியா 131 ஓட்டங்களுக் குள் முடக்கியது.

இந்திய - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான 3 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடர் தென்னாபிரிக்காவில் நடைபெற்றுவருகிறது.

முன்னர் நடந்து முடிந்த முதல் போட்டியில் தென்னாபிரிக்க அணி அபார வெற்றிபெற்றிருந்தது.

இந்நிலையில், இரண்டாவது போட்டி டர்ப னில் கடந்த ஞாயிறன்று ஆரம்பமாகியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி, முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுகளையும் இழந்து 205 ஓட்டங்களையே சேர்த்தது.

பின்னர் தனது இனிங்ஸை ஆரம்பித்த தென்னாபிரிக்க அணி, இந்திய பந்துவீச்சைத் தாக்குப் பிடிக்க முடியாமல் 131 ஓட்டங்களுக்குள் சுருண்டது.

இதைத் தொடர்ந்து இந்தியா தனது இரண்டாவது இனிங்ஸை நேற்றுமுன்தினம் மாலை ஆரம்பித்தது.

ஆரம்ப வீரர்களாகக் களமிறங்கிய ஷேவாக் (32), முரளி விஜய் ஆகியோர் விரைவாகவே நடையைக் கட்டினர். அவர்களைத் தொடர்ந்து வந்த டிராவிட் (2), சச்சின் (6), ஆகியோரும் கைகொடுக்கத் தவறினர்.

இறுதியில் நேற்றுமுன்தினம் ஆட்ட நேரம் முடியும்போது இந்திய அணி, 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 92 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது.

புஜாரா 10 ஓட்டங்களுடனும், லக்ஷ்மன் 23 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

நேற்று மீண்டும் தனது இனிங்ஸைத் தொடர்ந்த இந்திய அணி, புஜாராவை வந்த வேகத்திலேயே இழந்தது.

அவரது ஆட்டமிழப்பைத் தொடர்ந்து களமிறங்கிய அணித்தலைவர் டோனி, மறுமுனையில் நின்று ஆடிய லக்ஷ்மனுடன் இணைந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். எனினும், டோனி 21 ஓட்டங்களைப் பெற்றவேளை ஆட்டமிழந்தார். பின்னர் வந்த ஹர்பஜனும் (4) ஏமாற்றிச் சென்றார். அவரைத் தொடர்ந்து வந்த சஹீர்கான் (27) ஓட்டங்களைச் சேர்த்து ஆட்டமிழந்தார். பின்னர் வந்த இஷாந்த் சர்மா ஓட்டமெதுவும் பெறாமல் 'பெவிலியன்' திரும்பினார். ஒருபுறம் விக்கெட்டுகள் சரிந்தாலும் மறுமுனையில் சிறப்பாக ஆடிக்கொண்டிருந்த லக்ஷ்மன் சதமடிக்கும் வாய்ப்பை 4 ஓட்டங்களால் தவறவிட்டார். அவர் 96 ஓட்டங்களைச் சேர்த்த நிலையில் ஆட்டமிழந்து சென்றார்.

இந்திய அணி தனது இரண்டாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 228 ஓட்டங்களைச் சேர்த்தது.

ஸ்ரீசாந்த் ஓட்டமெதுவும் பெறாமல் களத்தில் இருந்தார்.

தென்னாபிரிக்க அணி சார்பாக பந்துவீச்சில், மோர்கல், ட்சோபோ ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும், ஸ்ரைன் 2 விக்கெட்டுகளையும், கலிஸ், ஹரிஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பின்னர், 303 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கி நேற்று மாலை தனது ஆட்டத்தைத் தொடங்கிய தென்னாபிரிக்க அணி. நேற்றைய ஆட்டம் முடிவின்போது மூன்று விக்கெட்டுக்களை இழந்து 111 ஓட்டங்களைப் பெற்றது இதில் சிமித் (37), பீற்றர்சன் (26), அம்லா (16) ஓட்டங் களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்தனர். பந்து வீச்சில் இந்திய அணி வீரர் சிறிசாந் 2 விக்கெட்டுக்களையும், ஹர் பஜன்சிங் ஒரு விக்கெட் டுக்களையும் கைப்பற்றினர்.

கலிஸ், டிவிலியஸ் ஆகியோர் முறையே 12, 17 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் களத்தில் உள்ளனர். நான்காம் நாள் ஆட்டம் இன்றாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## யா/ சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்

### வருடாந்தப் பொதுக் கூட்ட அறிவித்தலும் புதிய அங்கத்தவர்களை இணைத்தலும்

மேற்படி கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 16.01.2011 (ஞாயிறு) முற்பகல் 9 மணிக்கு கல்லூரியில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. புதிய அங்கத்தவர்களாக இணைய விரும்பும் பழைய மாணவர்கள் இதற்குரிய படிவத்தினை கல்லூரி அதிபரிடம் பெற்று ஆயுள் சந்தாவாகிய ரூ.260/=ஐ செலுத்தி அங்கத்தவர்களாக இணைந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

திரு.தி.உ தயசூரியன் ஜே.பி.
கௌரவ தலைவர்.

திருமதி சி. புனிதவதி ஜே.பி.
கௌரவ செயலாளர்.


## யுனிலங்காஸ் பஞ்சாங்கக் கலண்டர்கள் தினத்தாள் கலண்டர்கள்

நாடெங்கிலும் இப்போது அமோக விற்பனையில்...

**யுனிலங்காஸ் நாட்காட்டி**

தவறு இல்லாத வாக்கியப் பஞ்சாங்கக் கணிப்பில்
தெளிவான அச்சமைப்புடன் அழகுதரும் தெய்வீக வண்ணப்படங்கள்.
பொது அறிவு. பொன்மொழிகள். தினசரி ராசிபலன்கள்.
சுபமுகூர்த்ததினங்கள் போன்ற விடயங்களுடன்
யுனிலங்காஸ் நாட்காட்டிகள்

நாடெங்கிலும் இப்போது அமோக விற்பனையில்...

**பஞ்சாங்கக் கலண்டர்கள்**

முற்றிலும் வர்ணமயமான அச்சமைப்புடன். இதுவரை எவரும்
இலங்கையில் அச்சிடாத வகையில் கலண்டரின் பின்பகுதியில்
சென்னை வடபழனி முருகு பாலமுருகன் அவர்கள் எழுதிய மாத
ஜோதிடத்துடன். ஒருவருட சுபமுகூர்த்த தினங்களும் இணைத்து
32 வடிவ பிள்ளையார். நயினை நாகபூஷணி அம்மன். கதிர்காமம்.
நல்லூர். யாழ் நூலகம் போன்ற காட்சியமைப்புக்களுடன் வெளிவந்துள்ளது.

பெயர் பார்த்து வாங்குவதற்கு அல்ல
தரம் பார்த்து வாங்குவதற்கே யுனிலங்காஸ் வெளியீடுகள்

**யுனிலங்காஸ் கொழும்பு - 0776258778**



## பணிநிலை வேண்டுகை

(மென்பொருள் கட்டுமானர்)

எமது நிறுவனத்தில் மென்பொருள் கட்டுமானர் பதவி வெற்றிடத்துக்கு விண்ணப்பிக்க விரும்புபவர்கள் கீழ் கண்ட மின்னஞ்சல் முகவரிக்கு தங்களது சுயவிவரக் கோவையை அனுப்பிவைக்கவும்.

★ முன் அனுபவம் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு :
CeyLabs Solutions (pvt.) Ltd.
204, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே. 021 222 1807, 0772517223
மின்னஞ்சல் : career@ceylabs.com
இணையம் : www.ceylabs.com

(108094)


## அறிவித்தல்

### மானிப்பாய் கிராம உப அலுவலகம்

ஆதனப் பெயர் மாற்றம்
வட்டாரம் 02
சுதுமலை வீதி,
ஆதன இல. 58/19

வட்டாரம் 2 சுதுமலை வீதி ஆதன இல. 58/19 இல் அமைந்துள்ள ஆதனமானது நவரட்ணம் இராஜேஸ்வரனும் பெண் வேதானந்தநாயகியும் என்பவர்களால் அறுதியாக விற்கப்பட்டு முருகர் கந்தையா கைம்பெண் பாக்கியம் என்பவரால் 4951 -2002.11.02ஆம் திகதி எழுதப்பட்ட உறுதிமூலம் குறித்த ஆதனமானது தமக்குச் சொந்தம் என்பதைத் தெரியப்படுத்தி, எமது ஆதனப் பதிவேட்டில் தமது பெயரை மாற்றம் செய்வதற்காக பெயர் மாற்றத்துக்கு விண்ணப்பித்துள்ளனர். இவ்வாதனத்துக்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்துமூலமாக 14 நாள் களுக்குள் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு எவராலும் எவ்வித உரிமையும் கோரப்படாதவிடத்து முருகர் கந்தையா கைம்பெண் பாக்கியம் எனும் பெயருக்கு மேற்குறித்த ஆதனம் பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

செயலாளர்,
வலி.தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.

(108113)

## ஆறாம் மாத நினைவலைகள்

அமரர் திருமதி

### கந்தசாமி மனோன்மணி



அன்போடு எம்மைக் காத்து
ஆதரவாய் எமக்கு இருந்து
ஆசைமொழி கூறி நின்றீர்!
ஆறு மாதங்கள் என்ன?
அறுபது ஆண்டுகள் ஆனாலும்
ஆறாதம்மா எங்கள் மனது

பாடசாலை வீதி,
கட்டுடை,
மானிப்பாய்.

ஆறாத்துயருடன்
குடும்பத்தினர்.
தெ.பே : 0213735640

(108129)

## இன்று மின் தடை

யாழ்ப்பாணம், டிசெ.29

கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய் ஆகிய பிரதேசங்களில் இன்று புதன் கிழமை காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 5 மணி வரை மின்சாரம் தடைப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

உயர் மின்னழுத்த மார்க்கங்களில் பராமரிப்பு வேலைகள் நடைபெறுவதால் மேற்குறித்த நேரத்தில் மின்விநியோகம் தடைப்படும் என யாழ். பிரதேச மின் பொறியியலாளர் தெரிவித்துள்ளார்.

(த-204-313)

## கியூபா விடுதலை தினம்

அச்சுவேலி, டிசெ.29

ஏகாதிபத்திய எதிர்ப்புத் தினமும் கியூபா விடுதலை தினமும் எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

கே.ஏ.சீவரட்ணம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், புதிய ஜனநாயக மார்க்ஷிச லெனின் கட்சியின் பொதுச் செயலாளர் சி.க. செந் தில்வேல், எஸ்.சிவபாலன்,ரி.வி. கிருஷ்ண சாமி, மு.தியாகராசா, க.தணிகாசலம் உட்பட பலர் உரையாற்றவுள்ளனர்.

(204-11)

## 4 கிலோ கஞ்சாவுடன் விமானப் படையின் இரு சிப்பாய்கள் கைது

கொழும்பு, டிசெ.29

நீண்ட காலமாக கஞ்சா வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த இரு விமானப் படைச் சிப்பாய்கள் 4 கிலோ கஞ்சாவுடன் கல்கமுவ, ஹொஜராகம பிரதேசத்தில் கைது செய்யப்பட்டதாக கல்கமுவ பொலிஸார் தெரிவித்தனர். சந்தேக நபர்கள் காலி கஹந்து வத்த மற்றும் ஒக்கம்பிட்டிய பிரதேச வாசிகள் எனத் தெரிய வருகிறது.


## உதவிப் பணியாளர்கள் தேவை

சாந்தமும் சுறுசுறுப்புமுள்ள 35 வயதுக்குட்பட்ட ஆண்/ பெண் இருபாலாரும் சுயவிபரக் கோவையுடன் விண்ணப்பிக்கவும்.
futurejob@kgrplanka.lk

## வீடு வாடகைக்குத் தேவை

கணினிக் கல்வி நிறுவனத்திற்கு சகல வசதிகளுடனும் கூடிய வீடு உடன் வாடகைக்குத் தேவை. பிரதான வீதிகளுடன் இருப்பது விரும்பத்தக்கது.
தொடர்பு: 0776393747

## வீடு வாடகைக்கு

மூன்று அறைகள் விசாலமான வரவேற்பறை மற்றும் 25 - 30 வாகனங்கள் தரிப்பிட வசதி கொண்ட வீடு வாடகைக்குண்டு. (அலுவலக பாவனைக்கு உகந்தது)
283/2, பலாலி வீதி, (கெற்றப்போல் சந்தி)
கந்தர்மடம், யாழ்ப்பாணம், தொ.பே.: 0777769260

## பணிப்பெண் தேவை

யாழ்ப்பாண வீட்டில் தங்கியிருந்து வீட்டுவேலை செய்யக்கூடிய 30 வயதுக்கு மேற்பட்ட பணிப்பெண் தேவை. தனிப்பட்டவர்கள் விரும்பத்தக்கது. தகுந்த சம்பளம் வழங்கப்படும். முழுவிபரம், தொடர்பு டெலிபோன் நம்பருடன் விண்ணப்பிக்கவும்.
விளம்பர இல. 4102, C/o. உதயன்,
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## AR APPURAJEN CABS

உள்ளூர் - VAN சேவை
1) 1 கி.மீ. = ரூபா 40.00+நாள் கட்டணம் ரூபா 300 வெளியூர்
2) 1 கி.மீ = ரூபா 30.00 + நாள் கட்டணம் ரூபா 500.00
தொடர்புகளுக்கு : 0212220242, 0213206695, 0773114803, 0777320037

## இறைச்சிக் கோழி விற்பனை

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும், மிகக் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம், சுத்தம் செய்யப்பட்டது.
[illegible]
விஜயகுமார்
தளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.



## மின் இணைப்பாளர் பதவி (ELECTRICIAN)

உள்ளக மின் கம்பி இணைப்பாளர்கள் (ELECTRICIAN 230V & 440V 3Phase - இலங்கை மின்சார சபையின் சட்ட திட்டங்களுக்கமைவாக வேலைகளை பூர்த்திசெய்பவர்களாக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் சுயமாகத் தயாரிக்கப்பட்டு தொழில் நுட்ப சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்பட்டு 15.01.2011 ஆம் திகதிக்கு முன்னர் நா. கந்தையா. ஓய்வு பெற்ற மின் இணைப்பாளர், மருதங்குளம் வீதி, மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

N. KANDIAH. Rtd. Govt. ELECTRICIAN. MARUTHAM KULAM ROAD, MADDUVIL SOUTH, CHAVAKACHCHERI என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

குறிப்பு:- தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த திருமணமாகாத (ஆண்கள்) மட்டும் விண்ணப்பம் செய்யவும். (108130)


## 45 ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர் பாலசுந்தரம் விக்கினேஸ்வரன்



தோற்றம் 16.07.1981 — மறைவு 15.11.2010

இறைவனே உனக்கு இரக்கமேயில்லையா?
காலனே உனக்கு கருணையேயில்லையா?
ஆசைக் கொருவனாய் அவனியிலே வந்துதித்த
பாச நண்பனை பாதியிலேன் கொண்டு சென்றாய்?

நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

நண்பர்கள்.

## மரண அறிவித்தல்கள்



### ஏரம்பு நாகேசு

புங்குடுதீவு, 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் தற்போது இந்தியாவில் வசித்து வந்தவருமான ஏரம்பு நாகேசு 27.12.2010 திங்கட் கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஏரம்பு- இராசம்மா தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - நாகம்மா தம்பதியரின் மருமகனும் சற்குணத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு, யோகம்மா, கண்மணி, பார்வதி, மகாலக்ஷ்மி, குருமூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும் தெய்வநாயகி (இந்தியா) தம்பையா, காலஞ்சென்றவர்களான மனோன்மணி, ஐயாத்துரை, ராமச்சந்திரன், மாரிமுத்து ஆகியோரின் மைத்துனரும் பாலாம்பிகை, நகுலாம்பிகை(கனடா), விமலாம்பிகை(இந்தியா) சிவகுமார்(ஜேர்மனி), தமிழ்ச் செல்வி, பிரபாகரன், பாஸ்கரன்(கனடா), சைலஜா ஆகியோரின் பாசமிகு தந்தையும் சண்முகராசா, தனபால், ஜெகதீஸ்வரி, ஜின்னா, அனிற்றா, மனோகரி ஆகியோரின் மாமனாரும் லக்சிகா, திவாகரன், றெபேக்கா, சிவஜனனி, கீர்த்திகா, சுமையா, நவீத், சகானா, பதுமன், நித்திலா, சங்கமன், பிரதீப்,பிரவீன் ஏசாக் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் நேற்று (28.12.2010) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருச்சி ஓயாமாரி மயானத்தில் மு.ப. 10 மணியளவில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
விமலாம்பிகை நாகேசு
(இந்தியா)

திருச்சி , இந்தியா

(108118)

### ஐயாத்துரை சின்னத்தம்பி



சூளானை, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும்,அம்பனை, சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை சின்னத் தம்பி (24.12. 2010) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - கண்மணி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராசா -ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், இலங்காதேவியின் பாசமிகு கணவரும், புவனேஸ்வரி (கனடா), ரவீந்திரன் (கொலண்ட்), தயாபரன் (லண்டன்), தயாவதி (சுவிஸ்), கருணாகரன் (கனடா) காலஞ்சென்ற கோமதி ஆகியோரின் அன்புத் தந்தையும், சத்தியகுமார், ஜெயரஞ்சனா, ஜீவா, நவரத்தினராசா, உஷாந்தி ஆகியோரின் அன்பு மாமனாரும். இரத்தினம், இராசரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், திவ்வியன், கிருஷாந்தன், கீர்த்தனா, விதுரன், சாதுரன், தஜீக்சன், யஜீபன், அபிநயா, ரவீனா, ரசிகா, கவிசன், கிருஷா ஆகியோரின் ஆசைப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (29.12.2010) புதன்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மாயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அம்பனை,
சுன்னாகம் மேற்கு,
சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(108131)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்

**மாணவர்கள் கவனத்திற்கு:**

பண்டிகைகால விடுமுறை முடிவுற்று கல்விநெறிகள் யாவும் மீண்டும் எதிர்வரும் 02/01/2011 முதல் ஆரம்பமாகின்றன.

பின்வரும் கற்கைநெறிகளிற்கான புதிய அனுமதிகள் 03/01/2011 முதல் மேற்கொள்ளப்படுகின்றன

**Faculty of Medical Sciences**

- Certified Medical Assistants
- HND in Pharmacy
- HND in Bio Medical Sciences

**Faculty of Business & IT**

- City and Guilds English Programmes
- KU's ESOL L1,L2,L3(All Levels)
- KU's Spoken English
- English for School Students
- Diploma in E-Commerce

City & Guilds Approved Centre

**Knowledge Universe®**
Malaysian College of Business and IT
Tel: 0777302882 | # 75,Temple Road,Jaffna | www.kugroup.info
இல 75,கோவில் வீதி,யாழ்ப்பாணம்.(லாவா வைத்தியசாலை மேல்மாடி)

## கண்ணீர் அஞ்சலி

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் முகாமைத்துவ உதவியாளராகக் கடமையாற்றும் திரு. கு.சுரேந்திரராஜா அவர்களின் பாசமிகு தாய்

திருமதி
**குமாரசாமி பாலாம்பிகை அம்மா**
(ஓய்வுபெற்ற ஆசிரியை)

அவர்களின் திடீர் மறைவினால் துயரில் மூழ்கி இருக்கும் அவர்தம் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலக நலன்புரி சங்கம்,
தென்மராட்சி, சாவகச்சேரி.

பிரதேச செயலரும்,
அனைத்து உத்தியோகத்தர்களும்.

## வீடும் காணியும் விற்பனைக்கு

அச்சுவேலி தெற்கு, காளி கோயிலுக்கு அருகில் ஆறு பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு: 0750481186

## மரண அறிவித்தல்



**திருமதி வேலாயுதம்பிள்ளை தவமணி**

ஏழாலை தெற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட வேலாயுதம்பிள்ளை தவமணி நேற்று (28.12.2010) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி - தெய்வானை தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும் காலஞ்சென்ற வேலாயுதம்பிள்ளையின் அன்பு மனைவியும் கண்மணி, பூமணி, கனகமணி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சுசிலாதேவி, ராகினிதேவி (கனடா), வாமதேவன், ரதினிதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும் நவேந்திரராஜா, சோதிநாதன் (ஜேர்மனி), ஜெயக்குமார், கண்ணம்மா ஆகியோரின் பாசமிகு மாமியாரும் சுஜீபன், திலீபன், சனந்தன், லகிந்தன், ஜீவிதன், சுதாயினி (ஜேர்மனி), நிஜந்தினி (கனடா), ஸ்ரீநிவாசன் (கனடா), லக்ஷன், டெஸ்மன், விதுஷா, கோபிகன், மதுஷாயினி, அருள்வரதன், அருட்கண்ணன், மரீனா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் நிலக்ஷனா (ஜேர்மனி), கீர்த்திகா (ஜேர்மனி), திரீசிகா (ஜேர்மனி) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
0711467857,
0779912473

தகவல்:
குடும்பத்தினர்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



15.12.2010 அன்று கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட "**கலாபூஷணம்**" அரச விருது பெற்ற இசைத்துறை விரிவுரையாளர் லயஞான வாரிதி **திரு.சி.மகேந்திரன்** அவர்கள் மேலும் பல விருதுகள் பெற்று நலமுடன் வாழ்ந்து கலைச்சேவை செய்ய இறைவனை வேண்டி அவரை வாழ்த்துகின்றோம்.

Dr.V.ஜெயராஜன் நாட்டியக்கலைமணி
திருமதி ஜனீந்திரா ஜெயராஜன்
கொழும்பு.

சிங்கம்ஸ் பார்மசி,
கோண்டாவில்.

## வேலை ஆள்கள் தேவை

1. சிட்டை எழுதுநர்
2. கணக்குப் பதிவுநர்

ஆங்கிலம், சிங்களம் அறிவுள்ளவர்கள் விரும்பத்தக்கது. நேரில் வரவும்.

**யாழ்ப்பாண மின்னகம்,**
*94(6), ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.*

HNB ASSURANCE
For a brighter future

## HNB ASSURANCE PLC

### TENDER FOR SALE OF USED VEHICLE

Offers are invited for the sale of following vehicle used by our company.

***Vehicle No NP GX 5609 & Model Vagon-R VXI***

Tender closing at 10.30 a.m. on 7th January 2011.

Vehicle can be inspected during office hours up to 29th December 2010 at following address.

HNB Assurance PLC
No.62/64 Stanley Road
Jaffna

Manager Jaffna Branch

## AWARENESS PROGRAMME




**Let Sri Lanka Telecom help you to make your dream a reality...**

The nation's undisputed most trusted name in the communications arena, ***Sri Lanka Telecom now offers you an opportunity*** to obtain a prestigious and internationally recognised Bachelors Degree(Engineering) in Telecommunication /Mobile Communications/ Electronics at a cost effective price.

**We Guarantee...**

- The most professionally qualified and internationally trained ***lecturers with hands-on experience and unmatched field expertise***
- The ideal student friendly learning environment supplemented with the latest educational resources ***in state-of-the-art class rooms specially designed to train Telecom staff***
- ***The best in-plant training facilities in Sri Lanka*** that offers the most sophisticated and ultra modern high tech telecommunication equipment
- An internationally recognised degree on par with other highly acclaimed universities worldwide at an attractive ***low investment ( Investment for Tution fee including 3rd year studies in UK is less than Rs. 2 Million)***

*Entrance Requirement :*
Two Passes at the Advance Level Examination in the math's stream

Interview will be conducted after the seminar

Date / Venue :To be Informed soon

For more details contact 0715364938 / 0112951571/ btechnd@slt.com.lk

**Commencing soon** **Registration now on**

edexcel BTEC HND
www.training.slt.lk

## மரண அறிவித்தல்

### திருமதி சோதிலிங்கம் மனோன்மணி



யாழ்ப்பாணம், சிவலிங்கப் புளியடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சோதிலிங்கம் மனோன்மணி (26.12.2010) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் சோதிலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சிவசம்பு - தெய்வானை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற பொன்னையா - செல்லமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான பாக்கியம், மகேஸ்வரி, கனகரெத்தினம், சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், கமலாதேவி, துரைசிங்கம், சரோஜினிதேவி, இரெத்தினசிங்கம், கைலைநாதன் ஆகியோரின் அன்புத் தாயும், இராசரெத்தினம், கமலாதேவி, ஜமுனா, சாரதா ஆகியோரின் அன்பு மாமியும், சுபாஜினி, இராஜினி, துஷ்யந்தன், துஷ்யந்தி, வேணுகா, தேணுகா, ருத்தியா, ரிசானா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் நாளை (30.12.2010) வியாழக்கிழமை மு.ப 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

462, கே. கே. எஸ். ரோட்,
சிவலிங்கப்புளியடி,
யாழ்ப்பாணம்.

(108143)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE COLLEGE OF CHEMISTRY
பழம் வீதி — கந்தர்மடம்
2013 A/L 2013 A/L
2013 A/L
இரசாயனவியல்
தமிழ்மொழிமூலம்
Mon, Sat, Sun } 3-4 pm
English Medium
Sat, Sun } 6.15- 7.30am
பௌதிகவியல்
Mon - 6.15- 7.30am
Wed - 4.30 - 6.00pm
Thu - 4.45 - 6.00 pm
DIAS
Bsc (Hons) Spl in Chem
N.Kabilan Bsc

# குடாநாட்டில் நேற்று நாள் முழுவதும் நீடித்த மழையால் இயல்புநிலை பாதிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.29

குடாநாட்டில் நேற்றுக்காலை முதல் தொடர்ச்சியாகப் பெய்த மழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

தொடர்ச்சியாகப் பெய்த மழை காரணமாகக் குடாநாட்டின் தாழ்ந்த நிலப் பிரதேசங்கள் யாவும் வெள்ளத்தில் மூழ்கின. இதனால் பொதுமக்களின் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டது. குறிப்பாக யாழ். நகரின் பிரதான வீதிகள் பலவற்றிலும் வெள்ளம் தேங்கி நின்றபடியால் அந்த வீதிகள் வெள்ளக் காடாய்க் காட்சியளித்தன.

தொடர்ச்சியாகப் பெய்த மழை காரணமாக நகருக்குப் பல்வேறு வேலைகளுக்காக வந்த பொதுமக்களும் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கினர். கடந்த இரண்டு வாரகாலமாக மழை பெய்யாமல் இருந்தமையினால் தாழ் நிலங்களிலிருந்த வெள்ளம் சற்று வற்றியிருந்தது. இருப்பினும் நேற்று அதிகாலை முதல் தொடர்ச்சியாகப் பெய்த மழையினால் மீண்டும் அந்தப் பகுதிகளில் வெள்ளம் தேங்கியுள்ளது.

நல்லூர் பின்பக்க கோயில் வீதி, வைமன் வீதி, நல்லூர் சிவன் வீதி போன்ற வீதிகளும் வெள்ளம் தேங்கி நின்றதால் பொதுமக்கள் பலத்த சிரமங்களை எதிர்கொண்டனர்.

யாழ். முற்றவெளிப் பகுதியில் தேங்கியுள்ள வெள்ளம் காரணமாகத் தனியார் பஸ்கள் சேவையை மேற்கொள்வதில் பெரும் இடர்களை எதிர்கொண்டனர். (ஒ-ஐ-15)

கொழும்பு விலையைவிட குறைவான விலையில்..
DSI, BATA பாடசாலை மாணவர்களுக்கான பாத அணிகளை பெற்றுக்கொள்ளலாம்
கபிலா பாதணியகம்
13, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
கபிலா காலணியகம்
24, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



# சுயசரிதை நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், டிசெ.29

அதிவண கலாநிதி எஸ்.ஜெபநேசன் அடிகளாரின் ''தொடரும் ஆன்மீக கல்வி சார் பயணம்'' எனும் சுயசரிதை நூல் வெளியீட்டு விழா நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக நூல்நிலைய கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

கலைத்தூது அழகியற் கல்லூரி இயக்குநர் வணபிதா மரிய சேவியர் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் ஆசிரியுரையை இலங்கை திருச்சபையின் யாழ்.குரு முதல்வர் வண எஸ்.பி.நேசகுமாரும் வாழ்த்துரையை யாழ்.பல்கழைக்கழக தமிழ்த்துறைப் பேராசிரியர் எஸ்.சிவலிங்க ராஜாவும் வெளியீட்டுரையை வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸும் நிகழ்த்துவர்.

நூலின் முதல் பிரதியை அவுஸ்திரேலிய விக்ரோரியாப் பல்கலைக்கழக தாவர மருத்துவவியல் பேராசிரியர் நித்தி கனகரத்தினம் பெறுவார்.

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன் நயப்புரை நிகழ்த்துவார். இறுதியில் நூலாசிரியர் கலாநிதி எஸ்.ஜெபநேசன் அடிகள் ஏற்புரை நிகழ்த்துவார். (ஒ-ஐ)

MyWay English ஆங்கில பயிற்சி
01.01.2010 சனி புதுவருட விடுமுறை
சனி, ஞாயிறு 3 மாத புதிய பிரிவு
ஆரம்பம் : 02.01.2011 முடிவு : 31.03.2011
இலக்கண கற்றல், எழுத்துப்பயிற்சி இன்றி ஒரு ஆங்கில சொல்கூட தெரியாதவர்களும் 3 மாதத்தில் ஆங்கிலத்தில் பேச முடியும்
பயிற்சியில் சேர கடைசி சந்தர்ப்பம்
MyWay 077 33 63 456
182, Stanley Rd, Jaffna

யாழ் நகரில் மிகக்குறைந்த கட்டணங்களில்
BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS வழங்கும் சர்வதேச கற்கை நெறிகள்
To Study in UK(London), Canada, Australia, Newzealand Hot.... Hot courses for easy Student visa are open now
100% நல்ல சம்பளம்
FOUNDATION DIPLOMA IN HOSPITALITY (HOTEL) MANAGEMENT
FOUNDATION DIPLOMA IN NURSING (HEALTH & SOCIAL CARE)
FOUNDATION DIPLOMA IN MANAGEMENT
எங்கு சென்றாலும் நல்ல வேலை வாய்ப்பு
இக் கற்கை நெறிகளின் Diploma & Degree பட்டப்படிப்பை 100% விசா உத்தரவாதத்துடன் நீங்கள் குறிப்பிட்ட நாடுகளில் கற்கலாம்.
உங்களுக்கான விசா உத்தரவாதத்தினை இத்துறையில் பல வருட அனுபவமுள்ள எமது சட்டத்தரணிகள் உறுதிசெய்வார்கள்.
Qualification: G.C.E.[O/L] Plus IELTS 5.5
After G.C.E. A/L or O/L → 6 Months / 3 Months Foundation Diploma @ BCHS → 2½ Years Diploma & Degree
குறைந்தது 3 வருடத்தில் நீங்கள் ஒரு பட்டதாரி தகுதியான வேலையுடன்
IELTS (International English Language Testing System)
(Students Visa மூலமாக வெளிநாடு செல்பவர்களுக்கானது) 2 1/2 Months
We Gurantee Minimum 6.5 Band upwards
Diploma in English [2 Months] Advanced Diploma In English [2 Months]
100 % பயிற்சி
ஒரு தொழில் தேடுவதாயினும் சரி, உயர்கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைக்கேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புகளும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர், மாணவர்களுக்கென வகுப்புகள் உண்டு
100 % வெற்றி
புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடனும் நடாத்தப்படுகிறது.
பரீட்சையில் நல்ல பெறுபேறுகள் 100 % உறுதி.
Quick Learning Course
திங்கள் முதல் வெள்ளிவரை வகுப்புகள் நடைபெறும் & Full time special
Spoken English with Grammar
Duration 1 Month Rs.2000.00
உரையாடட் பயிற்சிகள், பேச்சுப் பயிற்சிகள், உச்சரிப்புப் பயிற்சிகள், இலக்கணப் பயிற்சிகள் போன்றன உள்ளடங்களாக, ஆங்கில அறிவு இல்லாதவர்களும் மிக இலகுவாகக் கற்கும் விதத்தில் அமைந்த பாடத்திட்டம்
A/L பரீட்சை எழுதிய மாணவர்கள் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும்
மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.
Second Floor, No.15, Sirampiyadi Lane (Off Stanley Road)
(ஆரியகுளச்சந்திக்கு அருகாமையில்) (கொசி Hotel மேலே)
Tel :021 2224550 HotLines: 0777222422/ 0777585913 0714299935
புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன
திகதி 16-01-2011 காலை : 10.00 மணி
18-01-2011 மாலை : 03.00 மணி

VCM Institute
Near the Manogara Junction, K.K.S Road, Jaffna.
A/L-2013
இணைந்த கணிதம்
B.ரவீந்திரன் B.Sc.
ஆரம்பம் : 01.01.2011 சனி நண்பகல் 12.00 மணி

A/L 2013
கலை, வர்த்தக, கணித, உயிரியல் பிரிவுகள்
ஆரம்பம்:- 08.01.2011 சனி 8.00 மணி
புதிய அனுமதிகளை அலுவலகத்தில் பெறவும்
NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

Personal Class(கணினி)
★ கற்கைநெறிகள் யாவும் உங்கள் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்.
★ MS Office 2007, DTP, Internet and E-mail, Web Design, Graphic Design.
★ பயிற்சியின் பின் சான்றிதழ்கள் வழங்கப்படும்.
★ குறிப்பு :- கணினி இல்லாதவர்களுக்கு எனது Laptop மூலமாகப் பயிற்சியளிக்கப்படும்.
★ ஆசிரியர் - KRC
★ T.P : 0779672038
நல்லூர்

பொருளியற் கல்லூரி
நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
K.K.S றோட், இணுவில்.
[இரு இடத்திலும்]
A/L-2013
கலை, வர்த்தகப்பிரிவு
ஜனவரி 2இல்
காலை 8 மணி
* உங்கள் அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.

யாழ் மாவட்டத்தில் முதன் முறையாக
சுயதொழில் வாய்ப்பு கற்கைநெறி
NOKIA vodafone LG SAMSUNG
Diploma in Mobile Phone Flashing & Unlocking
(Nokia, Samsung, Ericsson, LG & China Mobiles)
சகலவகையான கைத்தொலை பேசிகளையும் Flashing & Unlocking செய்தல்
Mobile Phone Repairing Shop ... Phone Shop
Course Fees :- Rs.20000/= Only
உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்
மேலதிக விபரங்களுக்கு :-
UNI - ICT Campus (Pvt) Ltd
No 83, Palaly Road, Kantharmadam, Jaffna
T.P. - 021 321 6433 / 0777 110 862
Web :- www.unictcampus.com

Quick Learning Course
Spoken English with Grammar
Duration 1 Month Rs.2000.00
உரையாடட் பயிற்சிகள், பேச்சுப் பயிற்சிகள், உச்சரிப்புப் பயிற்சிகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைய Audio & Video visuals மூலமாக நடாத்தப்படுகிறது
A/L பரீட்சை எழுதிய மாணவர்கள் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும்
திங்கள் முதல் வெள்ளிவரை வகுப்புகள் நடைபெறும் & Full time special
10-01-2011
Batch 9 : 09.00 AM - 01.00 PM
Batch 10 : 01.30 PM - 05.30 PM
BRITISH COLLEGE OF HIGHER STUDIES
No.15 2/1, Sirambiyadi Lane, Off Stanley Road, Jaffna. ஆரியகுளத்துச் சந்திக்கருகில் கொசி Hotel மேல்
Tel :021 2224550 HotLines: 0777222422/ 0777585913/0714299935

## மரண அறிவித்தல்

### திருமதி திரேஸா செல்வம் அன்ரனி

யாழ்ப்பாணம், சப்பல் வீதியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி திரேஸா செல்வம் அன்ரனி நேற்று (28.12.2010) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

48, சப்பல் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல் :
மாலினி யோசேப்

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.12.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org